பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 06 வியாழக்கிழமை (22.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 026



14
பேச்சில் மூன்றாவது நடுநிலையாளர் பற்றி கூட்டமைப்பு சிந்திக்கிறது





நெடுமாறன, வை.கோ கைது



பணிந்தது பங்களாதேஷ் 25

## நாட்டில் உள்ள இராணுவ முகாம்களை எக்காரணம் கொண்டும் அகற்ற முடியாது

### ஜனாதிபதி திட்டவட்டம்

கொழும்பு, டிசெ.22

நாட்டிலுள்ள இராணுவ முகாம்களை ஒரு போதும் அகற்றமுடியாது. தேசிய பாதுகாப்புக்காக மாவட்டங்கள் தோறும் இராணுவ முகாம்கள் இருக்கவேண்டும். அவற்றை எக்காரணம் கொண்டும் அகற்றமுடியாது.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று வரவு - செலவுத்திட்ட விவாதங்களுக்குப் பதிலளித்து இறுதி உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இன்றைய விவாதத்தில் உறுப்பினர்கள் நிதி அமைச்சு தொடர்பாகப் பல கேள்விகளை முன்வைத்தனர். அது தொடர்பில்

பக் 27

## அச்சுறுத்தி தீர்வைத் திணிக்க ஜனாதிபதி மஹிந்த முயற்சி

### அப்படிப்பட்ட எந்த ஒரு தீர்வையும் கூட்டமைப்பு ஏற்காது; மாவை சீற்றம்



கொழும்பு, டிசெம்பர் 22

தமிழர்களை அச்சுறுத்தி ஒரு தீர்வுத் திட்டத்தை திணிக்க ஜனாதிபதி முயல்கின்றார் என்று குற்றஞ் சாட்டி உள்ளது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. பலவந்தமாகத் திணிக்கப் படும் எந்த ஒரு தீர்வுத்திட்டத்தையும் நாம் ஏற்கப்போவதும் இல்லை, ஜனாதிபதியின் அச்சுறுத்தலுக்கு அடி பணியப் போவதுமில்லை எனக் கூட்டமைப்பின் செயலாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று நாடாளுமன்றத்தில் சீறினார்.

வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் இறுதி நாள் விவாதமாக நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதம் நேற்று நடைபெற்ற வேளையிலேயே மாவை சேனாதிராசா இதனை பகிரங்கமாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பௌத்த மதம், இராணுவ ஆதிக்கம், ஒற்றை ஆட்சி என்ற மமதையில் தொடர்ந்தும் எம்மை அடிமையாக வைத்திருக்க முடியாது.நாம் இந்த நாட்டை ஆளக் கேட்கவில்லை. எமது பூமி, எமது தாயகம் என்ற உணர்வுடன் எம்மை நாமே ஆளும் அதிகாரத்தையும் உரிமையையும்தான் கேட்கின்றோம்.

இந்த அரசுடன் பேசி எமது அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கே

பக் 27

## 98 மேலதிக வாக்குகளால் பட்ஜெட் நிறைவேற்றம்

### கூட்டமைப்பு, ஐ.தே.க., ஜே.வி.பி. எதிராக வாக்களிப்பு

கொழும்பு, டிசெ.22

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலத்தின் முதலாவது வரவு-செலவுத்திட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் 98 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஜோன் அமரதுங்கவின் கோரிக்கையின்பேரில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது ஆதரவாக 158 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் கிடைத்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. உறுப்பினர்கள் இதற்கு எதிராக வாக்களித்தனர். (ஙு-சி)

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ.22

கடத்தல், சட்டவிரோத கைதுகள் மற்றும் கொலைகள் என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போரட்ட இயக்கம் கொழும்பில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

பொரளை கெம்பல் மைதானத்தில் இருந்து நேற்று மாலை ஆரம்பமான இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணி, விஹாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் நிறைவுபெற்றது.

காணாமற்போனோரின் குடும்ப அங்கத்தவர்கள் அரசியல் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

பேரணியின் முடிவில் கண்டனக் கூட்டமொன்றும் இடம்பெற்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் காணாமற்போன லலித் குமார, குகன் மற்றும் கொழும்பில் கடத்தப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட உள்ளிட்டோரை கண்டுபிடித்துத் தருமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஙு-சி)

## 2, 3 வருடங்களுக்காவது கூட்டமைப்பு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### அமைச்சர் பஸில் கோருகிறார்

கொழும்பு, டிசெ.22

மூன்று தசாப்த காலப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் அரசின் முயற்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறைந்தபட்சம் இரண்டு அல்லது மூன்று வருடங்களாவது ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களைச் சந்தித்தபோதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்த அமைச்சர், புலிகள் இயக்கத்தினர் தாமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூறினர் ஆனால், தமிழ்க் கூட்டமைப்பினரோ தாமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் போல் நடந்துகொள்கின்றனரென்றும் விசனம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசு கூட்டமைப்புடன் நடத்தும் பேச்சு புலி

பக் 27

## மண்டைதீவில் கடற்படையினர் ஏவிய எறிகணையே வேலணையில் வீழ்ந்தது

### தமிழ் மக்களின் உயிரோடு விளையாடுகிறதா படைத்தரப்பு?



யாழ்ப்பாணம்,டிசெ.22

மண்டைதீவுப் பகுதி கடற்படைத்தளத்தில் இருந்து ஏவப்பட்ட எறிகணையே வேலணைப் பகுதியில் நேற்று மாலை வீழ்ந்து வெடித்துள்ளது. இந்தத் தகவலை நேற்றுக் காலை எறிகணை வீழ்ந்த வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினரும், கடற்படையினரும் இந்த உண்மையை ஒத்துக் கொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை வேலணை 7ஆம் வட்டாரத்தில் உள்ள வீடொன்றில் மர்மப் பொருள் ஒன்று வீழ்ந்ததில் பெரிய குழி ஒன்று உருவாகியிருந்தது. இது குறித்து ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு

பக் 26

## அமைச்சுப் பதவியைப் பெற்று பின்னால் நிற்பதா ஒத்துழைப்பு?

### பஸிலுக்கு சம்பந்தன் சாட்டை

கொழும்பு, டிசெ.22

தீர்வுப்பேச்சு உட்பட்ட பல விடயங்களில் அரசுடன் ஒத்துழைத்தே செயற்பட்டு வருகிறோம். இப்போது அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கூறும் ஒத்துழைப்பு எந்த அடிப்படையைக் கொண்டது? பைல்களைத் தூக்கிக்கொண்டு அமைச்சுகளைப் பெற்று உங்கள் பின்னால் நிற்பதையா எதிர்பார்க்கிறீர்கள்?

- இவ்வாறு நேற்றுக் கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

அரசுடன் ஒத்துழைத்துச் செயற்படுமாறு அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விடுத்திருக்கும் வேண்டுகோள் குறித்துக் கேட்டபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீர்வுப் பேச்சின் போது, நாடாளுமன்

பக் 26

## புதுக்குடியிருப்பில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, டிசெ.22

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்புப் பகுதியில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழிகளுக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் பெருமளவு ஆயுதங்களை வவுனியாப் பொலிஸார் நேற்றுக் கண்டுபிடித்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் ரோந்துப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இந்த ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மீட்கப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

பக் 26

## 7 வயதுச் சிறுமி மீது வன்புணர்வு; கொடிகாமத்தில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ.22

கொடிகாமம் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி இரவு வீடு புகுந்து 7 வயதுச் சிறுமியை தூக்கிச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவத்தில், அதேயிடத்தைச் சேர்ந்த பதின்ம வயது இளைஞர் ஒருவர் நேற்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த 19 ஆம் திகதி கொடிகாமம் பகுதியில் அமைந்துள்ள குடிசை வீடொன்றில் உறங்கிக்கொண்டிருந்த சிறுமி ஒருவர், இரவு வேளை வீட்டினுள் புகுந்த இனந்தெரி

பக் 27

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளது.

# தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறை நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் தவிர்ப்பு

## நெருக்கடி ஆய்வுக்கான அனைத்துலகக் குழு தெரிவிப்பு

பிரசல்ஸ், டிசெ.22

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தினரால் தமிழ்ப் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்முறைகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை யில் தவிர்க்கப்பட்டுள்ளதாக 'நெருக்கடி ஆய்வுக்கான அனைத்துலகக் குழு' தெரி வித்துள்ளது.

இலங்கையின் வடக்கு-கிழக்கில் வாழும் பெண்களின் பாதுகாப்பின்மை என்ற தலைப்பில் அந்த குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழ் கின்ற இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பெண்கள், நீண்ட காலமாகத் தொடரப்பட்ட யுத்தம் நிறைவ டைந்த பின்னர் நிலவும் தற்போதைய சூழலிலும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

அதேவேளை இலங்கை அரசு வடக்கு கிழக்கு வாழ் பெண்கள் எதிர்நோக்கும் பாதுகாப்புப் பிரச்சினைகள் மற்றும் அதி கரித்து வரும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றை தட்டிக்கழித்து வருகின்றது.

''யுத்தம் நிறைவடைந்து இரு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், வடக்கு கிழக்கில் வாழும் பெண்கள் அரச அச் சுறுத்தல்கள் மற் றும் தமது சொந்த சமூகத்திற்குள்ளிருந்து எழும் அச் சுறுத்தல்கள் போன் றவற்றிற்கு முகங்கொடுத்து வாழ் கின்றனர்'' என 'நெருக்கடி ஆய்வுக்கான அனைத்துலக குழு'வின் மூத்த ஆய்வாளரும், இலங்கைத் திட்ட இயக்குநருமான அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

''இங்கு இடம்பெற்ற யுத்தமானது சமூகக் கட்டமைப்பை மிகக் கடுமையாக சிதை வடையச் செய் துள்ளதுடன், பல்வேறு மட்டங்களிலும் வாழும் பெண் கள் மற்றும் இளம் பெண்பிள்ளைகளை நலிவற் றவர் களாக ஆக்கி யுள்ளது. ஆகவே சிதைவடைந்துள்ள சமூகக் கட்டமைப்பில் வாழும் தமிழ்ப் பெண்களின் நிலையை உயர்த்தி அவர்களைப் பாது காப்பதற்கான உறுதியான, உடனடியான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டிய தேவையுள்ளது'' என அலன் கீனன் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முப்பது ஆண்டுகளாகத் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தமானது வடக்கு கிழக்கில் பல பத்தாயிரக்கணக்கான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாகக் காரணமாக இருந்துள்ளது.

இங்கு பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு வன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல தமிழ்ப் பெண்கள் பலவந்தமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவதுடன், பலவந்தமாக பாலியல் வன் புணர்விற்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வடக்குகிழக்கில்வாழும்பெண்கள் தமது நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அங்கு செறிவாகக் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரில் தங்கியிருக்கின்றனர். இதனால் இவர்கள் பாலியல் ரீதியான வன்முறைகளுக்கு மட்டும் உட்படவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் நிறைவிலும் அதன் பின்னரும், தமிழ்ப் பெண்களுக்கு எதிராக இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட மிகக் கடுமையான பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தற்போது பேசப்படுகின்றன.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் தமிழ்ப் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் சித்திரவதைச் சம்பவங்கள் என்பன பெருமளவில் தவிர்க்கப்பட்டுள்ளன.

இறுதிக்கட்ட யுத்தத்தில் சிங்கள இராணுவ வீரர்க ளால் விடுதலைப் புலி அமைப்பின் பெண் உறுப்பினர் கள் எனச் சந்தேகிக்கப்படுவோரின் இறந்த நிர்வாணமாக்கப்பட்ட உடல் கள் மீது பாலியல் ரீதியான சித்திரவ தைகள் மேற்கொள் ளப்படுவதை உறுதிப்படுத்தி வெளியிடப்பட்ட பிறிதொரு அனைத்துலக விசாரணை யாக உள்ள ஆவணப்படத்திற்கு பரிந்து ரை மேற்கொள்ளப்பட்டுள்ளது தவிர வேறெந்தப் பாலியல் சித்திரவதைகள் தொடர்பாகவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

''கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடத்தக்க சில பரிந்துரைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இலங்கை அரசிடம் போர்க் குற்றங்கள் தொடர்பாக உரிய முறையில் கேள்வி கேட்பதில் இவ் ஆணைக் குழுவின் அறிக்கை தவறிழைத்துள்ளது'' என 'நெருக்கடி ஆய்வுக்கான 'அனைத்துலக குழு'வின் ஆசிய நிகழ்ச்சித் திட்ட இயக்குனர் றொபேற் ரெம்ப்ளர் தெரிவித்துள்ளார். (த)

# காணிப் பதிவுச் சுற்றறிக்கையை வாபஸ் பெறுவதற்குத் தீர்மானம்

கொழும்பு, டிசெ.22

காணிப்பதிவை இடைநிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிடக் காரணமாக இருந்த 2011 ஆம் ஆண்டு 4ஆம் இலக்க சுற்றறிக்கையை காணி அமைச்சு வாபஸ் பெறத் தீர்மானித்துள்ளதாக அந்த அமைச்சின் உயர் மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச காணிகள் மற்றும் தனியார் காணிகள் அனைத்தையும் பதிவுசெய்யுமாறு காணி அமைச்சு பிரதேச செயலகங்களுக்கு சுற்றறிக்கை மூலம் உத்தரவு பிறப்பித்திருந்தது. மேற்படி 2011ஆம் ஆண்டு 4ஆம் இலக்க சுற்றறிக்கையில் பல முரணான விடயங்கள் இருப்பதால் இதனை எதிர்த்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு கடந்த நவம்பர் மாதம் 9ஆம் திகதி, நீதிபதி டபிள்யூ.எல்.ஆர் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது காணிகளைப் பதிவு செய்யவேண்டும் என்ற அறிவித்தல் மீது நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

இதன் பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய மேற்படி சர்ச்சைக்குரிய காணி அமைச்சின் 2011ஆம் ஆண்டு 4ஆம் இலக்க சுற்றறிக்கையை வாபஸ் பெறுவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக அந்த அமைச்சின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய நீதிமன்றம் எதிர்வரும் ஜனவரி மாதம் 19 ஆம்திகதி இடைக்காலத்தடையை நீக்கும்பட்சத்தில்மண்ணின்மகிமை (பிம்சவிய) வேலைத் திட்டம் தொடரும் என்று அந்த வட்டாரங்கள்மேலும் தெரிவித்தன. (த-15)

# அனுராதபுரத்தில் சடலங்கள் மீட்பு

அனுராதபுரம், நொச்சியாகம பகுதியில் நேற்று இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நொச்சியாகம பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கால திவுல்வெள, நாவற்குளம் பகுதி வாய்க்கால் ஒன்றுக்கு அருகிலிருந்தே இந்த இரு சடலங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

காலதிவுல்வெள பகுதியைச் சேர்ந்த இவ்விளைஞர்கள் இருவரும் நேற்று மாலை மோட்டார் சைக்கிள் ஒன்றில் நொச்சியாகம நகருக்குச் சென்றுள்ளனர். இவர்களே பின்னர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

நாவற்குளம் பகுதியில் இளைஞர்கள் இருவரது சடலங்கள் இருப்பதைக்கண்ட பிரதேசவாசிகள் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கியதும் சம்பவ இடம் விரைந்த பொலிஸார் சடலங்களை மீட்டுள்ளனர்.

இவர்கள் எடுத்துச்சென்ற மோட்டார் சைக்கிள் மற்றும் பணம் என்பன சடலங்கள் இருந்த பகுதியில் காணப்படவில்லை என்பதுடன் சடலங்கள் இரண்டும் நிர்வாண நிலையிலேயே காணப்பட்டன. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ங-சி)

# வாழ்த்து அட்டைகளில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ். மக்களை கலாசார பிறழ்வுகளில் இருந்தும் போதைப்பழக்கத்தில் இருந்தும் பாதுகாப்பதற்காக யாழ். மாவட்ட அரச சார் பற்ற நிறுவனங்களின் இணையம் கலாசாரம் பேணும் குழு ஒன்றை அமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒரு நடவடிக்கையாக விழிப்புணர்வு வாசகங்கள் பொறிக்கப்பட்ட வாழ்த்து அட்டைகளைத் தயாரித்து பரவலாக விநியோகிக்க அந்த அமைப்பு திட்டமிட்டுள்ளது.

''கலாசரத்தைப் காப்போம். போதைப் பொருளைத் தடுப்போம்'' என்ற தொனிப் பொருளில் இந்த வாழ்த்து அட்டைகள் தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளிலும் விநியோகிக்கப்படவுள்ளது. (ங)

# ஜனாதிபதியின் இனவாதப்பற்றே அதிகாரப்பகிர்வைத் தடுக்கிறது

அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான சர்வவல்லமையை ஜனாதிபதி கொண்டிருந்தபோதிலும் இனவாதம் மீது அவர் வைத்துள்ள பற்று, அதிகாரங்களை வழங்கவிடாது தடுக்கின்றது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளைப் புலிகள் என விமர்சிப்பது மஹிந்த அரசின் கொள்கையற்ற செயலாகும்.

- இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்கமுடியாது என ஜனாதிபதி மறைமுகமாகக் கூறக்கூடாது. அதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவேண்டும்.

சர்வாதிகார ஆட்சியின் வெளிப்பாடு நாட்டில் தலைவிரித்தாடுகின்றது. இனவாதத்தைப் போதிப்பதே அரசின் உள்நாட்டுக் கொள்கையாக உள்ளது.

தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்கமுடியாது எனக் கூறுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு எதிராக இடதுசாரிகள் போராடுவர். - என்றார். (ங-சி)

# நிகழ்வுகள்

**கருத்தரங்கு**
பெண்கள் வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட செயலகமும் பால்நிலை வன்முறைக்கெதிரான செயற்பாட்டுக்குழுவும் இணைந்து நடத் தும் ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு காலை 9 மணிக்கு நாவலர் வீதி தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் இடம்பெறவுள்ளது.. (ம-313)

**முத்தமிழ் விழா**
கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற வுள்ளது. முத்தமிழ் மன்றத் தலைவர் மு.நவநீதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்வார். (ம-313)

**திறப்பு விழா**
மாவிட்டபுரம் ஜே/231 கிராம சேவையாளர் அலுவலக புதிய கட்டடத் திறப்பு விழா பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்வார். (ம- 313)

**கூட்டம்**
யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் ஜே/87 கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கான கிராம அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கூட்டம் காலை 9 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (ம-313)

**நேர்முகத் தேர்வு**
துணுக்காய் வலயக் கல்வித் திணைக்களத்தின் ஊடாக ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண் ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை காலை 9 மணிக்கு மருதனார்மடம் வடக்கு மாகாணக் கல் வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. (ம- 313)

**ஒளிவிழா**
வலி.தென்மேற்குப் பிரதேச சபை உப அலுவலகத்தின் ஒளிவிழா முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.இதில் சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு எஸ்.நேச நாயகம் அடி கள் கலந்துகொண்டு திருப்பலி ஒப்புக் கொடுப்பார். (ம- 130)

**உரம் விநியோகம்**
வரணி வடக்கு விவசாயிகளுக்கான மூன்றாம் கட்ட உரம் இன்று வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளதாக விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது.இந்த சம்மேளத்தின் ஊடாக உரத்தைப் பெறும் விவசாயிகள் அன்றைய தினமே உரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-122)

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு கரைச்சியில் 300 வீடுகள்

மன்னார், டிசெ.22

கரைச்சிப் பிரதேசத்தில் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளது யு.என்.கபிற்றாற் நிறுவனம் 300 வீடுகளை அமைத்து வழங்குவதற்கான ஒழுங்குகளை அது மேற்கொண்டுள்ளது. இதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து வீடுகள் அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேசத்தில் அக்கராயன் குளம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய இடங்களில் மீள்குடியமர்ந்த மக்கள் அவசர அவசரமாகத் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீடுகளில் பல சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ள மேற்படி நிறுவனம், இந்தத் திட்டத்தின் கீழ் 300 பயனாளிகளைத் தெரிவு செய்துள்ளது. 5 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைப்பதற்கான வேலைகள் தற்பொழுது துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்காகச் செஞ்சிலுவைச் சங்கத்தால் 600 வீடுகள் அமைக்கப்பட இருக்கின்றன. இந்த வீடுகளில் 300 வீடுகள் ஏற்கனவே கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மீதி 300 வீடுகளை அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (க-115)

எமக்கும் முடியும்...



வியத்தகு முயற்சி; மன்னாரில் மாற்றாற்றல் உடையவர்களால் உருவாக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சியை இங்கு வருகை தந்த அதிதிகள் பார்வையிடுகின்றனர். (601)

# வவுனியா கோவில் குளத்தில் புதிய கடைத் தொகுதி விரைவில்

## மார்ச் மாதத்தில் பணிகள் ஆரம்பிக்கும்

நெடுங்கேணி, டிசெ.22

வவுனியா நகரசபையால் அடுத்த ஆண்டு கோவில் குளத்திலுள்ள நகரசபைக்குச் சொந்தமான காணியில் கடைத் தொகுதிஅமைக்கப்படவுள்ளதாக நகரசபையின் உப - தலைவர் எம்.எம்.ரதன் தெரிவித்துள்ளார்.

நெல்சிப் திட்டத்தின் கீழ் 44 லட்சம் ரூபா செலவில் இந்தக் கடைத் தொகுதி அமைக்கப்படவுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் வேலைகள் ஆரம்பமாகவுள்ளன. முன் பகுதி கடைத் தொகுதியாகவும், பின் பகுதி மீன் மற்றும் மரக்கறிச் சந்தையாகவும் அமையவுள்ளது. இந்தக் கடைத் தொகுதி அமைக்கப்பட்டதும் குத்தகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

2012ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக அடிப்படைத் தேவைகள் பலவும் பூர்த்தியாக்கப்படவுள்ளன.

அத்துடன் கெயர் நிறுவனத்தினூடாக நகரசபையின் 17 வீதிகள் கல்லிட்டுத் தார் ஊற்றிப் புனரமைக்கப்படவுள்ளன.

மேலும் பூந்தோட்டம் இந்து மயானத்தில் பல கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் எரிவாயுவால் இயங்கும் தகனம் செய்யும் நிலையத்துக்கான வேலைகள் யாவும் பூர்த்தியாகும் நிலையிலுள்ளதால் எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட விருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-435)

# உருத்திரபுரத்தில் மழையால் பாதிப்பு

கிளிநொச்சி, டிசெ.22

கடந்த சனிக்கிழமை தொடக்கம் பெய்த தொடர் மழை காரணமாக உருத்திரபுரம் கிராமத்துக்கான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர் மழை காரணமாகப் பெரும் வெள்ளம் கரடிப்போக்குச் சந்திக்கும் உருத்திரபுரத்துக்கும் இடையில் பல இடங்களில் வீதிக்கு மேலாகப் பாய்வதனால் வீதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் என்பவற்றில் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

குறிப்பாக எட்டாம் வாய்க்கால் பகுதியில் நீரின் வேகம் அதிகரித்துக் காணப்படுவதால் வாகனங்கள் வெள்ள நீருடன் அடித்துச் செல்லக் கூடிய அபாய நிலையும் தோன்றியுள்ளது.

இதேவேளை தொடரும் மழையால் குடியிருப்புக் காணிகளும் பெரும் வெள்ளக்காடாகக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. (க)

# கள்ளச் சாராயத்தில் நீந்தும் முல்லைத்தீவு

மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளில் இன்று பெரும் பிரச்சினைகளை உருவாக்குவது சட்ட விரோத சாராய உற்பத்தி மற்றும் சாராய விற்பனை என்பன ஆகும்.

இந்த வகையில் கரைதுறைப்பற்று பிரதேசம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. பொலிஸார் சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும் "மூக்கு உள்ளவரை சளி'' என்பது போல இது தொடர்கிறது. பரம்பரை பரம்பரையாக இந்த தொழிலில் ஈடுபடுகின்றவர்களும், பிழைப்புக்காக மற்றக் குடும்பங்களின் வாழ்வில் மண்ணள்ளிப் போடுபவர்களும் இங்கு அதிகம். இதனைப் பிடிக்கப்போய் அடிக்க ஓங்கிய கைகளில் கையூட்டுக் கொடுத்து அன்பாக அனுப்பிவைக்கும் நிகழ்வுகளும் இந்தப் பகுதிகளில் சகசமாக நடைபெறுவது கவலைக்குரிய விடயமாகும்.

கரைதுறைப் பற்றிலுள்ள முல்லைத்தீவு, தண்ணீரூற்று பொலிஸ் பிரிவினுள் சட்ட விரோத சாராய உற்பத்தி செய்யும் இடங்களாக பொலிஸார் அடிக்கடி பாய்ச்சல் செய்யும் இடங்களில் வற்றாப்பளைப் பகுதியிலுள்ள ஈரான், ஈராக், முள்ளியவளைப் பகுதியிலுள்ள பூதன் வயல், பாற்பண்ணை, முறிப்புப் பகுதிகளும் அதே வேளையில் அண்மையில் கஞ்சா பயிர்செய்கை கண்டு பிடிக்கப்பட்ட அளம்பில் வடக்கிலுள்ள காட்டுப்பகுதியும் தற்போது மீள்குடியமர்வு செய்யப்பட்ட கொக்கிளாய், கருநாட்டுக்கேணி பகுதிகளும் அடங்கும்.

இவை பொலிஸாருக்கு நன்கு தெரியும். நடவடிக்கைகள் தான் ஆமை வேகத்தில் உள்ளன.

சில பகுதிகளில் உள்ள இராணுவத்தினர் சாராய உற்பத்தியைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கின்றனர் என்றும் குற்றச்சாட்டு மக்களிடமிருந்து வருகிறது. இந்த வகையில் அளம்பில் பகுதியில் இராணுவத்தினரின் தலையீட்டால் இத்தகைய செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அத்துடன் மீள்குடிமர்வு நடைபெறாத பகுதிகளில் உள்ளவர்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் வந்து இருந்து கொண்டு தங்கள் பகுதிகளுக்குக் களவாகச் சென்று கள்ளச் சாராய உற்பத்தியில் ஈடுபட்டபோது சீருடைத் தரப்பினரிடம் நன்றாக வாங்கிக் கட்டிய நிகழ்வுகளும் நிறையவே நடைபெற்றுள்ளன.

அளம்பில் பகுதியில் அண்மையில் பிடிபட்ட கள்ளச் சாராய உற்பத்தி நிலையம் பற்றி மக்களிடம் அந்தப் பகுதி இராணுவ அதிகாரி ஒருவர் கூறும்போது;

''நான் எனது சிப்பாய்களைக் கட்டுப்பாட்டுடன் வைத்துள்ளேன். ஆனால் உங்கள் ஆள்கள் தான் சாராயம் காய்ச்சி இவர்களுக்குக் கொடுக்கிறார்கள். அவர்களும் போதையில், பாதையில் போகும் உங்கள் பெண்களுடனும் சேட்டை விடுகிறார்கள்'' என்று கூறியுள்ளார். எம்மினமே எமக்கு வேட்டு வைக்கின்றனர் என்பதை அவர்கள் சொல்லாமல் சொல்கின்றனர். இது உண்மையும்கூட.

இவை இப்படியிருக்க முன்னர் கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் உரிமம் பெற்ற சாராயக் கடைகள் இரண்டு காணப்பட்டன. ஒன்று முல்லைப்பட்டினத்தில் தனியாருக்கு சொந்தமான வாடி வீடும் ஆகும். ஆனால் இன்று வந்தவன் நின்றவன் எல்லாம் சாராயக்கடை நடத்துகின்றான். குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாதகுடிவகைகளை விற்பனை செய்யப்படுகின்றன. இந்த வகையில் 59 ஆவது படைத் தலைமையகத்தின் முன்னுள்ள சிறிய பற்றைக்காட்டினுள் உள்ள சாராயக் கடை (கேப்பாபுலவு), முல்லைத்தீவு, கொக்கிளாய் வீதியிலுள்ள சிலாவத்தை சந்தியிலுள்ள இராணுவ நலன்புரி நிலைய சாராயக்கடை, வற்றாப்பளையிலுள்ள ஞானமூர்த்தி பிள்ளையார் கோயிலடியில் உள்ள சீருடையினரின் சாராயக் கடை, தண்ணீரூற்று நெடுங்கேணி வீதியிலுள்ள மதவாளசிங்கன் குளம் செல்லும் பாதையிலுள்ள சாராயக்கடை என உரிமம் இல்லாமல் உரிமையுடன் திறந்துள்ளன ''வசந்தத்தின்'' கடைகள். எங்கும் வசந்தம், எதிலும் வசந்தம் என்பது எம்மவர் வாழ்வில் புகுந்து வீசுகின்றது.

கடந்த 4ஆம் திகதி வற்றாப்பளைப் பகுதியில் துயரமான நிகழ்வு ஒன்று நடைபெற்றுள்ளது. 36 வயதான கோவிந்தன் மகேந்திரன் என்பவர் ஞானமூர்த்தி பிள்ளையார் கோயிலடியிலுள்ள சீருடைத் தரப்பினரின் சாராயக் கடையில் நன்றாக மூக்கு முட்டக் குடித்து விட்டு வீட்டுக்கு வந்து வீட்டில் உள்ளவர்களின் முன்னால் பல குஸ்திகள் அடித்துச் சாகசம் காட்டியுள்ளார். அந்த வேளையில் கழுத்துப் பகுதியிலும் முள்ளந்தண்டின் பகுதியிலும் முறிவு ஏற்பட்டு அவரது உயிர் பிரிந்திருக்கலாம் என்று உறவினர்கள் கூறுகின்றனர்.

இதிலும் பரிதாபமான விடயம் என்னவென்றால் பிரேத பரிசோதனைகள் முடிவடைந்து வீட்டுக்கு பிரேதத்தை கொண்டு வந்து கிரியைகள் நடைபெறும் போது 119 ஆம் இலக்கப் பொலிஸ் பிரிவுக்கு இது கொலை என தகவல் கிடைத்துள்ளதாகவும் மேலதிக பரிசோதனைக்காக சட்ட வைத்திய அதிகாரியிடம் கொண்டு செல்ல வேண்டும் எனவும் தற்போது வவுனியாவிலும் சட்ட வைத்திய அதிகாரி இல்லாததால் அனுராதபுரம் கொண்டு செல்ல வேண்டும் எனவும் கூறி பிரேதத்தை கொண்டு சென்றார்கள். இதற்கான பரிசோதனை அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறவில்லை. இது சாராயத்தால் வந்த வினை என்கின்றனர் உறவினர்கள். இதைப் பெரும் குடி மக்கள் உணர்வார்களா? இருக்கும் போதும் பிரயோசனம் இல்லை. இல்லாமல் போயும் இருப்பவர்களுக்கு நிம்மதியில்லை என்ற நிலைதான்.

அதேவேளை இங்கு பல சுவாரசியமான நிகழ்வுகளும் அரங்கேறுவதுண்டு. இங்குள்ள சீருடையினரின் உரிமம் இல்லாத கடைக்கு இருவர் நல்ல வெறியில் சென்று ''என்ன இருக்குது குடிக்க உடனே தா'' என்று கேட்டுள்ளனர். அங்கிருந்த சீருடை தரித்தவர் ''ஒக்கம இவறாய்'' என்றுள்ளார். சென்றவரில் ஒருவர் ''இவறாயும் குவறாயும்தான், இருக்கிறதைத் தா'' என்று கேட்டுள்ளார். பின்னர் அவர்கள் ஆடிக்கொண்டே சென்றுள்ளனர். எம்மவர்களின் வீரம் உள்ளுக்குள் இருக்கிறது.

இதைவிட அநியாயம் இன்னொன்று உள்ளது. எங்கள் பகுதிகளில் உள்ள பனை தென்னைகளில் கள்ளு வற்றியதோ என்னவோ எங்கிருந்தோ எத்தனை நாள் போனாலும் புளிக்காத கள் போத்தல்களில் அடைக்கப்பட்டு வருகின்றது. இது இரசாயனப் பதார்த்தங்களில் இருந்து தயாரிக்கப்படுவது. இதனால் மூளை பாதிப்படையும். வயிற்றுக்குள் பல வருத்தங்கள் ஏற்படும். இதிலுள்ள சின்னத்தனமான வேலை என்னவென்றால் எம் பகுதியிலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களில் இவற்றை விற்பனை செய்வதுதான்.

எம்மூரில் உள்ள தொழிலாளிகள் எங்கே போனார்கள்? அவர்களின் வருமானங்களுக்கு ஆப்பு வைக்கும் வேலைகளாகவே இவை உள்ளன. எமது பகுதியில் உள்ள பனை மரங்களின் கீழ் இப்போது தென் பகுதிச் சுற்றுலாப் பயணிகள் கள்ளு இறக்கும் வரை பொறுமையாகக் குடும்பத்துடன் காத்திருக்கும் காட்சிகள் சாதாரணமாகக் காணக்கிடைக்கின்றன.

பனங்கள்ளு உங்களுக்கு, போத்தல் கள்ளு எங்களுக்கு என எம்மவர்கள் கூறிக்கொண்டு உடல் உறுப்புக்களையும் மன நிம்மதியையும் இழக்கின்ற நிலைக்கு வந்துள்ளனர்.

யார் இவற்றுக்கெல்லாம் முடிவு காணப் போகின்றார்கள்? உரிய அதிகாரிகள் இவற்றைக் கண்காணிப்பார்களா? ஏழை மக்களின் வாழ்வில் விளையாடும் இவர்களைத் தண்டிக்கப்போவது யார்? இனி வரும் காலம் பதில் தரட்டும்.

இறை

# மழைக்கு பாடசாலையில் ஒதுங்கியோரை விரட்டி வீட்டுக்கு அனுப்பியது இராணுவம்

கிளிநொச்சி, டிசெ.22

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளிலிருந்து வெளியேறிப் பாடசாலையில் தங்கியிருந்த மக்களை இராணுவத்தினர் வீடுகளுக்குத் திருப்பியனுப்பிய சம்பவம் கிளிநொச்சி பன்னங்கண்டியில் நிகழ்ந்துள்ளது.

கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதி மக்கள் மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்து புனித அந்தோனியார் அ.த.க.பாடசாலையில் தங்கியிருந்தபோது அங்கு சென்ற இராணுவத்தினர் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் உங்களைப் பாடசாலையில் சென்று தங்குமாறு கூறியுள்ளனர் எனக் கூறியதுடன் அந்த மக்களை வீடுகளுக்குச் செல்லுமாறும் பணித்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சியில் தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக கடந்த 15ஆம் திகதி அன்று பன்னங்கண்டி நவஜீவனம் பகுதியில் உள்ள மக்கள் தமது வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் இடம்பெயர்ந்து கிளிநொச்சி புனித அந்தோனியார் அ.த.க.பாடசாலையில் தங்கியிருந்தார்கள். இதனை அந்தப் பகுதிக் கிராம சேவையாளர், பிரதேச செயலாளர் உட்பட உரியவர்களுக்குத் தெரியப்படுத்தியதுடன் அவர்களுக்கான உணவுக்கும் ஏனைய அடிப்படை வசதிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மறுநாள் மதியம் அங்கு சென்ற இராணுவத்தினர் அந்தப் பாடசாலையில் தங்கியிருந்த மக்களை ஓரிடத்துக்கு அழைத்துச் சென்று நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் சென்று அங்கே தங்குங்கள். அதற்கான வசதிகளைச் செய்யலாம் எனவும் உங்களை இடம்பெயர்ந்து சென்று பாடசாலையில் தங்க வைத்து உங்கள் பகுதிக் கிராம சேவையாளர் உங்களைப் பயன்படுத்திப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளப் பார்க்கிறார் எனவும் கூறியுள்ளனர்.

இதனால் பாடசாலையில் தங்கியிருந்த மக்கள் தமது தலை விதியை நொந்தவாறு தமது வீடுகளுக்குச் சென்றுள்ளனர். (க-426)

# முச்சக்கர வண்டிச் சங்கத்தால் 'இனிய வாழ்வு'க்கு நிதியுதவி

கிளிநொச்சி, டிசெ.22

கிளிநொச்சி மாவட்ட முச்சக்கரவண்டிச் சங்கத்தினால் 'இனிய வாழ்வு' இல்லத்துக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 100 ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட முச்சக்கரவண்டிச் சங்க உறுப்பினர்கள் இணைந்து இனிய வாழ்வு இல்லத்துக்கு நிதியுதவிகள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் ஒரு கட்டமாக கடந்த 15 ஆம் திகதி முச்சக்கர வண்டிச் சங்கத்தின் பொதுக் கூட்டம் பிரதேச சபையின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின்போது முச்சக்கர வண்டி உரிமையாளர்களின் மூலம் சேகரிக்கப்பட்ட 25 ஆயிரத்து 100 ரூபாவும் சங்க நிர்வாக நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபாவும் என ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 100 ரூபா இனிய வாழ்வு இல்லத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. (க-6)

# 2,000 கூரை விரிப்புகளை வழங்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.22

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பயன்படுத்துவதற்கு வசதியாக 2 ஆயிரம் கூரை விரிப்புக்களையும், 2 ஆயிரம் தரை விரிப்புக்களையும் அவசரமாக அனுப்பி வைக்குமாறு புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் முல்லைத்தீவு அரச அதிபரிடம் கோரியுள்ளார்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையால் ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. தற்காலிக வீடுகளிலும் ஓலைக் குடிசைகளிலும் வாழ்ந்து வரும் மக்களின் வசிப்பிடங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் இருக்க இடமின்றி மோசமான நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இவர்கள் ஈரமான நிலத்தில் படுத்துறங்குவதால் நோய்த் தாக்கத்துக்கும் உள்ளாக வேண்டிய நிலையும் தோன்றியுள்ளது.

இவர்களின் பரிதாபகரமான நிலையை உணர்ந்து கொண்ட புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர், 2 ஆயிரம் கூரை விரிப்புகளையும் 2 ஆயிரம் தரை விரிப்புகளையும் அவசரமாக அனுப்பி வைக்குமாறு முல்லைத்தீவு அரச அதிபரைக் கோரியுள்ளார்.

இதேவேளை இந்தப் பிரதேசத்திலுள்ள சில வீதிகளுக்குக் குறுக்கே பாய்ந்தோடிய வெள்ளம் குறைந்துள்ளதால் தற்பொழுது போக்குவரத்து வழமைக்குத் திரும்பியுள்ளது. (க-115)

# மரணச் சடங்குக்கு நிதியுதவிகள்

கிளிநொச்சி, டிசெ.22

கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராமத்தில் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து மரணமான வயோதிபப் பெண்ணின் இறுதிக் கிரியைகளுக்குரிய நிதியுதவியை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் பிரதேச வர்த்தகர்கள் எனப் பலர் வழங்கியுள்ளனர்.

கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராமத்தில் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து வந்த வீ.சந்தான லட்சுமி என்ற வயோதிபப் பெண்ணொருவர் கடந்த 19 ஆம் திகதி மரணமானதையடுத்து அவரது இறுதிக் கிரியைகளுக்குத் தேவையான உதவிகளை தொண்டமான்நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் பிரதேச வர்த்தகரும் வழங்கியுள்ளனர். இதனைப் பலரும் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

**இப்படியுமொரு செயற்பாடு...**



*நட்டம் யார் தலையில்?:* கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினரால் பாழடைந்த கட்டடம் ஒன்றினுள் சில காலங்களுக்கு முன்னர் வைக்கப்பட்டதாகக் கூறப்படும் பல்வேறு பொருள்கள் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றன. (6)

# தொடரும் திருட்டுக்களால் வவுனியா மக்கள் அச்சத்தில்

நெடுங்கேணி, டிசெ.22

வவுனியாவில் இரவு வேளைகளில் இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்களால் மக்கள் அச்சத்தில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மக்கள் மீள்குடியமர்ந்த ஆறுமுகத்தான் புதுக்குளம் கிராம சேவகர் பிரிவிலுள்ள மரையடித்த குளம் கிராமத்திலுள்ள வீடொன்றினுள் அதிகாலை வேளையில் புகுந்த திருடர்கள் அங்கிருந்த 36 பவுண் நகைகளையும், கைத்தொலைபேசியையும் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தப் பகுதியிலுள்ள வீடுகள் பாதுகாப்பற்றனவாகக் காணப்படுவதால் மீள்குடியமர்ந்த மக்கள் தமது பெறுமதியான உடமைகளைப் பாதுகாப்பதில் அதிக சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இதேவேளை கடந்த வாரம் வவுனியாவின் புறநகர்ப் பகுதியான கணேசபுரத்தில் அமைந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான பலசரக்குக் கடையொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

அத்துடன் தவசிகுளம் பகுதியிலும் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் நகை, பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இதைப் போன்றே வவுனியாவின் பல கிராமங்களிலும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதால் மக்கள் அச்சத்துடனேயே பொழுதைக் கழிக்கின்றனர். (க-435)

# வெள்ளம் பாதித்த மக்களுக்கு சமைத்த உணவு விநியோகம்

## கூட்டுறவுச் சங்கம் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ.22

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்குச் சமைத்த உணவுகளை கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வழங்கி வருகின்றது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்து 12 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 579 குடும்பங்களுக்குச் சமைத்த உணவுகளை மேற்படி சங்கம் வழங்கி வருகின்றது. இது தொடர்பாகக் கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கந்தசாமி இளங்கோவிடம் கேட்டபோது:

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தட்டுவன் கொட்டி, உமையாள்புரம், காஞ்சிபுரம், கோரக்கன்கட்டு, பரந்தன், சிவபுரம், முரசுமோட்டை, குமாரசுவாமிபுரம், தர்மபுரம், கட்டைக்காடு, பிரமந்தனாறு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பன்னிரெண்டு நலன்புரி நிலையங்களில் 579 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 212 பேர் தங்கியுள்ளனர். இவர்களுக்குக் கடந்த சனிக்கிழமை முதல் சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றோம்.

அனர்த்த முகாமைத்துவ சேவைகள் அமைச்சின் நிதியுதவியுடன் பிரதேச செயலாளரின் மேற்பார்வையில் இவ்வாறு சமைத்த உணவுகளை வழங்கி வருவதாகவும், நாளுக்கு நாள் அங்கத்தவர் எண்ணிக்கைகள் அதிகரிக்கின்றபோதும் அதற்கு ஏற்றவாறு அந்தந்த நலன்புரி நிலையங்களுக்குச் சென்று சமைத்த உணவுகளை வழங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

# விடுதி வசதியில்லாத ஆசிரியர்கள்

அக்கராயன், டிசெ.22

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் உள்ள மூன்று விடுதிகளில் ஒன்று மட்டும் மீள்குடியமர்வின் பின்னர் புனரமைக்கப்பட்டுள்ளதால் ஆசிரியர்கள் தங்கிக் கொள்வதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

வெளிமாவட்டங்களிலிருந்து இந்தப் பாடசாலைக்குப் பணிக்கு வரும் ஆசிரியர்களுக்குத் தங்குமிட வசதிகள் இல்லை. அழிந்த நிலையிலுள்ள இருவிடுதிகளும் புனரமைப்புச் செய்யப்பட்டால் ஆசிரியர்கள் தங்குவதற்கு வசதியாக இருக்கும்.

இதேவேளை இந்தப் பாடசாலைக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் வந்து செல்லக் கூடிய விதத்தில் பஸ்சேவையொன்றை நடத்துமாறு கல்விச் சமூகம் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வருகிறது. வன்னேரிக்குளம் கிராமத்தில் மீள்குடியமர்வின் பின்னர் 470 குடும்பங்கள் வசித்து வருகின்றன. (க-410)

# தடைப்பட்ட போக்குவரத்து சேவையால் அல்லல்படும் வன்னேரிக்குளம் மக்கள்

அக்கராயன், டிசெ.22

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்துக்குத் திருமுறிகண்டி ஊடான போக்குவரத்து இடம் பெறாததால் அமைதிபுரம் மற்றும் அக்கராயன் கிழக்குப் பகுதி மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது சகல போக்குவரத்துக்களும் ஸ்கந்தபுரம் ஊடாக நடைபெறுவதால் அமைதிபுரம், அக்கராயன் கிழக்கு மக்கள் நீண்ட தூரம் நடந்து சென்று அம்பலப்பெருமாள் சந்தியிலிருந்து பஸ்களில் பயணிக்க வேண்டிய அவலம் உள்ளது.

இடப்பெயர்வுகளுக்கு முன்னரும் வன்னேரிக்குளத்துக்கு அரச , தனியார் பஸ் சேவைகள் திருமுறிகண்டி ஊடாக நடைபெற்றன.

தற்போது ஏனோ தெரியவில்லை இந்தப் பணிகள் இடம்பெறுவதில்லை. இதனால் மக்கள் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். (க-410)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசு - கூட்டமைப்பு பேச்சு எங்கே சென்று முடியும்?

எமது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம் பெறவேண்டும்; அது முக்கியமானது. அக்குழுவில் அங்கம் வகிப்பதற்கான உறுப்பினர்களின் பெயர்களை அனுப்புமாறு நாம் தெளிவாகக் கூறியிருக்கிறோம். ஆனால் இதுவரை அவர்கள் அதனைச் செய்யவில்லை-

அரசியல் தீர்வு குறித்த அரசுடனான பேச்சுக்களில், விடுதலைப் புலிகள் செய்ததைத்தான் கூட்டமைப்பும் செய்கிறது; அவர்களது பாணியையே கடைப்பிடிக்கிறது. தனியாகத் தீர்மானம் எடுக்க முடியாமல் வெளிநாடுகளில் உள்ள சக்திகளால் அவர்கள் தடுமாறுகின்றனர். நாமும் பொறுமையாகப் பேசுகிறோம். எமது பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு-

ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்தபோது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு மனம் தளர்ந்து - மனம் திறந்து - கருத்துத் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமன்றி -

தீர்மானங்களை எடுக்கக்கூடிய ஒரு தரப்புடனேயே நாம் பேச்சு மூலம் சில முடிவுகளுக்கு வரமுடியும். ஆனால் கூட்டமைப்பினரால் தனித்து முடிவு எதற்கும் வரமுடியவில்லை. அவர்கள், வெளியாரின் தீர்மானத்துக்கு உட்பட்டுச் செயற்பட வேண்டிய நிலையில் உள்ளனர். விடுதலைப் புலிகளின் அடிவருடிகளும் வெளிநாட்டுச் சக்திகளும் அவர்களின் பின்னணியில் இருக்கின்றனர் - என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்ற ஜனாதிபதியின் நிலைப்பாடு பொதுவானது. ஆனால் அவரது வெளிப்பாட்டில் எச்சரிக்கும் தொனியே அதிகம் பீறிடுகிறது.

உண்மையில், யதார்த்தத்தில், தமிழ் மக்களும் அவர்களின் தலைவர்களும் மிக நீண்ட காலமாகப் பொறுமை காத்துவருகிறார்கள் என்பது அகில உலகமும் அறிந்த ஒன்று. தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய உரிமைகள் நியாய வழியிலோ, நீதி நெறி நின்றோ பெரும்பான்மை இன அரசியல் தலைவர்களால் வழங்கப்படவில்லை. அதன் விளைவுகளே தமிழ் மக்கள் கடந்த ஆறு தசாப்த காலங்களுக்கு மேலாக நடத்தி வந்த அகிம்சைப் போராட்டங்களும் ஆயுதப் போராட்டமும்.

ஆனால் அவற்றை மனதில் கொள்ளாமல் - சிறிதேனும் கணக்கில் கொள்ளாமல் - சிங்கள அரசுகள் காலத்தைப் போக்கி வந்தன. அந்த வகையில் தமிழ் மக்கள் இனியேனும் நியாயமான தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும் என்று காத்திருக்கிறார்கள்.

ஆனால், இப்போது நடைபெறும் பேச்சுவார்த்தையில் இனியும் பொறுமை காக்க முடியாது; உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு சேர்ந்தே ஆகவேண்டும் என்று எச்சரிக்கும் தொனியில் ஜனாதிபதி முழங்கி இருக்கிறார். மறுவளமாகப் பார்த்தால், பேச்சுவார்த்தை என்று இனியும் அரசு அடக்கி வாசித்துப் பொறுமை காக்கப் போவதில்லை என்பதனைப் பூடகமாக அவர் தெரிவித்திருப்பதாகவும் கொள்ளலாம்.

அதாவது அரசு - கூட்டமைப்பு பேச்சுவார்த்தை முறிக்கப்படும் என்று மறைமுகமாக எச்சரிக்கப்பட்டுள்ளது என்றும் கொள்ளலாம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமே முன்வைக்கப்பட வேண்டும் என்பதில் அரச தரப்பு விடாப்பிடியாக நிற்கிறது என்றால், அதற்கு முன்னதாக கூட்டமைப்பினர் சில உறுதிப்பாடுகளைக் கேட்பதில் எவரும் தவறு காணமுடியாது. தமிழர்கள் தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றே கேட்கிறார்கள். தமது முக்கிய கோரிக்கைகளான காணி, பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் இணைந்த வடக்கு-கிழக்கு ஆகிய ஆட்சி அலகு குறித்துச் சில உறுதிப்பாடுகளைக் கோருகிறார்கள்.

இவை, இன்று நேற்று உருவாக்கப்பட்ட புதிய கோரிக்கைகள் அல்ல. பல தசாப்தங்களாக (ஏற்கனவே பல தடவைகள்) முன்வைக்கப்பட்டவையே. ஆனால் அவற்றை வழங்குவதற்கு தாம் இப்போது சம்மதித்தால், தமது சொந்தக் கிராமத்துக்கே செல்ல முடியாது என்கிறார் ஜனாதிபதி. அதிலிருந்து புலப்படுவது என்ன? அந்த இரண்டு விடயங்களிலும் அரசு விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்பதே.

மேலும், வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் தூண்டுதலின் பேரிலேயே, கூட்டமைப்பு அந்தக் கோரிக்கைகளில் தொங்கிக்கொண்டு நிற்பதாகக் கூறப்படுவதும் ஏற்புடையதல்ல. விடுதலைப் புலிகள் அமைப்புத் தோற்றம் பெறுவதற்கு முன்னரே, தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட பிரதான கோரிக்கைகளின் தேய்ந்து, மெலிந்து போன வடிவமே இப்போதையது என்பது தெற்குத் தலைவர்களுக்குத் தெரிந்தும், தெரியாதவர்கள் போன்று புதிய தோற்றுகையைத் தூக்கிப் பிடிப்பதன் உள்நோக்கம், மறைமுகமான திட்டம் என்ன என்பதும் விசாலமாக, உள்ளூட்டமாக நோக்கப்பட வேண்டியதாகும்.

மேலும், விடுதலைப் புலிகளின் தோற்றத்துக்கு முன்னரே தெற்கின் சகல தரப்பு அரசியல் தலைவர்களும், அரசுகளும் புரிந்த தகிடுதத்தங்களாலேயே தமிழர் தரப்பு இப்போது சர்வதேசத்தின் உதவியை நாட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகி உள்ளது என்பது உலகத்துக்கே தெரிந்த விடயம்; ஒன்றும் புதியதுமல்ல.

உள்நாட்டிலேயே உகந்த தீர்வு கிடைக்குமானால், அது உறுதியாக்கப் பட்டால், தமிழ் மக்கள், தமிழ் அரசியல் தலைவர்கள் வெளிநாடுகளின் உதவியை ஏன் நாடப் போகிறார்கள்?

மேலும், போரில் வெற்றி பெறுவதற்கு, அதனை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இலங்கை அரசாங்கம், இந்தியா, அமெரிக்கா மற்றும் பல வெளிநாடுகளின் உதவிகளைப் பெறமுடியுமானால், தமிழர்கள் தமக்குரிய தமது நியாயமான உரிமைகள் கிடைக்க உதவுமாறு வெளிநாடுகளிடம் கேட்பதில் தவறு என்ன?

காற்றினால் நடுக்கடலில் தள்ளாடும் வள்ளத்தின் சொந்தக்காரன், தன்னை மீட்பர் போன்று காப்பாற்றி உதவ வரும் பெரிய கப்பல் ஒன்றை, வேண்டாம் என்று அதற்குச் சைகை காட்டி, நீரில் மூழ்குவதற்குத் துணிவானா, என்ன?

நாட்டின் பெரும்பான்மை இனமக்களுக்கு யதார்த்தத்தை எடுத்துச் சொல்லி தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு அரசு முயன்றால், அதனை நாடி உழைத்தால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது ஒன்றும் கடினமான காரியமல்ல. வெளிநாடுகளின் உதவியை நாட வேண்டிய தேவையும் தமிழர்களுக்கு உண்டாகியிருக்காது.

தெற்கில் காலூன்றிவிட்ட இனவாதிகளைத் திருத்தும் பணிக்குப் பதிலாக, அவர்களை மேலும் உசுப்பேற்றி ஆட்சியைக் கைப்பற்றும் தெற்கின் பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்கள், எப்போதும் தமது தவறுகளை தமிழ் மக்கள் மீதும், தமிழ்த் தலைவர்கள் மீதும் சுமத்தி, இனக்குரோதத்தைத் தூண்டுவதே இந்த நாட்டின் நீண்ட அரசியல் தொடரியாகிவிட்டது. அதற்கான எத்தனங்கள் மீண்டும் முளைவிடுவதற்கான சமிக்ஞைகளில் ஒன்றே அரசு - கூட்டமைப்புப் பேச்சுக்களின் இன்றைய கதியும், ஜனாதிபதியின் உரத்த எச்சரிக்கையும்!

# வெளி மாவட்டத்தில் சேவையை முடித்த ஆசிரியருக்கு இடமாற்றத்தில் இழுபறி

## விசனம் தெரிவிக்கின்றனர் பாதிக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம்,டிசெ.22

வெளிமாவட்டத்தில் சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ள யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கு அவர்கள் விரும்பும் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்காது இழுத்தடிக்கப்படுவதாக பாதிக்கப்பட்டோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக ஆசிரியர் தொழிற் சங்கங்கள் குரல் கொடுக்காமல் மௌனம் காப்பது ஏன் எனவும் அவர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வடமாகாண ஆளுநர் தலைமையில் வட மாகாண ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றது. அதில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்கள் அனைத்தும் 2012 மார்ச் மாதத்துக்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்படும் என ஆளுநரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வட மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகிய இரு ஆசிரியர் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அப்படியிருந்தும் ஆளுநரின் இந்த அறிவிப்புக்கு இரண்டு ஆசிரியர் தொழிற் சங்கங்களும் ஆசிரியர்களுக்கு குரல் கொடுத்து உதவாமல் மௌனமாக இருந்துள்ளன என ஆசிரியர்கள் தரப்பில் கூறப்படுகின்றது.

ஆசிரியர் இடமாற்றங்கள் கல்வி ஆண்டின் ஆரம்பத்தில் வழங்கப்பட வேண்டும். மாறாக ஆண்டின் நடுப் பகுதியில் மேற்கொள்வது மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும். அது மட்டுமன்றி ஆசிரியர்களின் கற்பித்தல் செயலையும் பாதிப்பதாக இருக்கும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்த இடமாற்ற விடயம் தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;

வெளி மாவட்டங்களில் சேவையிலிருந்த ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்துக்குவரும் போது, யாழ்ப்பாணத்திலிருந்து பதிலுக்கு ஆசிரியர்கள் வெளி மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

பதிலீட்டு ஆசிரியர் இடமாற்றத்தில் ஏற்படும் தாமதம் காரணமாகவே வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தை 2012 ஆம் ஆண்டின்ஆரம்பத்தில் நடைமுறைப் படுத்த முடியாமல் உள்ளது என்றார். (ம-14)

# யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் 3 இடமாற்ற வேலைத் திட்டங்கள்

அச்சுவேலி,டிசெ.22

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் மூன்று இடமாற்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சகல இடமாற்றங்களும் பெப்ரவரி மாதம் முடிவதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

* ஒரே பாடசாலையில் 7 வருடங்களுக்கும் அதற்கு மேலும் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான இடமாற்றம்.
* வன்னிப் பெருநிலப்பரப்பு பாடசாலைகளுக்கான பதிலீட்டு ஆசிரியர் இடமாற்றம்.
* ஒரே பாடசாலையில் 5 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து கடமையாற்றும் அதிபர்களுக்கான இடமாற்றம்.

இந்த மூன்று வகையில் இடமாற்ற வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

வன்னிக்குப் பதிலீட்டு ஆசிரியர் இடமாற்றம் கஷ்டப் பிரதேச, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் உரிய காலச் சேவையை நிறைவு செய்யாத 45 வயதுக்கு உட்பட்ட ஆசிரியைகளும், 50 வயதுக்கு உட்பட்ட ஆண் ஆசிரியர்களும் குறிப்பிட்டகாலம் வன்னிப் பெருநிலப்பரப்புப் பாடசாலைகளில் கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.


ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டு இறுதிப் பட்டியல் பூர்த்தி செய்யப்படவுள்ளன. இறுதிப் பட்டியலைப் பூர்த்தி செய்வதற்கான இடமாற்றச் சபையின் கூட்டம் இந்த வாரம் நடைபெறவுள்ளன.

வன்னியில் பதிலீட்டு ஆசிரியர்கள் மேன்முறையீடு செய்வதற்கு 15 தினங்கள் அவகாசம் வழங்கப்பட்டு அவர்களின் மேன்முறையீட்டு விண்ணப்பங்கள் மேன்முறையீட்டு இடமாற்றச் சபையால் பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படவுள்ளன.

கடந்த வருடங்களைப் போல் அல்லாமல் இந்த வருடம் பதிலீட்டு ஆசிரியர் இடமாற்ற வேலைத் திட்டத்தில் சில கண்டிப்பான நடைமுறைகள் பின்பற்றப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-11)

# தன்னை அறியவேண்டும்

ஒவ்வொரு ஆத்மீக சாதகரும் தன்னை அறிய முயலவேண்டும். ஆத்மீக பயிற்சிகள் அனைத்துக்கும் ஒதுக்கும் நேரத்தில் நான்கில் மூன்று பங்கு நேரத்தை தன்னை அறிய ஒதுக்கவேண்டும். அப்போதுதான் உங்களுக்கு முழுப்பலன் கிட்டும். காலத்தை முறையாகப் பயன்படுத்தி உங்கள் உடலைப் புனிதப்படுத்தி உங்கள் செயல்கள் அனைத்தையும் தூய்மையாக்கினால்தான் நீங்கள் குறிக்கோளை அடைய முடியும். துன்பங்கள் அனைத்துக்குமுரிய மிகமிக முக்கியமான காரணம் புலன்களின் பலவீனமே. புலன்களை உறுதியுடன் கட்டுப் படுத்துங்கள். மனதைச் சரியான பாதையில் செலுத்துங்கள். நீங்கள் எடுக்கும் தீர்மானம் வலிமையுடையதாக இருக்கட்டும்.



சாயி சிந்தனை

**நாளை**

மார்கழி 07, வெள்ளிக்கிழமை 23.12.2011
திதி: சதுர்த்தசி பி.இ. 1.49 வரை
நட்சத்திரம்: அனுஷம் மு.ப. 10.52வரை
சுபநேரம்: 6.25-7.55 வரை, ராகு காலம்:10.55-12.25 வரை

உதயன்
22 டிசெம்பர் 2011 வியாழக்கிழமை

# மண்டைதீவில் 5 ஏக்கர் நிலத்தில் இம்முறை வெங்காயச் செய்கை

## பிரதேச செயலகக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ.22

மண்டைத்தீவில் இந்த முறை ஐந்து ஏக்கர் நிலத்தில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வேலணைப் பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேலணைப் பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் வெங்காயச் செய்கை குறித்து ஆலோசிக்கப்பட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மண்கும்பான் பிரதேசத்தில் திராட்சைச் செய்கையை பரீட்சார்த்தமாக மேற்கொள்வது குறித்தும் ஆராயப்பட்டது.

இதேவேளை, காணி இல்லாதவர்களுக்கு அரச காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் நூற்றுப் பத்து விவசாயிகளுக்கு 70 மில்லியன் ரூபா வரை கடனாக வழங்கப்பட்டுள்ளதாகவும் கமநல திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வேலணைப் பிரதேச சபைத் தலைவர், கமநல சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் கடல்வள சமாசம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ம-7)

# மானிப்பாய் ஆஸ்பத்திரி முன்பாக எழும் துர்நாற்றத்தால் அவலம்



நாவலி, டிசெ. 22

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வெற்றுக் காணியொன்று நீண்ட காலமாக பெரிய கிடங்காக வுள்ளதால்அதற்குள் அந்தக் பகுதி மக்கள் கழிவுப் பொருள்களைக் கொட்டி வருகின்றனர். இந்த நிலையில் மழை காலங்களில் இந்தக் கிடங்கில் தேங்கும் தண்ணீர் நீண்ட காலத்துக்கு வற்றாமல் நிற்பதால் அங்குள்ள குப்பைகள் அழுகி துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்பட்டுவருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தக் குழியிலிருந்து அவற்றிலிருந்து டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் நிலையும் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு முன்பாக இந்தக் காணி அமைந்துள்ளதால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள், வைத்திய அதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுக்காமை குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-100)

# கிராமிய வீட்டுத் தோட்டத்துக்கு உதவி



நவாலி, டிசெ.22

திவிநெகும திட்டத்தின் கீழ் கிராமிய வீட்டுத் தோட்டச் செய்கைக்கென சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் 50 தென்னம் பிள்ளைகள் வீதம் வழங்கப்பட்டன.

இதில் நவாலி 513 கிராம சேவையாளர் பிரிவில் பயனாளி ஒருவருக்கு கிராம சேவையாளர் ரி. நித்தியானந்தபிள்ளை தென்னம் பிள்ளைகளை வழங்குகின்றார். (ம-100)

# விருந்தாளியாக வந்தவர் பொருள்களுடன் மாயம்

கைதடி, டிசெ.22

சில நாள்கள் பழகிய ஒருவர் நண்பர் போல் வீடு வந்து அங்கு விருந்துண்டு பின் அங்குள்ள பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்ற சம்பவம் ஒன்று கடந்த வாரம் கைதடி கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

குறித்த வீட்டின் உரிமையாளரைத் தேடி வந்த இளைஞர் ஒருவர் ''உங்களை வன்னியில் சந்தித்திருந்தேன். என்னை நினைவிருக்கின்றதா?'' எனக்கேட்டுள்ளார். வீட்டு உரிமையாளரும் வன்னியில் சில நாள் அவருடன் பழகியதை நினைவில் கொண்டு அவரை தங்க வைத்து விருந்து கொடுத்தார்.

சில நாள்கள் கழிந்த நிலையில் அந்த இளைஞர் தான் புதிதாக மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்க இருப்பதாக வீட்டுக்காரருக்கு கூறியுள்ளார். அவரும் வாங்கினால் நல்ல விடயம் தானே என்று கூறினார்.

காலை எழுந்த அந்த இளைஞர் கைதடி சந்திக்குப் போய் வரவேண்டும் எனக் கூற, வீட்டுக்காரரும் தனது புதிய சைக்கிளை கொடுத்து உதவியுள்ளார்.

சைக்கிளை வாங்கிய இளைஞர் ஏற்கனவே வீட்டுக்காரருக்கு தெரியாமல் வீட்டில் திருடிய புதிய கைத்தொலைபேசி, தங்கமோதிரம், எண்ணாயிரம் ரூபா பணம் உட்பட 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களுடன் மாயமானார்.

கைதடி சந்திக்குச் சென்றவர் திரும்பி வருவார் என எதிர்பார்த்த வீட்டுக்காரருக்கு இளைஞர் சைக்கிளை மட்டுமல்ல வீட்டில் இருந்த ஏனைய பெறுமதிமிக்க பொருள்களையும் திருடிச்சென்ற விடயம் பின்னரே தெரியவந்தது.

விடயம் அறிந்த அந்தப் பகுதி இளைஞர்கள் உடனடியாகச் சல்லடை போட்டு தேடிய போதும் அந்த இளைஞரை பிடிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-288)

# சாவகச்சேரி நகரசபை பகுதியில் பட்டாசு வெடிக்கத் தடை உத்தரவு

## சபைத் தலைவர் அதிரடி

யாழ்ப்பாணம், டிசெ.22

சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பொது நிகழ்வுகள், மரண ஊர்வலங்கள் போன்ற நிகழ்வுகளின் போது அதிகளவில் பட்டாசு வெடிப்பதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளதாகச் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசாகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் சுகாதாரத் திணைக்களத்தினர், நகரப் பகுதிகள் மற்றும் பொது வீதிகளில் அதிகளவு பட்டாசுகள் கொழுத்தப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுவதாக முறையீடு செய்தனர்.

குறிப்பாக சாவகச்சேரி வேம்படிச் சந்தியில் அதிகளவு பட்டாசுகள் கொழுத்தப்பட்டு அதனை அண்டிய பகுதிகளில் பட்டாசுத் தாள்கள் அதிகம் காணப்படுகின்றன.

இதனால் அதிக காற்று மற்றும் மழையின் போது ஏனைய இடங்களுக்கு இவை பரந்து செல்கின்றன.

இதன் காரணமாக சூழல் அசுத்தமடைவதுடன் நோய்த் தொற்றுகள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து தலைவர் மேற்கண்ட விடயம் பற்றி மக்கள் முறைப்பாடு தெரிவித்தனர்.

இந்த நிலையில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பெருமளவு பட்டாசுகள் கொழுத்துவதற்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-207-313)

# கொட்டித் தீர்த்த மழையால் சேதமாகின குடாநாட்டு வீதிகள்

யாழ்ப்பாணம், டிசெ.22

குடாநாட்டில் கடந்த இரண்டு நாள்களாகக் கொட்டி தீர்த்த மழையால் பெரும்பாலான வீதிகள் கடும் சேதமடைந்துள்ளன.

ஏற்கனவே இந்த வீதிகளில் ஏற்பட்ட சேதங்கள் தார்க் கலவை மூலம் பூசி மெழுகப்பட்டு ஓரளவு செப்பனிடப்பட்டன.

தற்போது பெய்த கடும் மழையால் இந்த வீதிகளில் மீண்டும் உடைவு ஏற்பட்டு சேதமடைந்துள்ளன.

பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை வீதி, யாழ். பிரதான வீதி, ஆஸ்பத்திரி வீதி, கோயில் வீதி உட்பட மற்றும் ஏனைய குறுக்கு வீதிகளும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் வாகனங்களின் அதிகரித்த போக்குவரத்துகள் காரணமாக, போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்குச் சேதமடைந்துள்ளன.

பலாலி வீதி, பிரதான வீதி போன்றவற்றில் உள்ள சேதங்களில் காணப்படும் வெள்ளத்தை அகற்றி அவற்றுக்கு தார்க் கலவை போடும் பணிகள் நேற்று இடம்பெற்றன.

இவ்வாறு தார்க்கலவை மூலம் வீதிகள் செப்பனிட்டாலும் கூட அவை மீண்டும் சேதப்பட்டு குழிகள் ஏற்படுவதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-26)

# வேறுபாடுகள் இன்றி இடம்பெறுகின்றன பாடசாலைகளில் அபிருத்திப் பணி

## யாழ். கல்வி வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவிப்பு

அச்சுவேலி,டிசெ.22

யாழ். கல்வி வலய பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி நகரம், கிராமம் என்ற வேறுபாடுகள் இன்றி சமமாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

கிராமப் பாடசாலைகளின் வளக் குறைபாடுகள், தேவைகள், முன்னுரிமை அடிப்படையில் தொடர்ந்தும் நிறைவு செய்யப்படும் என்று யாழ். கல்வி வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளராகக் கடமையேற்றுள்ள வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கல்வியில் சம சந்தர்ப்பமும் சமமான வாய்ப்பு வசதியும் சகல மாணவர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

இந்த வகையில் யாழ். கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி நகரப் பாடசாலைகள்- கிராமப் பாடசாலைகள் என்ற வேறுபாடு இன்றிச் சமநிலையில் மேற்கொள்ளப்படும்.

கிராமப் பாடசாலைகளின் வசதிகள் வளநிலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டால் மாணவர்கள் கிராமங்களில் இருந்து நீண்ட தூரம் பயணம் செய்து நகரப் பாடசாலைகளுக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்படாது.

பாடசாலைகளுக்கு கட்டட வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதால் மட்டும் கல்வியின் தரத்தை மேல்நிலைப்படுத்திக் கொள்ள முடியாது.

ஆசிரியர்கள், அதிபர்கள் தமது சேவையைக் குறித்த ஒரு பாடசாலையையோ அல்லது சமூகச் சூழலையோ கருத்தில் கொண்டு செய்யாது சேவை நோக்கில் அர்ப்பணிப்போடு செயற்படவேண்டும்.

யாழ்.கல்வி வலய பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசாரா பணியாளர்களின் சேவை ரீதியிலான தேவைகள் உரிய முறையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நிறைவு செய்யப்படும். அவ்வாறு நிறைவு செய்யப்படாத விடத்து எமது நேரடிக் கவனத்துக்கு அறியத் தரலாம்.

ஆசிரியர்களின் இடமாற்ற விடயத்தில் விருப்பு வெறுப்புகளுக்கோ சலுகைகளுக்கோ இடமில்லாத வகையில் சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதில் யாருக்கேனும் சலுகை காட்டப்பட்டதாகக் கருதுமிடத்து உரிய ஆதாரங்களுடன் எனது நேரடிக் கவனத்துக்கு அறியத் தரலாம். உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

புதுவருடத் தொடக்கத்தில் இருந்து பாடசாலை மேற்பார்வை, ஆசிரியர்களுக்கான புத்தூக்க பயிற்சிகள், சேவைக் காலப் பயிற்சிகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படும்.-என்றார். (ம-11)

# 20 வருட காலத்தில் முதல்முறையாக குடாநாட்டில் அதிக நெற் செய்கை

அச்சுவேலி, டிசெ.22

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் 11 ஆயிரத்து 78 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இது கடந்த 20 வருட காலத்தில் அதிகூடிய பயிர்ச்செய்கை நடவடிக்கை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்திலும் பார்க்க இந்த வருடம் 1,572 ஏக்கரில் புதிதாக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலப்பரப்பு கடந்த காலங்களில் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற வகையில் பொது மக்களின் பாவனைக்கு தடை செய்யப்பட்டிருந்த பிரதேசங்களாகும்.

இந்த வருடம் புதிதாகத் தனங்கிளப்பு பகுதியில் 672 ஏக்கர் நிலப்பரப்பிலும் எழுதுமட்டுவாழ் பகுதியில் 268 ஏக்கர் நிலப்பரப்பிலும் மருதங்கேணி, செம்பியன்பற்று நித்திய வெட்டை, கட்டைக்காடு உள்ளடங்கிய வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் 376 ஏக்கர் நிலப்பரப்பிலும் தீவகத்தில் 100 ஏக்கர் நிலப்பிரப்பிலும் புதிதாக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வருடம் புதிதாக நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு விதைநெல் இலவசமாக வழங்கப்பட்டதோடு மானிய விலையில் உரமும் வழங்கப்பட்டிருந்தது.

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் இவற்றை வழங்கியுள்ளது.

கூடிய விளைச்சலைத் தரத்தக்க நெல்லினங்களையும் அவற்றுக்கான நவீன பராமரிப்பு முறைகள் மற்றும் ஆலோசனைகளையும் மாவட்ட விவசாயத் திணைக்களம் வழங்கி வருகின்றது.

இந்த நிலையில் விவசாயிகளின் நெற்பயிர்ச் செய்கை முயற்சியில் கட்டாக்காலி கால்நடைகள் எதிர்பாராத பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகவும் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துவதற்கு விவசாய சம்மேளனங்கள், கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச சபைகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் சில அகப்புறச் சூழல் நிலைகளால் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தும் முயற்சி பூணமாக வெற்றியளிக்கவில்லை என்றும் விவசாயத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-11)

## மருதனார்மடம் பகுதி கடைகளில் கலாவதியான பொருள்கள் அழிப்பு

வலி வடக்கு டிசெ 22

சுன்னாகம், மருதனார்மடம் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் இருந்து இனங் காணப்பட்ட காலாவதியான பெருமளவான பொருள்கள் அழிக்கப்பட்டுள்ளன.

பொதுச் சுகாதார பரிசோதகர்களால் செவ்வாய்க்கிழமை இவை இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் நகரப் பகுதியில் உள்ள பிரபல்யமான கடைகளில் காலம் கடந்த பொருள்களை வாங்கி பாதிக்கப்பட்ட மக்கள் இது சம்பந்தமாக வலி. தெற்கு உடுவில் பிரதேச சபை தலைவருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து தலைவர் தி.பிரகாஸ், பொது சுகாதார பரிசோதகர்களுக்கு விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து பொது சுகாரப் பரிசோதகர்கள் சுன்னாகத்தில் உள்ள பிரபல்யமான நான்கு கடைகளுக்குச் சென்று பரிசோதனை மேற்கொண்டனர்.

இதனையடுத்துக் குறிப்பிட்ட கடைகளில் இருந்து குழந்தைகளுக்கான பால்மா வகைகள், சொக்லேட் வகைகள், இனிப்பு வகைகள், மீன் ரின், சோடா வகைகள் மற்றும் பழுதடைந்த கோதுமை மா எனப் பல பொருள்களையும் கண்டுபிடித்ததுடன் அவற்றை அந்த இடத்திலேயே வைத்து அழித்துள்ளனர்.

சுன்னாகம் நகரப் பகுதியில் உள்ள நான்கு கடைகளில் இருந்தும் மருதனார்மடம் பகுதியில் உள்ள இரண்டு கடைகளில் இருந்தும் இவ்வாறு காலாவதியான பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

இனிமேலும் காலம் கடந்த பொருள்களை விற்பனை செய்வோர் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் எச்சரித்தனர். (ம-86)

## வெள்ளத்தில் மூழ்கிய வீதிகள்



நாவலி, டிசெ.22

நவாலி பிரசாத் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் பிரதான சந்தையும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்த மழையால் ஏற்படும் வெள்ளம் பல பகுதிகளிலிருந் தும் இந்த வீதி வழியாகவே சென்று வயலை அடைகின் றது.

இந்த வெள்ளம் செல்வதற்குச் சந்தைக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள வாய்க்கால் மிகவும் சிறிதாக இருப்பதால் வெள்ளம் செல்வதில் தாமதம் ஏற்படுகின்றது.

இதனால் வெள்ளம் வீதிகளிலும் வீடுகளிலும் தேங்கி நிற்கின்றது வெள்ளம் வடிந்தோடுவதற்கு ஏற்றவகையில் கால்வாய் அமைத்தால் இந்த நிலை ஏற்பட்டிராது என்று கூறப்படுகிறது. (ம-100)

## மானிப்பாய் சந்தைப் பகுதியில் கோழி இறைச்சி விற்கத் தடை

மானிப்பாய், டிசெ.22

மானிப்பாய் மத்திய சந்தை அமைந்திருக்கும் சுற்றாடலுக்குள் வைத்து கோழி இறைச்சி விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. சபைத் தலைவர் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மானிப்பாய் மத்திய சந்தையில் சுற்றாடல் பகுதியில் பல வீடுகளில் கோழிப்பண்ணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப்பண்ணைகளில்வைத்து கோழி இறைச்சி விற்பனை செய்யப்படுவதால் மத்திய சந்தையிலுள்ள கோழிக்கடையில் இறைச்சி விற்பனையில் வீழ்ச்சி ஏற்படுகிறது.

இதேவேளை, கோழிப் பண்ணைகளில் இறைச்சி விற் பனை செய்யப்படுவதால் கோழியின் கழிவுகள் வீதிகளிலும் சந்திகளிலும் வீசப்படுகின்றது.

இதனால் சுகாதாரத்துக் குப் பங்கம் ஏற்படுவதுடன் நோய்கள் ஏற்படக்கூடிய சூழலும் உருவாகிறது. எனவே முன்னிட்டுமத்திய சந்தையிலிருந்து 300 மீற்றர் சுற்றாடலுக்குள் கோழி இறைச்சி விற்பனை செய்வது தடை செய்வதென்று தீர்மானித்ததில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-115)

## இராஜ கிராமப் பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பது எப்போது?

வலி. வடக்கு, டிசெ. 22

கரவெட்டி இராஜகிராமம் உருவாக்கப்பட்டு முப்பத்தைந்து வருடங்கள் கடந்துள்ள போதிலும் அந்த மக்களுடைய அடிப்படைப் பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படும் நிலமை தொடர் கதையாகவே காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இராஜ கிராமம் மக்களின் குடியேற்றக் கிராமமாக உருவாக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டனர்.

இந்த மக்களுக்கான குடி தண்ணீர்ப் பிரச்சினையோ அன்றி மலசலகூடப் பிரச்சினைகளோ இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படாத நிலையில் உள்ளதாக அந்தப் பகுதியில் வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

காலம் காலமாக யாழ் மாவட்டத்துக்கு தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களும்கூட இந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுப்பதில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-86)

## மானிப்பாயில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

சண்டிலிப்பாய், டிசெ.22

மானிப்பாய் பகுதியில் டெங்கு நோயாளி ஒருவர் மரணமானதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

புகையூட்டலிலும் மருந்து விசிறலிலும் ஈடுபட்டுள்ளதுடன் வீடு வீடாகச் சென்று டெங்கு நோயை ஏற்படுத்தக் கூடிய நுளம்புகள் உற்பத்தியாகும் சூழல் பற்றிக் கவனம் செலுத்தி வருகின்றனர்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மானிப்பாயைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தபோதும் நோய் குணமடையாததால் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் ஒரு சில மணி நேரத்துக்குள் மரணமானதைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

நடைபெற்ற பிரேத பரிசோதனை மூலம் இவர் டெங்கு நோயின் தாக்கத்தாலேயே மரணமானார் என்பது தெரியவந்தது. இதையடுத்து, வலி. தென் மேற்கு சுகாதாரப் பகுதியினர் இந்தப் பகுதியைச் சுற்றிப் புகையூட்டும் நடவடிக்கையி ம் மருந்து விசிறலிலும் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச சபைத் தலைவர் ஆகியோருடன் இணைந்து பொலிஸாரின் உதவியுடன் வீடு வீடாகச்சென்று டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகள் உற்பத்தியாகும் சூழல் குறித்து ஆராய்ந்தனர். (ம-115)

## திருடர்களால் பதற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.22

நீர்வேலி பகுதியில் பட்டப் பகல் திருடர்களின் கைவரிசை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் உள்ள வீடுகளில் ஆள்கள் இல்லாத சமயம் பார்த்து திருடர்கள் வீடுகளுக்குள் புகுந்து தமது கைங்கரித்தை நிறை வேற்றிச் செல்கின்றனர்.

கடந்த வாரத்தில் ஓட்டோவில் வந்த திருடர்கள் இந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்து அங்கிருந்த பொருள்களை ஏற்றிக் கொண்டு செல்ல முற்பட்ட சமயம் அயலவர்கள் கூக்குரலிட திருடர்கள் ஓட்டோவில் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருடர்கள் நண்பகல் மற்றும் பிற்பகல் வேளைகளிலேயே தமது திருட்டு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-26)

## கரதடிக் கிராமத்தில் வெள்ளம் அகற்றப்பட்டது

தொடர்மழை காரணமாக கரதடிக் கிராமத்தில் தேங்கி நின்ற வெள்ளம் வலி.கிழக்குப் பிரதேச சபையின் உதவியுடன் அகற்றப்பட்டுள்ளது.

ஆவரங்கால் மேற்கு, அச்சுவேலி தெற்கு எல்லைக் கிராமமான கரதடிக் கிராமத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்த மழையால் வெள்ளம் தேங்கி நின்றது.

இதனால் கிராம மக்கள் தமது அன்றாட போக்குவரத்துகளை நிறைவேற்றுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

குடிமனைகளுக்குள் வெள்ளம் புகும் நிலைமை இருந்தது.

இதனால் அந்தக் கிராம மக்கள் பல தொற்று நோய்களுக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டது.

தொடர் மழை காரணமாக தொண்டமானாறு அணை திறந்து விடப்பட்ட போதும் அச்சுவேலி வீதியில் பாலம் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதால் வெள்ளம் கடத்தப்படமுடியாமல் கிராம எல்லைக்குள் தேங்கிக் காணப்பட்டது.

இதன் காரணமாக வலி. கிழக்குப் பிரதேச சபை, நீர்ப்பாசன திணைக்கள உத்தியோ கத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு தற்காலிகமண்அணைஇட்டுவெள்ளத்தை தடை செய்துள்ளனர்.

இதன் காரணமாக அந்தக் கிராம மக்கள் வெள்ள அழிவில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். (ம-313-சி)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி குருநாதபிள்ளை



வளலாய், அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி குருநாதபிள்ளை நேற்று (21.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி சின்னத்தம்பி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும், கந்தசாமி, தங்கமணி, தம்பித்துரை, கிருஸ்ணபிள்ளை, சரஸ்வதி, மாணிக்கம், பூரணம் ஆகியோரின் சகோதரனும், இரத்தினத்தின் அருமைக் கணவரும், திருச்செல்வம் (அதிபர், யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்.), எழிற்செல்வன் (கிராம அலுவலர்-நவாலி தெற்கு) ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனலோஜினி, பிறிஸ்டினா ஆகியோரின் மாமனும், தர்சிகன், தர்மினி, கவீச்சரன், துவாரகன், துயீரகன், துயீரதன், துளசிகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11.00 மணியளவில் பூதவுடல்தகனக்கிரியைக்காக மானிப்பாய், பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.61, உடுவில் வீதி,
மானிப்பாய்.
(11900)(5,6,9)

தகவல்:
கு.திருச்செல்வம்.

## புலோப்பளை மேற்கில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மாதா கோயிலில் தஞ்சம்

பளை டிசெ.22

கடுமையான மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட புலோப்பளை மேற்கில், தற்காலிகமாக வசித்து வந்த 10 குடும்பங்களைச் சேர்ந்த 38பேர் அங்குள்ள மாதா கோயிலில் தஞ்சமடைந்துள்ளனர்.

போரினால் முகமாலையிலிருந்து இடம் பெயர்ந்து பின்னர் தற்காலிகமாகப் புலோப்பளை மேற்கில் வசித்து வரும் குடும்பங்களே இவ்வாறு தமது வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்து மாதா கோயிலில் தஞ்சமடைந்துள்ளன.

இவர்களை இந்துப் பகுதிக் கிராம சேவை அலுவலர், பிரதேச செயலர், இராணுவத்தினர், சுகாதாரப் பகுதியினர் எனப் பலரும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவர்களுக்குச் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டன. நேற்றைய தினம் உலர் உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

போர் ஓய்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மீள்குடியமர்வு நடைபெற்றபோதும், இங்கு இதுவரை மீள்குடியமர்வு இடம் பெறாததால் இங்கு வசித்த மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வெவ்வேறு இடங்களில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சு-207)

## உளம் கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



17.12.2011 சனிக்கிழமை
இந்து சமய கலாசார
அலுவல்கள் திணைக்களத்தினால்
நடத்தப்பட்ட விருது வழங்கும்
விழாவில் கலாபூஷணம்
விருதைப்பெற்ற நாதஸ்வர
வித்துவான் **மாரிமுத்து**
**நாராயணசாமி**
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதோடு மேலும் பல
சிறப்புகள் பெற்று இசைத்துறையை
வளர்த்து நீடூழி வாழ மாவைக்
கந்தனைப் பிரார்த்தித்து
மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
துஜாவந்தி, சீலாங்கி,
கார்த்திக், குமரன் [பேறாமக்கள்].

துரைவீதி,
இணுவில். (11935) (2-6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இந்து சமய கலாசார
அலுவல்கள் திணைக்களத்தால்
நடத்தப்பட்ட விருது வழங்கும்
விழாவில் கலாபூஷணம்
விருதைப்பெற்ற எனது குரு ஆகிய
மாவிட்டபுரம் **மாரிமுத்து**
**நாராயணசாமி**
அவர்களை மனதாரப் பாராட்டி
வாழ்த்துவதோடு மேலும் பல இசைக்
கலைஞர்களை உருவாக்கி இசைத்
துறையை மேலும் வளர்த்து
நீடூழிவாழ வேண்டும் எனக்
கோணேச்சரப் பெருமானை வேண்டி
உளம் கனிந்து வாழ்த்துகின்றேன்.

மாணாக்கன்
நாகலிங்கம் சந்திரன்(சுந்தர்)

மடத்தடி,
திருகோணமலை.(11936) (2-6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை
மடியில்
04.04.1917

ஆண்டன்
அடியில்
24.11.2011

அமரர்
**வெலிச்சோர்**
**இன்னாசிமுத்து**
**(நல்லதுரை)**

இன்பமுடன் நாம் வாழ
ஈகை பலவும் செய்தீர் பப்பா
உயர்வுடனே நாம் விளங்க
ஊழியமும் செய்து வைத்தீர்
திசைக் கொன்றாய் நாம்
சிதறியே இருந்தாலும்
சிதையாத உம் நினைவுகள்
தினம் எமை சேர்த்து வைக்கும்

கடந்த 4.11.2011 அன்று எமது குடும்பத்தலைவர் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஓடிவந்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையம் சாத்தியோருக்கும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், இறுதிச் சடங்கில் பங்குபற்றியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (23.12.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கண்டி வீதி,
மிருசுவில். (சி/7125) (2-6-9)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## ஒன்றுகூடல்

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஒன்றுகூடல் எம்பிலிப்பிட்டியாவில் இந்த வாரத்தில் இடம்பெறவுள்ளன.

எம்பிலிப்பிட்டிய திறந்த வெளி அரங்கில் நடைபெறும் இந்த ஒன்று கூடலில் நாட்டின் சகல கூட்டுறவு உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்தும் 35 கூட்டுறவு உத்தியோகத்தர்கள் இந்த ஒன்று கூடலில் கலந்து கொள்ளவுள்ளதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் அமைச்சர்கள் மற்றும் கூட்டுறவு உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-26)

## இலவச அழகுக் கலைப் பயிற்சி
## ORIFLAME

★ இலவச அழகுக்கலை பயிற்சிகளும் முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
★ வீட்டில் இருந்தவாறே பொழுது போக்கு நேரத்தில் மேலதிக வருமானமாக ரூபா 10,000/= முதல் உழைப்பதற்கான வழிகாட்டலும் வழங்கப்படும்.

இலவச கருத்தரங்கு.......

காலம் : 24.12.2011 நேரம்: பி.ப. 1.30

இடம்: Oriflameயாழ். கிளை, 187/30, யூனியன் லேன், ஆஸ்பத் திரி வீதி,யாழ்ப்பாணம். (சத்திரச்சந்தி, நடனமுருகன் ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

தொடர்புகளுக்கு: 0772288243, 0773048497

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பு நண்பி
க. மாதங்கியின் பாசமிகு தந்தை
**கந்தையா கருணாகரன்**
(உரிமையாளர், M.R.M Rice mill, ஊரெழு)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2013 கணிதப்பிரிவு மாணவர்கள்

(C/7124)(5,8,9)







Happy Christmas

கிறிஸ்மஸ்
கொண்டாட்டத்தை முன்னிட்டு
இந்தியா மற்றும் வெளிநாடு
களிலிருந்து இறக்குமதி
செய்யப்பட்ட புத்தம் புதிய
நவீனரக ஆடை
வகைகளுக்கு இன்றே
நாடவேண்டிய
ஒரே இடம்

அதிநவீன
ஆடைத் தெரிவுகளுக்கு.....
எடுப்பான
தோற்றம் பெற....

ஸ்ரைல் பார்க்
Style Park
171,K.K.S.Road, Jaffna.

(சி/7122) (2)

# ரணில் - அரசு ஒப்பந்தப்படியே சிறிகொத்த மீது திடீர் தாக்குதல்

**ரோஹண கமகே குற்றச்சாட்டு**

கொழும்பு,டிசெ.22

ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவர் ரணில் விக்கிர மசிங்கவுக்கும் அரசுக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் சிறிகொத்த கட்சித் தலைமையகத்துக்கு முன்னால் கலவரம் இடம்பெற்றது என்று ஐக்கிய தேசிய கட்சி யின் வட மத்திய மாகாண சபை உறுப்பினர் ரோஹண கமகே குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தத்தாக்குதல் குறித்து கட்சித் தலைவர் அரசிடம் வலியுறுத்தியுள்ளமை கேலிக்குரிய விடயம் என்று கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சிக்காகப் பாடுபடும் நபர்களை அதிகாரத்தில் இருத்துவதற்கான வேலைத்திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியிடம் இல்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சிறிகொத்தவின் முன் கூடியிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்களுடன் பிரபல அரசியல்வாதிகள் சிலர் அனுப்பியிருந்த அவர்களது ஆள்களும் சேர்ந்து இந்தக் கலகத்தை ஏற்படுத்தியிருந்தனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கார்ப் பந்தயங்களை நடத்தி அபிவிருத்தி காண முடியாது

**- சரத் பொன்சேகா**

கொழும்பு,டிசெ.22

''இலங்கையில் கார் பந்தயங்களை நடத்தி நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. இவ்வாறு செய்பவர்கள் எப்போது நாட்டு மக்களின் கஷ்டங்களை உணர்ந்து கொள்வார்கள்'' என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தனியார் வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதே அவர் ஊடகவியலாளர்களிடம் இதனைக் கூறினார்.

''இந்த நாட்டில் இளைஞர் ஒருவருக்கு மோட்டார் சைக்கிள் ஒன்றையோ அல்லது சைக்கிள் ஒன்றையோ கொள் வனவு செய்ய முடியாத நிலை யில், அரசியல்வாதிகளின் பிள்ளைகள் இரவுநேர கார் பந்தயங்களை நடத்துகின்றனர். இதைத்தான் அபிவிருத்தி என்கிறார்கள்'' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## ஊடகவியலாளர் பிரகீத் வழக்கில் மெகான் பீரிசுக்கு அழைப்பாணை

கொழும்பு,டிசெ.22

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போன சம்பவம் தொடர்பாக, முன்னாள் சட்டமா அதிபர் மொகான் பீரிசை சாட்சியமளிப்பதற்கு அழைக்க ஹோமகம நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போனது தொடர்பான வழக்கு ஹோமகம நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, முன்னாள் சட்டமா அதிபர் மெகான் பீரிசை சாட்சியமளிக்க அழைப்பு விடுக்க வேண்டும் என்று பிரகீத்தின் மனைவி சார்பில் அனுமதி கோரப்பட்டது.

இதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்புத் தெரிவித்தபோதும், மொகான் பீரிசை சாட்சியமளிக்க அழைப்பதற்கு ஹோமகம நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார். (ச)




அனைத்துப் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்று கோரி ஒருங்கிணைந்த தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னாள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## பாலங்களை புனரமைக்க பிரான்ஸ் நிதி உதவி

கொழும்பு,டிசெ.22

இலங்கையில் வீதி அபிருத்தி அதிகார சபையின் கீழுள்ள பாலங்களை மறுசீரமைப்பு செய்வதற்காக 31 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை பிரான்ஸ் அரசு வழங்கியுள்ளது. இது தொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் நடைபெற்றது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கைக்கான பிரான்ஸ் தூதர் கிறிஸ்டினா ரொபன்ஸன் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் டி.பி.ஜயசுந்தர ஆகியோர் கைச்சாத்திட்டனர். (ச)

## பங்களாதேஷிலிருந்து மருந்து இறக்குமதி

**இலங்கைக்கான அந்த நாட்டுத் தூதர் தகவல்**

கொழும்பு, டிசெ.22

பங்களாதேஷிலிருந்து மருந்துப் பொருள்களை இலங்கை அரசு இறக்குமதி செய்யவுள்ளதாக இலங்கைக்கான பங்களாதேஷ் தூதர் மஹ்பூப் உஸ் சமான் தெரிவித்துள்ளார். இதற்கிணங்க தரமான மருந்துப் பொருள்களை குறைந்த விலையில் பங்களாதேஷிலிருந்து இலங்கை அரசு இறக்குமதி செய்ய முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சிற்கும் பங்களாதேஷ் சுகாதார அமைச்சின் கீழுள்ள அத்தியாவசிய மருந்து கம்பனி நிறுவனத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். பங்களாதேஷ் அரசினால் நன்கொடையாக வழங்கப்பட்ட சுமார் 15 மில்லியன் ரூபா பெறுமதியான 10 மெட்ரிக் தொன் மருந்துப் பொருள்கள்பலவைத்திய சாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அடைமழையால் பொலன்னறுவையில் 10,000 ஏக்கர் நெற்காணிகள் கடும் சேதம்

கொழும்பு,டிசெ.22

பொலன்னறுவை மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக இந்தமுறை பெரும்போகத்தின்போது பயிரிடப்பட்ட பத்தாயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் நெற் காணிகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

பராக்கிரம சமுத்திரம், மின்னேரியா மற்றும் கவுடுள்ள நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்து வருவதால் வான் கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக நீரை வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பராக்கிரம சமுத்திர நீரினால் ஓனேகம மற்றும் கல்முனைப் பிரதேசங்களிலுள்ள வயல் நிலங்களில் பயிர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதேவேளை கவு டுள்ள நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் பனாமங்கட பகுதியைச் சேர்ந்த பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக பொலன்னறுவை இடர் முகாமைத்துவப் பிரிவின் அதிகாரிகள் இந்தப் பகுதிகளுக்குச் சென்றுள்ளனர் என்று இணைப்பதிகாரி உபுல் நாணயக்கார தெரிவித்துள்ளார். (ச)

## ஆர்ப்பாட்டம் செய்தாலும் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கவே முடியாது

**கிழக்கு முதலமைச்சர் அடித்துக் கூறுகிறார்**

கொழும்பு,டிசெ.22

கிழக்கு மாகாணத்தில் கலைப் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள் என்பதற்காக அவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க முடியாது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர்கள் சமூகம் சார்ந்த சிந்தனையுடன் எதிர்காலத்தில் செயற்படவேண்டும். ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமே எமது சமூதாயத்தின் உயர்ச்சிக்கு நாங்கள் பங்காற்ற முடியும்.

இன்று உலக மாற்றத்தின் அடிப்படையில் பொருளாதாரத்துக்கான கல்வி, வேலைக்கான கல்வியென மாற்றமடைந்து செல்கையில் நாங்களும் அவற்றுக்கேற்றாற்போல் தேவையானவற்றை பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (ச)

## பஸ் விபத்தில் 6 பேர் காயம்

கொழும்பு,டிசெ.22

நுவரெலியா - ராகலைப் பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் பஸ்சின் சாரதி உட்பட 6 பேர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வலப்பனையிலிருந்து ராகலை நோக்கி வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் நுவரெலியா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச்சம்பவம் தொடர்பாக ராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ச)

## முஸ்லிம் ஆயுதக்குழுக்களுக்கு தீவிரவாத அமைப்புகள் நிதியுதவி

**ஆங்கில நாளிதழ் தகவல்**

கொழும்பு, டிசெ.22

கிழக்கில் முஸ்லிம் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும், மத்திய கிழக்கு நாடுகளும், அனைத்துலக தீவிரவாத அமைப்புகளும் இதற்கு உதவி வருவதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

ஜிகாத் அமைப்பின் நிதியுதவியுடன் செயற்படும் ஆயுதக் குழுக்களால் கிழக்கிலுள்ள முஸ்லிம்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும், இது குறித்துத் தான் ஜனாதிபதி மஹிந்தவைச் சந்தித்து முறையிடப் போவதாகவும் அலவி மௌலானா கூறியுள்ளார்.

கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் முஸ்லிம்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு இந்த ஆயுதக்குழுக்கள் முனைவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

''இந்தக் குழுக்களுக்கு பல மத்திய கிழக்கு நாடுகள் நிதியுதவி செய்வதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

வறுமையில் உள்ள சில முஸ்லிம் இளைஞர்கள் இந்த ஆயுதக்குழுக்களில் இணைகிறார்கள். இவர்கள் தீவிரவாத அமைப்புகளுடன் இணைந்து போரிடுவதற்குக் கூட அனுப்பப்பட்டுள்ளனர்'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி பலரைக் கைது செய்ததுடன் ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

''ஆனால் இப்போதும் இவர்கள் கிழக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்'' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் செயற்படும் முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் தொடர்பாக அரச புலனாய்வுச் சேவை விசாரணைகளை நடத்தி வருகிறது. இந்த விசாரணைகளின் போது, கிழக்கிலுள்ள ஆயுதக் குழுக்களுக்கு முக்கியமான அனைத்துலக தீவிரவாத அமைப்புகளிடம் இருந்து நிதி உதவி கிடைத்து வருவது தெரியவந்துள்ளது எனக் கொழும்பு ஆங்கில நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது. (ச)

## தென்கிழக்கு பல்கலைக்கு குவைத் அரசு நிதியுதவி

கொழும்பு,டிசெ. 22

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் அபிவிருத்திக்காக குவைத் அரசு 10.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை இரண்டாம் கட்டமாக வழங்கியுள்ளதாக இலங்கை வந்துள்ள குவைத் நிதிய தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

இந்த நிதியுதவி குவைத் அரசின் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தின் ஊடாக வழங்கியுள்ளது என்று அந்த நிதியத் தின் பிரதிப் பணிப்பாளர் ஹிசாம் அல் வாஹ்யான் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

''இந்த நிதியுதவியின் ஊடாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தரமான கற்கை நெறிகளை உருவாக்க முடியும். அத்துடன் பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முடியும்'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கல்வி மற்றும் சுகாதார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் குவைத் நிதியம் ஊடாக வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

## நாய் இறைச்சியை உண்ணுமாறு இலங்கைப் பெண்ணுக்கு சித்திரவதை

### மலேசியாவில் சம்பவம்

மலேசியாவில் பணிபுரியும் இலங்கைப் பணிப்பெண் ஒருவர் அவர் பணிபுரியும் வீட்டு உரிமையாளரால் எச்சில் உணவு மற்றும் நாய் இறைச்சி என்பவற்றை உண்ணுமாறு துன்புறுத்தப்பட்டுள்ளார் என்று மலேசிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தனது வீட்டு உரிமையாளர் சூடான சமையல் பாத்திரங்களால் தனது கையில் சூடு வைத்துள்ளார் 23 வயதான இலங்கைப் பணிப்பெண் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்குறித்துபொலிஸில் முறைப்பாடுசெய்வதற்கென குறித்த இலங்கை பணிப்பெண்டன்காக் பகுதிக்குச்சென்று அங்குள்ளதனது சகோதரியிடம்உதவிபெற்றுள்ளார்.

கடந்த ஒக்ரேபர் மாதம் மலேசியாவுக்குச் சென்ற இந்தப் பணிப்பெண் அங்கு சென்று மூன்று வாரங்களின் பின் வேலையில் இணைந்துள்ளார். தனது வீட்டு உரிமையாளருக்கு இரண்டு வீடுகள் இருப்பதாகவும் அந்த இரு வீடுகளையும் சுத்தப்படுத்தும்படி தான் பணிக்கப்பட்டதாகவும் இலங்கைப் பணிப்பெண் கூறியுள்ளார்.

குறித்த இலங்கைபணிப்பெண்ணின்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாவும்அந்தப் பெண்மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளார் எனவும் கோலாலம் பூர் பொலிஸார்தெரிவித்தனர்.

### வடக்கின் வசந்த மழை (!)



கடந்த திங்கட்கிழமை பெய்த மழைக்கு பருத்தித்துறை - யாழ்ப்பாண சேவையில் ஈடுபடும்இ.போ.ச. பஸ்லில் குடைபிடித்து பிரயாணம் செய்த பயணிகள்.

## மீள் குடியமர்ந்தோருக்கு கொடுப்பனவு வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.22

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குள் மீள்குடியமர்ந்த 26 குடும்பங்களுக்கு யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் மீள்குடியமர்வுக்கான கொடுப்பனவுத் தொகையான 20ஆயிரம்ரூபா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் வழங்கப்படவுள்ளது. உரியவர்கள் அதற்கான ஆவணங்களுடன் சமுகமளித்து தமக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (வ-7)

## வலி.மேற்குப் பிரதேச சபை ஏற்பாட்டில் சா/த பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

வலி.மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் இந்த வருடம் ஜீ.சி.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை வெள்ளிக் கிழமை காலை9மணிக்கு பண்ணாகம் அம்பாள் கலை மன்றத்தில் நடைபெறவுள்ளது.

வலி.மேற்குபிரதேசசபைத்தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்யாழ் மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வார்.

யாழ்.பல்கலைக்கழகப் புவியியல் துறைப் பேராசிரியர் க.குகபாலன், பேராசிரியர் வேல்நம்பி, விவசாய உயிரியல் துறைத் தலைவர் பேராசிரியர் த.மிகுந்தன், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் இணைப்பாளர் த. தனபாலன், யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் கனிஷ்ட பிரிவு அதிபர் ப. நந்தீஸ்வரன், யாழ்.மத்திய கல்லூரியின் ஆசிரியர் த.தவசேகர் ஆகியோர் மேற்படி கருத்தரங்கில் வளவாளர்களாகக் கலந்துகொள்வர்.

சாதாரணபரீட்சைஎழுதிய மாணவர்கள் கருத்தரங்கில் வழங்கப்படும் உயர்தரவகுப்பில்பாடத்தெரிவுகளுக்கான ஆலோசனைகளை பெறமுடியும். அத்துடன் இதில் கலந்துகொள்ளும் மாணவர்கள் குறித்த நாளில் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படுவர். (வ)

## இந்தியப் பிரஜையை நாடு கடத்த உத்தரவு

கடவுச்சீட்டு, இன்றி இலங்கையில் சட்டவிரோத மாகத் தங்கியிருந்த இந்திய பிரஜையை நாடு கடத்தும்படி மாளிகாவத்தை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாடு கடத்தப்படும்வரை கைது செய்யப்பட்ட இந்திய பிரஜையை மீரிஹாண முகாமில் வைக்குமாறு சிறை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மருதானைப் பகுதியில் வைத்து கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட குறித்த நபரை நேற்றுமுன்தினம் மாளிகாவத்தை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (வ)

## கொங்ஹொங் உலக பாசறையில் யாழ். பெண் சாரணீயக் குழு





ஹொங்கொங்கில் நடைபெறவுள்ள 95 ஆவது உலக பாசறையில் பங்குபற்றுவதற்காக சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான சதானந்தம் பிரியதர்சினியும் ஏனைய மாகாணங்களில் இருந்து 13 மாணவிகளும் 2 வழிகாட்டுநர்களும் (ஆசிரியை) சென்றுள்ளனர்.

மேற்படி உலக பாசறை நிகழ்வு நேற்று ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 29ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. பெண் சாரணிய வட மாகாண ஆணையாளர் திருமதி நீ. தர்மகுலசிங்கம் தலை மையில் இந்தக்கொங்ஹொங் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)


# மரண அறிவித்தல்



## கந்தையா தேவராசா

(ஓய்வுபெற்ற விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்)

வேலணை கிழக்கு, 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை வடக்கை வசிப்பிடமாகவும், தற்போது 315/5, பலாலி வீதி, திருநெல்வேலியில் வசித்தவருமாகிய கந்தையா தேவராசா 20.12.2011 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா-மாணிக்கம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், மருதையனார்-சின்னாச்சி தம்பதியரின் மருமகனும், நாகம்மா (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் தேவராணி (சுவிஸ்), அகிலராணி (ஆசிரியை, யா/சென்.மேரிஸ் வித்தியாலயம்), இராஜேஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், மகாதேவி (கனடா), திருச்செல்வம் (சுவிஸ்), ரகுமார், வசந்தி (சுவிஸ்), ஸ்ரீகௌரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் பராசக்தி (சுவிஸ்), காலஞ்சென்றவர் களான பாக்கிய லட்சுமி, நகுலேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற வர்களான சின்னராசா, நகுலாம்பிகை, கேசவநாதன் மற்றும் குலசிங்கம் (சமாதான நீதவான்), காலஞ்சென்ற கண்ணம்மா ஆகியோரின் மைத்துனரும், சித்திரன், ஜயந்தன், தயானந், சிந்தூரி, சிந்துஜன், சுவஸ்ரிக்கா, சிவதீபன், அபிசன், ரஜிந்தன், கவினன், ராகுல், வருண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2011) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

315/5, பலாலி வீதி,
பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.

தகவல்:
க. ரகுமார்(5151)

(11928)(6-9-8)

# வடகொரியாவின் புதிய அதிபராக ஜிம் ஜோங் உன்னுக்கு சீனா ஆதரவு



சியோல், டிசெ.22

வடகொரியத் தலைவர் கிம் ஜோங் மறைந்ததையடுத்து அதிகார மாற்றம் சுமுகமாக நடப்பதற்காக, கிம் ஜோங் உன்னை ஆதரிப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் சர்வாதிகாரியும், தலைவருமான கிம் ஜோங் இல், கடந்த 17ஆம் திகதி மாரடைப்பால் மரணமானார். தற்போது, கிம் ஜோங் இல்லின் உடல், நாட்டின் முதல் தலைவர் கிம் இல் சுங்கின் உடல் பதப்படுத்தி வைக்கப்பட்டுள்ள, தலைநகர் பயாங் யாங்கின் கும்சுசன் நினைவு அரண்மனையில் கண்ணாடிப் பேழைக்குள் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள வடகொரியத் தூதரகத்துக்கு நேற்று முன்தினம் நேரில் சென்ற அந்த நாட்டு அதிபர் ஹூ ஜிண்டாவோ, கிம் ஜோங் இல் லிற்கு மரியாதை செலுத்தியுள்ளனர் என்றும் சீனாவில் செய்தி வெளியாகியுள்ளது. அத்துடன் கிம்ஜோங் உன் அடுத்த அதிபராகப் பதவியேற்கும் அதிகார மாற்றம் அமைதியான முறையில் நடப்பதற்கு உதவத் தயாராக இருப்பதாகவும் செய்தி வெளியிட்டுள்ளது. கிம் ஜோங் உன் தவிர, மறைந்த தலைவரின் உறவினர்கள் பலர் வடகொரிய ராணுவத்தில் உயர் பதவியில் இருப்பதால், அதிகார மாற்றம் அவ்வளவு சுமுகமாக இருக்காது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனாலேயே சீனா, கிம் ஜோங் உன்னுக்கு ஆதரவளிக்கத் தயாராகி வருகிறது. இதன் மூலம் உன் எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் எளிதில் அதிபராவதற்கு வாய்ப்பு இருக்கிறது. வடகொரியாவில் அரசியல் நிலைகுலைந்து, உள்நாட்டுப் போர் ஏற்பட்டால் அதனால் பாதிக்கப்படும் முதல் நாடு சீனாவாகத்தான் இருக்கும். அந்நாட்டில் இருந்து லட்சக்கணக்கான அகதிகள் சீனாவுக்குச் செல்வர். இதுகருதித்தான், வடகொரியாவின் அமைதிக்கு சீனா பெரும் முயற்சி எடுத்து வருகிறது. (ந)

## அமெரிக்கா - ஜப்பான் - இந்தியா வாஷிங்டனில் முத்தரப்புப் பேச்சு

வாஷிங்டன், டிசெ.22

ஆசிய பசிபிக் பகுதியில் சீன ராணுவம் குவிக்கப்பட்டுள்ள நிலையில், அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் முதல் முறையாக நேற்று முன்தினம் வாஷிங்டனில் முத்தரப்புப் பேச்சில் ஈடுபட்டன.

சீனாவுக்கும் வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இடையே கடல் எல்லை தொடர்பாகப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் , ஆசிய பசிபிக் கடற்பகுதியில் சீன ராணுவத்தைப் பலப்படுத்தி உள்ளதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை உருவாகி உள்ளது.

இந்தச் சூழ்நிலையில், இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் நாடுகளுக்கிடையிலான முத்தரப்பு பேச்சு வாஷிங்டனில் நடைபெற்றது. இதில் அமெரிக்கா சார்பில் வெளியுறவு இணை அமைச்சர்கள் ரொபர்ட் பிளேக் மற்றும் குர்ட் கேம்ப்பெல், இந்தியா சார்பில் இணை செயலாளர்கள் ஜவேத் அஷ்ரப், கவுதம் பம்ப்வாலே, ஜப்பான் சார்பில் வெளியுறவு அமைச்சர் கொய்ச்சிரோ கெம்பா ஆகியோர் பங்கேற்றனர். கூட்டத்துக்குப் பின்னர் இவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய 3 நாடுகளும் இணைந்து ஆசிய பசிபிக் பகுதியில் உள்ள நாடுகளின் நலன் பற்றி விவாதிக்க வேண்டும் என நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டது. இதன் தொடக்கமாக இந்தக் கூட்டம் அமைந்துள்ளது. ஆசியபசிபிக் கடற் பகுதியில்சீனா ராணுவத்தைபலப்படுத்தி இருப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது- என்றனர். (ந)

## எகிப்து கலவரத்தில் பெண்ணொருவர் மீது படையினர் தகாத முறையில் தாக்குதல்

### அமெரிக்க வெளியுறவு அமைசகம் கண்டனம்

கெய்ரோ, டிசெ.22

எகிப்தில் ராணுவ ஆட்சிக்கு எதிரான கலவரம் ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்து தாரிர் சதுக்கத்தில் திரண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு மற்றும் கண்ணீர் புகைக் குண்டு வீச்சு ஆகியவற்றை நடத்தினர். இதில் பலர் காயம் அடைந்தனர். இத்துடன் பெண்ணொருவர் கீழ்த்தரமான முறையில் தாக்கப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கையை அமெரிக்கா கண்டித்துள்ளது.

எகிப்தில், ராணுவ ஆட்சி உடனடியாக நீக்கப்படவேண்டும் எனக் கோரி, கடந்த நவம்பர் 18ஆம் திகதி முதல் தலைநகர் கெய்ரோவில் உள்ள தாரிர் சதுக்கத்தில் சிலர் தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் கடந்த 17 ஆம் திகதி, திடீரென தாரிர் சதுக்கத்தில் இருந்தவர்கள் மீது பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தி, அவர்களை சதுக்கத்தில் இருந்து விரட்டிய போதும் தொடர்ந்து இருதரப்புக்கும் இடையில் மோதல் வலுத்து வருகிறது.

இது குறித்து நேற்றுமுன்தினம் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சில மாதங்களுக்கு முன்பு ராணுவ ஆட்சிக்கு எதிராகப் பெண்கள் தங்கள் உயிரையும் துச்சமாக மதித்துப் போராடிய அதே வீதியில் இன்று அவர்கள் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். கடந்த ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பெண்கள் கணிசமாகப் பங்களித்துள்ளனர். ஆனால் இன்று அவர்கள் பொலிஸாரால் தாக்கப்படுகின்றனர். இந்த நிலைமை புரட்சியை இழிவுபடுத்தியுள்ளது. இது அந்த நாட்டுக்கு உகந்ததல்ல. இவ்வாறு கிளின்டன் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, நடந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் என ராணுவக் கவுன்சில் தெரிவித்துள்ளது. (ந)

## பிலிப்பைன்சில் கடும் சூறாவளி


# சாவு எண்ணிக்கை 1000ஐ எட்டுகிறது

மனிலா, டிசெ.22

பிலிப்பைன்ஸ் நாட்டின் மிடானோ மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஏற்பட்ட பயங்கரச் சூறாவளியில் பலியானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டியுள்ளது.

இதுவரை 957 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரப்பூர்வமான தகவல்கள் வெளியாகியுள்ளன. இன்னும் 49 பேரை காணவில்லை. ககாயன் டி ஓரோ பகுதியில் மட்டும் 579 பேர் பலியாகியுள்ளனர். லிகன் பகுதியில் 279 பேர் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பல்லாயிரக்கணக்கானோர் வீடு வாசல்களை இழந்துள்ளனர்.


பிரேதசாலைகளில் சடலங்கள் நிரம்பிக் கிடக்கின்றன. இவற்றை அடக்கம் செய்வதற்காக பெரும் குழிகள் தோண்டப்படுகின்றன. அதேவேளை, பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு, நிவாரணப் பணிகள் நீடிக்கின்றன என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள் .(ந)



பிலிபைன்ஸில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அந்நாட்டு அதிபர் பெனிக்னோ அகுய்னோ உதவிப் பொருள்களை வழங்கினார்.

# தலிபான்கள் அமெரிக்காவின் எதிரிகள் அல்லர்

### அமெரிக்கத் துணை அதிபர் ஜோ பிடன்



வாஷிங்டன், டிசெ.22

தலிபான்கள் விடயத்தில், அமெரிக்கா தற்போது மென்மையான அணுகுமுறையை மேற்கொண்டு வருகிறது. அதற்குச் சான்றாக நேற்று முன்தினம் அந்த நாட்டின் துணை அதிபர் அளித்த பேட்டியில், ''தலிபான்கள் அமெரிக்காவின் எதிரிகள் அல்லர்'' எனத் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான்களுடன் அமெரிக்கா ரகசிய பேச்சு நடத்தி வருவதாகவும், அதில் முக்கிய கட்டம் எட்டப்பட்டு விட்டதாகவும், நேற்றுமுன்தினம் தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் நேற்று அமெரிக்கத் துணை அதிபர் ஜோ பிடன் அளித்த பேட்டியில், தலிபான்கள் குறித்து தெரிவித்ததாவது:

தலிபான்கள் அமெரிக்கா வின் எதிரிகள் அல்லர். அமெரிக்கா வின் நலன்களுக்கு அவர்கள் பாத கமாக இருப்பதால் அவர்கள் நமது எதிரி என்று, அதிபர் இதுவரை ஓர் அறிக்கை கூட விட்டதில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருவேளை நம்மோடு ஒத்துழைப்பு தரும் ஆப்கன் அரசைக் கவிழ்த்துவிட்டு, எமக்கு கெடுதல் செய்ய முற்படுவார்களானால் அப்போதுதான் எமக்குப் பிரச்சினை. இந்த விவகாரத்தில், இரண்டு பாதைகள் உள்ளன. ஒன்று, அல்குவைதாவை ஒழிக்க வேண்டும். இரண்டாவது ஆப்கன் அரசு தலிபான்களால் கவிழ்க்கப்பட முடியாத அளவுக்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான், இருதரப்புக்கிடையிலான பேச்சு நடக்கும்- இவ்வாறு ஜோ பிடன் தெரிவித்தார். (ந)

## இராணுவ அதிகாரிகள் 700 பேர் பணி நீக்கம்

இலண்டன், டிச. 21

பிரிட்டிஷ் இராணுவத்திலுள்ள இராணுவ உயர் அதிகாரிகள் 700 பேரை பதவியிலிருந்து நீக்கம் செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

இதன்படி 2014ஆம் ஆண்டில் முப்படைகளையும் சேர்ந்த 700 அதிகாரிகள் பதவி இழப்பார்கள். மேலும் 335 பேர் 2020 இற்குள் நீக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக கடந்த மாதம் உயர் இராணுவ அதிகாரிகளிடம் கருத்து கேட்கப்பட்டது.

அதில் மனிதவள சக்தியை குறைத்து நவீனமயமாக்குதலுக்கு உயர் அதிகாரிகளில் பலர் விருப்பம் தெரிவித்து இருந்தனர்.

அதனடிப்படையில் பிரிட்டிஷ் அரசு இராணுவ அதிகாரிகளைப் பதவி நீக்கும் முடிவை எடுக்க முன்வந்துள்ளது என்றும் கூறப்படுகிறது. (ந)

### தாய்லாந்தில் வெள்ளப் பாதிப்பு

## இழப்பீடுகளை வழங்க முடியாமல் காப்பீட்டு நிறுவனங்கள் திணறல்

பாங்கொக்,டிசெ.21

தாய்லாந்தில் ஏற்பட்ட கடுமையான வெள்ளம் காரணமாக காப்பீட்டு நிறுவனங்களுக்கு பெருமளவில் இழப்பு ஏற்பட்டுள்ளது. இழப்பீடுகளை வழங்க முடியாமல் இந்த நிறுவனங்கள் திணறுகின்றன.

ஜப்பானில்ஏற்பட்ட நிலநடுக்கம் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியின் சீற்றம் ஆகியவற்றால் ஏற்பட்ட இழப்பைக் காட்டிலும் தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளச் சீற்றத்துக்கு அதிக இழப்பீட்டுத் தொகை அளிக்க வேண்டியிருக்கும் என்று இடெல்வைஸ் டோக்கியோ ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் ஜுன் ஹெமி தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜப்பானில் ஆழிப்பேரலை பேரழிவு ஏற்பட்ட பின் காப்பீட்டு நிறு வனங்களுக்குத் தேவையான பாதுகாப்பை அரசு அளிக்கிறது. இதுபோன்ற வசதி தாய்லாந்தில் இல்லை. இதனால் அளிக்க வேண்டிய காப்பீட்டு தொகை மிக அதிகமாக உள்ளது. இது காப்பீட்டு நிறுவனங்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற் படுத்தியுள்ளது - என்றார்.

அதுமட்டுமன்றி டோக்கியோ மெரைன் ஹோல்டிங் நிறுவனம் செயற்கைக்கோள் படப் பதிவுகள் அடிப்படையில் இழப்பீடுகளை அளித்துள்ளது. அதாவது இழப்பீடு கோரும் வீடு உண்மையில் சேதமடைந்துள்ளனவா? சேதத்தின் மதிப்பு எவ்வளவு ?என்பதை செயற்கைக்கோள் படம் மூலம் கண்டறிந்து வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார். (ந)




# இன்றைய இலங்கையின் கல்விமுறை



## ஆரோக்கியமானது

தற்போது இலங்கையில் காணப்படும் கல்விமுறையானது மிகச் சிறந்ததாகும். வேறுபல நாடுகளில் பணக்காரன்தான் படிக்கலாம் என்ற எண்ணம் காணப்பட்ட போதிலும் எமது நாட்டில் இலவச கல்வித் திட்டம், கஷ்டப்பட்ட மாணவரையும் உயர்ந் தோனாக்கி அவனது திறமையை வெளிக்கொணர உதவுகின்றது.

தற்போது ''கட்டாயக் கல்வி முறை'' மூலம் பதினெட்டு வயதுக்கு உட்பட்ட அனைவரும் கற்க வேண்டும் என்ற கடப்பாடு உள்ளது. இதனால் கல்வியில் இருந்து விலகும் மாணவர்களின் குறைகளை அறிந்து நிவர்த்தி செய்து அவர்களையும் கற்றறிந்த வர்களாக்க முடிகிறது. இது இலங்கையின் கல்வி முறையில் சிறந்த நிலையாகும். சிறுவயதில் இருந்தே மாணவர்கள் அனைத்துத் துறைகளிலும் ஆர்வலராகி, பின்னர் உயர் தரத்திலேயே ஒரு பிரிவை நோக்கிச் செல்கின்றனர். இதனால் அனைத்து துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாகத் திகழ்பவர்கள் எமது நாட்டு மாணவர்களே. வேறு நாடுகளில் ஒருதுறையை நோக்கியே கற்கின்றனர். அதனால் அவர்களுக்கு ஒரு துறை பற்றிய அறிவிருக்கும். எமது நாட்டு மாணவர்கள் எல்லா அறிவும் பெற்றவர்களாக இருக்கின்றனர்.

தற்போது இலவச கணினித் திட்டங்களையும் அறிமுகப் படுத்தி மாணவரை தொழில்நுட்ப அறிவுக்குள் புகுத்தி எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக உருவாக்க இன்றைய இலங்கைக் கல்வி முறை பாடுபடுகிறது. இதனால் எமது நாட்டுக் கல்வி முறை ஆரோக்கியமானது என்றே கூறலாம்.

இ.நீரஜா, கைதடி.

## ஆரோக்கியமற்றது

இன்றைய இலங்கையின் கல்வி முறையானது ஆக்கபூர்வ மற்றது என்றே கூறலாம். ஏனெனில் இன்றைய இலங்கையின் கல்வி முறையானது மாணவர்களுக்குச் சாதகமானதாகவோ வாய்ப்பானதாகவோ அமையவில்லை. மாறாக மாணவர்களுக்கு சவாலாகவும் முரண்பட்டதாகவுமே அமைகின்றது.

குறிப்பாக தரம்-5 புலமைப்பரிசில் வினாத்தாள்கூட கடினமாக அமைவதால் மாணவர் சமுதாயம் அதனை எதிர்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையைக் காணக்கூடியதாக உள்ளது. மற்றும் சாதாரண தரம், உயர்தரம் போன்ற பரீட்சை வினாத்தாள்களில் கூட சில சமயங்களில் பாடவிதானத்துக்கு அப்பாலும் வினாக்கள் அமைகின்றன.

இதனாலும் மாணவ சமுதாயம் சவால்களையே எதிர்நோக்க வேண்டியுள்ளது. மேலும் புதிது புதிதாகப் பாடத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றார்களே தவிர அதில் மாணவ சமுதாயம் வெற்றி கண்டுள்ளதா என்பதைப் பற்றி கருத்தில் எடுப்பதில்லை.

எனவே மாணவர்களுக்கேற்ற வகைகளில் கல்விமுறை மாற்றியமைக்கப்படும் வரை ஆக்கபூர்வ மற்றதே.

வி.எழிலரசி, தம்பசிட்டி.

# உலக சினிமாவில் நீங்கள் அறிந்திராதவை சில....

சார்லி சப்பிளின் ஒரு நகைச்சுவை நடிகர் என்றே நீங்கள் அனைவரும் நினைக்கலாம். ஆனால் அவர் ஓர் இயக்குநரும்கூட. ''கோ, ரூ இன் காபரே'' என்ற படத்தை இயக்கியதன் மூலம், அந்தப் பெருமையைப் பெற்றார்.

இலங்கையின் முதலாவது சிங்கள மொழி பேசிய படம் 'கடவுனு பொறந்துவ' இதனைத் தயாரித்தவர் சுந்தரம் மதுரநாயகம் என்ற ஒரு தமிழர் ஆவார்.

தமிழ்த் திரைப்பட உலகில் நகைச்சுவை நடிகையாக நுழைந்தவர் மனோரமா, 1000 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்த இவரது இயற்பெயர் ''கோபி ஷாந்தா''.

உலகிலேயே அதிக படங்களைத் தயாரித்து அதாவது 101 படங்களைத் தயாரித்து கின்னஸ், உலக சாதனை புத்தகத்தின் 2011 ஆம் ஆண்டு பதிப்பில் இடம் பிடித்தவர் டி.ராமநாயுடு ஆவார்.



சினிமாத் துறையில் உலக அளவில் மிகவும் உயர்ந்த விரு தாகக் கருதப்பட்டு வரும் ஒஸ்கார் விருதுகள் 'அக்கடமி ஒப் மோசன் பிக்சர் அன்ட் சயன்ஸ்' என்ற அமைப்பினால் 1929 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றது. 1929 ஆம் ஆண்டு இந்த விருது வழங்கப்பட்ட போது இதற்குப் பெயர் 'அக் கடமி விருது' என்றே அழைக்கப்பட்டது என்பது பலர் அறியாத விடயம்.

காரை ரி.கஜேந்திரன்,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

## விழித்திரு

இன்னல்கள் மத்தியில்
வாழுகின்ற மானிடம்
திக்குத் திசையறியாது கற்பனையுடன்
இன்னல்கள் கண்டு
இரங்கித் தவிக்கின்றது.
நாட்டின் அவலங்கள்
எண்ணில் அடங்காது
நாற்றிசையும் நம்
உறவுகளே சிதறிக்கிடக்கின்றன.
கேட்பதற்கு யாருமின்றி
அநாதைகளாய் கிடக்கின்றன
நம் உறவுகளின்
நிலை கண்டு- யாரும்
நியாயம் கேட்பதில்லை.
சிகரங்களாய் கற்சுவடுகளாய்
நிற்கும் நினைவலைகள்- எம்மை
சுமை தாங்கிகளாக்குகின்றன.
பட்டினி பசியுடன் வாடுகின்ற
நம் உறவுகள்
பரிதாபப்படுகின்ற நம்
நினைவுக்கரங்கள்
இத்தனையும்
ஆண்டவனின் செயலோ..?
விதி நம்மீது கொண்ட
விளையாட்டோ..?
என்னவென்றும் புரியவில்லை
ஏதென்றும் உணரவில்லை
நமக்காய் விடிவுவரும்.
விடிவைத் தேடி நாம்
அனைவரும்
ஒன்றாய்ப் புறப்படுவோம்

ப.அரிரா



## வீதி விபத்து



வீதியோ அகலம் விபத்திலொரு வேகம்
மோதிக் கிடக்கின்ற மோட்டார் சைக்கிள்கள்
பாதி அகலத்தில் பயணித்த வாகனங்கள்
வீதி அகலத்தால் வீணே புரள்கின்றன

ஓடி வருகின்ற ஒற்றை வாகனங்கள்
சீறி வருகின்ற சீரற்ற வண்டிகள்
லேடி அமர்ந்திருக்கும் லேற்றஸ் வெகிக்கிள்கள்
கூடிக்கிடக்கின்றன வீதி விபத்தினிலே

சிக்னலையோ பார்ப்பதில்லை சிந்தனையோ தெருவிலில்லை
பக்கத்திலே வரும் வண்டி பார்த்தாலும் தெரிவதில்லை
நேரமோ போகுதென்று நிம்மதியோ எதிலுமில்லை
நூறிலே வேகங்கூட்டி சுக்கு நூறாகும் விபத்ததனால்

சாரதி சுய நினைவிலில்லை சனங்களோ சலசலப்பு
ஆக ஒரு கதி கூட்டி அதிகரித்து மீற்றர் கூட்டி
வீதியிலே வருகின்ற விருத்தர்கள் தெரியாமல்
பாதியிலே போகின்ற உயிர்ப்பலிகள் எத்தனையோ!

சுகந்தினி முருகேசு,
அச்சுவேலி தெற்கு.

## புதைத்து விடாதீர்கள்...



ஆற்றுப் படுக்கையில்
ஆடை குறைத்து
வேற்றுக்கிரகவாசிகள் போல்
வீழ்ந்து கிடக்கும்
சமூகமே
நீங்கள் நடந்து செல்லும்
மணல்மேடுகளில்
புதைந்து கொண்டிருப்பது- உங்கள்
பாதங்கள் மட்டுமல்ல - நாம்
காலம் காலமாய்
கட்டிக் காத்த நம்
கலாசாரமும் தான்

பெ.சதா,
செல்வநகர், கிளிநொச்சி.

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

### தமிழர் திருநாளான தைப்பொங்கல் இன்று

| பாரம்பரியங்களின்படி கொண்டாடப்படுகின்றது | பாரம்பரியங்களை மீறி கொண்டாடப்படுகின்றது |
| --- | --- |
| ☐ | ☐ |

பெயர்: ........................................

முகவரி: ........................................

அடையாள அட்டை இல..

........................................

உங்கள் தீர்ப்புக்களை 29.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர் :-........................................

முகவரி :- ........................................

........................................

........................ திகதி

........................ கையொப்பம்

# கிழக்கில் தொடரும் பெரு மழை பல குடும்பங்கள் இடம்பெயர்வு

## மட்டு, திருமலையில் குளங்கள் திறப்பு

மட்டக்களப்பு,டிசெ.22

கிழக்கு மாகாணத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் இந்தப் பகுதிகளிலுள்ள மக்களை அவதானத்துடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ள அபாயம் தோன்றியுள்ளது.

இந்த மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடைவிடாது மழை பெய்த வண்ணம் உள்ளதால் தாழ் நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், வடிகால் அமைப்பு இல்லாத வீதிகளிலும் வெள்ளநீர் நிரம்பிக் காணப்படுகின்றது.

அது மட்டுமல்லாமல், குளங்கள், ஆறுகளின் நீர் மட்டங்களும் உயர்ந்து காணப்படுகின்றன.



இதனால் மட்டக்களப்பு, காத்தான்குடி, புதிய காத்தான்குடி, ஏறாவூர், வவுணதீவு, செங்கலடி, ஓட்டமாவடி, மண்முனை, ஒல்லிக்குளம், சிகரம் முதலிய பிரதேசங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

**திருகோணமலை**

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ்நிலப்பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. கால்வாய்களில் மழைநீர் பெருக்கெடுத்துச் செல்வதால் அண்மையிலுள்ள பல நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தோப்பூர், கிளிவெட்டி, பட்டித்திடல், கங்குவேலி, வெருகல், ஈச்சிலம்பற்று, பள்ளிக்குடியிருப்பு, தம்பலகாமம் உட்பட்ட பல பிரதேசங்களிலுள்ள அதிகமான நெல்வயல்கள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

கூலித்தொழிலாளிகள் மழை காரணமாக வீடுகளிலே வருமானமின்றி முடங்கிக் கிடக்கின்றனர். மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது டன் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்பட்டுள்ளன. மரக்கறிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், விலைகளும் உயர்வடைந்துள்ளன.

திருகோணமலை - புல்மோட்டை வீதியின் மூன்றாவது மைல் கல் பிரதேசத்தில் 2 அடிக்கு மேலாக வெள்ள நீர் தேங்கியுள்ளது.

வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதையடுத்துப் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இந்தக் குடும்பங்களைத் தங்க வைப்பதற்கென முகாமொன்று அமைக்கப்பட்டிருப்பதாக பேரிடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

**அம்பாறை**

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர் மழை காரணமாக வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வீசிய கடும் காற்றினால் பல வீடுகளின் கூரைகள் தூக்கி வீசி எறியப்பட்டன.

கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதுடன், குளிர் காலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ச)

## கப்பம் பெற்றோர் கைது

திருகோணமலை,டிசெ.22

திருகோணமலை, வெள்ளை மணல் பகுதியிலுள்ள வைத்தியரைக் கடத்தி கப்பம் பெற்ற ஐந்து பேரை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை குச்சவெளி பொலிஸார் ஹொரவப்பொத்தானைப் பகுதியில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

குச்சவெளி பொலிஸ் பொறுப்பதிகாரி குணத்திலகவின் உத்தரவுக்கமையவே இந்தச் சந்தேகநபர்களைத் தாம் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் எம்.தமீம், பெரும் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஐ.ஜீ.குணசேகர ஆகியோர் மேற் கொண்ட நடவடிக்கையில் இவர்கள் ஐவரும் ஹொரவப்பொத்தானையில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் குழுவினர் கடந்த டிசெம்பர் 2 ஆம் திகதி நிலாவெளி பகுதியில் இந்த வைத்தியரைக் கடத்தி 10 லட்சம் ரூபா பணம் கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## மீனவரின் சடலம் மீட்பு

வாழைச்சேனை துறைமுகக் கடலில் இயந்திரப் படகிலிருந்து வீழ்ந்த மீனவரொருவரின் சடலம் கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

தங்கல்ல பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான ஜி.பி.எச்.சுஜி பியந்த (வயது - 42) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

தங்கல்ல பகுதியைச் சேர்ந்த 3 மீனவர்கள் இயந்திரப் படகில் ஆழ்கடல் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். ஆழ்கடல் பகுதியில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக மீண்டும் தங்கல்ல பகுதியை நோக்கிச் செல்லமுடியாமல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வாழைச்சேனை துறைமுகப் பகுதியில் இவர்கள் கரையொதுங்கினர் என்று வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது இந்தப் படகிலிருந்த மீனவர் எதிர்பாராத விதமாக படகிலிருந்து கடலில் வீழ்ந்துள்ளார். இதனையடுத்து வாழைச்சேனை பிரதேச மீனவர்களின் உதவியுடன் இவரின் சடலம் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

# பேராதனை பல்கலைக்கழக மாணவரின் பேரணிக்கு தடை

## நீதிமன்றம் உத்தரவு

பேராதனை,டிசெ.22

தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பித்தல் உள்ளிட்ட பல விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்த இருந்த பேரணியை கைவிடுமாறு கண்டி நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், நேற்று புதன்கிழமை பேராதனையிலிருந்து கொழும்பு வரை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருந்தபேரணியை கைவிடுமாறே கண்டி நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தப் பேரணி தொடர்பாக, பேராதனைப் பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த நீதிமன்றம் பேரணியை கைவிடுமாறு மாணவர் சங்கம் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

பேரணி நடைபெற்றால் கொழும்பு - கண்டி வீதிப் போக்குவரத்துப் பாதிப்பு, மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பாதிப்பு, சமாதானம் சீர்குலையும், மோதல் நிலை ஏற்படும் உள்ளிட்ட பல விடயங்களைக் கருத்திற் கொண்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதேவேளை, நீதிமன்ற உத்தரவை அடுத்து பேராதனை பல்கலைக்கழக வளாகத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.(ச)



இடமாற்றம் வழங்கப்படாமையைக் கண்டித்து கல்முனைப் பிரதேச ஆசிரியர்கள் நேற்றுமுன்தினம் திருகோணமலையில் உள்ள மாகாணக்கல்வி அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மற்றவர்களுக்கு உதவுவதன் மூலமே மனிதனிடம் பிறக்கிறது மனிதநேயம்

## மாநகர சபை உறுப்பினர் கூறுகிறார்

வத்துகாமம், டிசெ.22

ஒரு மனிதனுக்கு மற்றொரு மனிதன் சேவை செய்வதன் மூலமே அவனிடத்தில் மனிதத் தன்மை பிறக்கிறது. அப்படியில்லாத பட்சத்தில் மனிதனும் மிருகமும் சமமானவர்கள் என்று கண்டி மாநகரசபை ஸ்ரீ.ல.மு.கா உறுப்பினர் அஸ்மின் ·மரிக்கார் தெரிவித்துள்ளார்.

பெல்கொல்லையில் இடம் பெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனிதன் பிறருக்கு உதவுவதன் மூலம் அவனிடத்தில் மனிதநேயம் பிறக்கிறது. மற்றொரு உயிருக்கு உதவி செய்யாத வரையில் அவன் மனிதத் தன்மையைப் பெறமுடியாது.

நாம் சமூக சேவைகளை மேற்கொள்ளும்போது இன, மத, மொழி வேறுபாடுகளை மறந்து செயற்படவேண்டும்- என்றார். (ச)

# விதவைகளுக்கு சுய தொழில் பயிற்சி கிழக்கில் விரைவு திட்டங்கள் தயார்

மட்டக்களப்பில் உள்ள விதவைகளுக்கு சுயதொழில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதற்காக 40 பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கிழக்கிலுள்ள விதவைகளின் ஜீவனோபாய மேம்பாட்டுக்கென இந்திய அரசு நிதி வழங்கியுள்ள தாகச் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதன் முதற்கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விதவைகளுக்கு சுய தொழில் பயிற்சிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 49 ஆயிரம் விதவைகள் உள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 25 ஆயிரம் பேர் உள்ளனர்.

இதற்கமையவே மட்டக்களப்பு மாவட்டத்தை இந்தத் திட்டத்துக்கென முதலில் தெரிவு செய்துள்ளோம். 800 விதவைகள் தற்போது இந்தத் திட்டத்திற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்துக்கு போரினால் விதவைகளான மற்றும் 40 வயதுக்குக் குறைந்த விதவைகளே தெரிவு செய்யப்படுவர்.

இவர்களில் 25 பேருக்கு இந்தியா அஹமதாபாத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்கள் நாடு திரும்பியவுடன் இவர்களை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கநடவடிக்கை எடுக்கப்படும்.

மட்டக்களப்பு, வாழைச்சேனை ஆகிய பகுதிகளிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பயிற்சி நிலையங்களில் விதவைகளுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்வதன் மூலம் மாதமொன்றுக்கு சுமார் 15 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபாவரை வருமானமாகப் பெறக்கூடிய சந்தர்ப்பம் விதவைகளுக்குக் கிடைக்கும் - என்றார்.

(ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வாகன யோகத்துக்கு வாய்ப்பு உண்டு. கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். மலைபோல் குவிந்த வேலைகளையும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு முடிப் பீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும்.

**இடபம்:**
சிக்கலாகுமோ என்று பயந்த ஒரு விடயம் எளிதாக முடிந்து விடலாம். பற்றாக்குறை தீரும் வகையில் புதிய வரவுகள் வந்து சேரலாம். உத்தியோக சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். வியாபாரிகள், வர்த்தக விடயங்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் அக்கறை காட்டுவர். உங்களின் குடும்பப் பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள்.

**மிதுனம்:**
செவிகுளிரும் செய்திகளைக் கேட்கலாம். சிறிய வேலை ஒன்றுக்கு, பெரியளவில் அலட்டிக் கொள்வீர்கள். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். ஓய்வெடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். வயிறு, வாயு உபாதையுண்டு.

**கடகம்:**
சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். அரசியல்வாதிகள் மேலிடத்தவர்களின் ஆதரவைப் பெறலாம். வீட்டுக்குத் தேவையான சில பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சில விடயங்களில் தயக்கத்துடன் முடிவெடுத்தாலும், அதில் இறுதியில் வெற்றி காண்பீர்கள். பேராசைகள் உண்டாகும்.

**சிங்கம்:**
அடுக்கடுக்காகப் பல வேலைகளைச் செய்ய திட்டமிட்டு இன்று அனைத்தையும் செய்து முடிப்பீர்கள். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகளைப் பெறலாம். உங்களின் திறமையான செயற்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படலாம். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரைச் சந்திக்கலாம்.

**கன்னி:**
சில விடயங்களில் கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டாமல் போனது போன்ற சூழ்நிலை உருவாகலாம். உங்களிடம் பணமிருந்தும் நண்பர்கள் சிலருக்கு உதவி செய்யாமல் தட்டிக் கழிக்கலாம். குடும்ப உறுப்பினர்களின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும்.

**துலாம்:**
சுகமான இனிய அனுபவங்களைப் பெறலாம். வழக்கமான சில பணிகளை தங்குதடையின்றிச் செய்து முடிப்பீர்கள். கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த முக்கிய தகவல்கள் வந்து சேரலாம். பெற்றோரின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். எதிர்பாராமல் நடக்கும் நிகழ்ச்சிகளால் வியப்பு, சந்தோஷம் அடையலாம். ஆனந்தமான நாள்.

**விருச்சிகம்:**
கருணை, பரிவுடன் நடந்து கொள்வீர்கள். மற்றவர்களின் விமர்சனங்களுக்கு ஆள்படாமல் இருக்க சில வேலைகளை அவசரமாகச் செய்து முடிப்பீர்கள். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகள் அனுகூலமாக முடியலாம். தொலைபேசி வழிச்செய்திகள் உங்களுக்கு மகிழ்ச்சி அல்லது கவலை தருவதாக அமையும்.

**தனுசு:**
நண்பர் ஒருவரின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பீர்கள். கூட்டுத் தொழில் புரிவோர், பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். குறை சொல்லிக் கொண்டிருந்த உறவினர் ஒருவரே, உங்களைப் பாராட்டும் சூழ்நிலை உருவாகலாம். உங்களுக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம்.

**மகரம்:**
மதிப்பு, மரியாதை அதிகரிக்கும் நாள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் கூடும். வீடு, இடமாற்ற விவகாரங்களில் முன்னேற்றம் உண்டு. பொது விடயங்களில் அக்கறை காட்டி புகழ் பெற நினைப்பீர்கள். இதுவரை வராத உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டுக்கு வரலாம். நீண்டநாளைய பிரச்சினை ஒன்று, இன்று தீர்வுக்கு வரலாம்.

**கும்பம்:**
பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில், நீங்களும் கலந்து கொள்ளலாம். உங்களுக்கு எதிராக செயற்படும் சிலர் முன்னர், நண்பர் ஒருவர் உங்களைப் பாராட்டலாம். மற்றவர்களால் செய்து முடித்த சில வேலைகளை, தங்களால் செய்ய முடியவில்லையே என்று ஆதங்கம் அடைவீர்கள். சிலர் உங்களின் செயற்பாடுகளில் சந்தேகம் கொள்ளலாம்.

**மீனம்:**
இறை வழிபாட்டின் மூலம் திருப்திகாண வேண்டிய நாள். சிலரின் வருகைக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம். பெரிய அளவில் திட்டமிட்ட வேலை ஒன்று, பெரிய மனிதர்கள் சிலரின் நடவடிக்கையால் தடைப்படலாம். பெற்றோர், குடும்ப உறுப்பினர்களுடன், கடும் வாக்குவாதம் செய்யலாம். தண்டச் செலவுகள் நேரும்.

# பேச்சில் மு
# நடுநிலையா
# கூட்டமைப்ப
# சிந்திக்கிறது

கேள்வி:- பேச்சின் ஓர் அம்சமாக நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ்க் கூட்டமைப்பு அங்கம் வகிக்க வேண்டுமென அரசு வலியுறுத்துகிறது. ஆனால், அதனை கூட்டமைப்பு மறுக்கிறது. ஏன் இந்த விடாப்பிடி நிலைமை?

ப:- இது தொடர்பாக நாம் மிகவும் தெளிவான நிலைப்பாட்டில் இருக்கின்றோம். ஓகஸ்ட் மாதம் நான்காம் திகதி பேச்சில் தடங்கல் ஏற்பட்டது. 5 மாதங்களாக 7 சுற்றுப் பேச்சு நடைபெற்றிருந்தபோதுகூட இலங்கை அரசு நாங்கள் முன்வைத்த பிரேரணைகளுக்கு அவர்களுடைய வாக்குறுதியின்படி பதில் தரவில்லை. பேச்சை நாங்கள் ஆக்கபூர்வமாக முன்னெடுக்க முடியவில்லை.

ஏழு சுற்றுப் பேச்சு நடைபெற்று ஐந்து மாதங்கள் கழிந்த பிறகு ஆவணி மாதம் நான்காம் திகதி நடைபெற்ற பேச்சின்போது அடுத்த திகதியை நாம் குறிப்பிடமுடியாது என்று நான் மிகவும் தெளிவாகக் கூறினேன். ஏனென்றால், எங்களுடைய முன்மொழிவுக்குப் பதிலாக அவர்கள் தங்களுடைய முன்மொழிவைத் தரவில்லை. எனவே, பேச்சை எங்களால் ஆக்கபூர்வமாக முன்னெடுக்க முடியாமல் இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தினேன்.

நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுகிறோம்; ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்தி நல்லிணக்கத்தை காண முயற்சிக்கிறோம் என உலகத்திற்கு நீங்கள் காட்டிக் கொள்ள விரும்புகிறீர்கள்; ஆனால், உண்மையில் பேச்சு மேசையில் ஒன்றும் நடைபெறவில்லை; நாங்கள் இங்கு வந்து மேசையில் குந்துவதன் மூலமாக இந்த ஏமாற்றத்தை தொடருவதற்கு வாய்ப்பை அளிக்கின்றோம்; உண்மையில் நாங்கள் உங்களுக்கு உதவுகின்றோம்; அதை எங்களால் செய்ய முடியாது. ஆனபடியால் அடுத்த திகதியைக் குறிப்பிட முதல் உங்களுடைய பதில் வர வேண்டும். உங்களுடைய பதில் வந்த பிறகு நாங்கள் பேச்சுக்கான திகதியைக் குறிப்பிட்டு பேச்சை ஆரம்பிக்கலாம் என்று நாங்கள் கூறினோம்.

எமது இந்த நிலைப்பாட்டைத் தொடர்ந்து எனக்கும், ஜனாதிபதிக்குமிடையில் செப்ரெம்பர் மாதம் இரண்டாம் திகதி ஒரு பேச்சு நடைபெற்றது. அந்தப் பேச்சில், ஜனாதிபதி எங்களுடைய நிலைப்பாடு குறித்து என்னிடம் பேசினார். தாங்கள் பதிலைத் தருவதில் தனக்குள்ள கஷ்டங்களை அவர் எனக்குச் சொன்னார். அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தாலும்கூட - அவர்களுக்குச் சில சிரமங்கள் இருக்கலாம் - சில ஆவணங்களை நாம் பேச்சு மேசைக்கு கொண்டுவர வேண்டும் என்று நான் அப்போது அவரிடம் தெரிவித்தேன்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட சில ஆவணங்களை பேச்சில் ஆராய்வதற்குக் கொண்டு வரலாம் என்று கூறினேன். மங்கள முனசிங்க தெரிவுக்குழுவினால் செய்யப்பட்ட சிபாரிசுகள், ஜனாதிபதி பிரேமதாஸ மற்றும் சந்திரிகா காலங்களில் அவர்களால் கொண்டுவரப்பட்ட அரசியல் திருத்தப் பிரேரணைகள் என்பவற்றை அலசலாம் என்பதே எனது கருத்து.

ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டில் ஆற்றிய உரை, அவரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை - இந்த ஆவணங்கள் போன்றவை எல்லாம் பேச்சு மேசைக்கு வரவேண்டுமென நான் கேட்டபோது, இது விடயமாக எங்களுக்குள் கருத்து பரிமாறப்பட்டது. அந்த ஆவணங்களைக் கொண்டு வருவதாக அவரும் சொன்னார்.

அப்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு பற்றியும் அவர் என்னுடன் பேசினார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நாம் பங்குபற்ற முன்னர் அதில் எனக்கு நம்பிக்கை இல்லை என்றபோதிலும் நீங்கள் அது உங்களுக்குத் தேவையெனக் கூறினால் அதைப் பற்றி நாங்கள் சிந்திக்கத் தயார் என்று நான் கூறினேன். அதேவேளை, எங்களுக்கு இடையில் நடைபெறுகின்ற பேச்சுக்கு அர்த்தம் என்னவென்று கேட்டேன். அப்போது அவர் சொன்னார் அந்த பேச்சு தொடரும், அரசுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையில் நடைபெறும் பேச்சு தொடரும் என்று சொன்னார். அந்தப் பேச்சில் எட்டப்படும் முடிவுகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்கு முன்னால் கொண்டுவரப்படும் என்று எனக்குச் சொன்னார். சரி, அப்படியானால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ன அடிப்படையில் (TERMS OF REFERENCE) நியமிக்கப்படவுள்ளது என்பதை நான் பார்க்க விரும்புகிறேன் என்று கூறினேன். உடனே அதன் பிரதிகளை எங்களுக்கு அனுப்பினார். அது எமக்குத் திருப்தியளிக்கவில்லை. பின்னர் அது மாற்றப்பட்டது; எங்களுக்கு திருப்தியளிக்கும் வகையில் மாற்றப்பட்டது.

**வெளிநாட்டுத் தலையீடுகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று நீங்கள் (அரசு) கூறினால் ஏன் ஜெனிவாவுக்குப் போகிறீர்கள்? ஏன் நியூயோர்க்குக்குப் போகிறீர்கள்? ஜெனிவா மனித உரிமைகள் கூட்டம் நடைபெறும்போது ஏன் நீங்கள் அதற்குப் பதில் சொல்லுகிறீர்கள். பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லையே? நீங்கள் இங்கே இருந்துகொண்டு உங்கள் வெளிவேலைகளைச் செய்துகொண்டு இருக்கலாமே? இவ்விதமான வரட்டு நியாயங்கள் நாட்டுக்கு உதவாது.**



உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வி

நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கான பிரேரணையும் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அந்தக் குழு இன்னமும் நியமிக்கப்படவில்லை. ஏனென்றால், கட்சித் தலைவர்களே குழுவுக்கான தமது பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும். எங்களுடைய பிரதிநிதிகளின் பெயர்களைத் தரும்படி கேட்டனர். நாம் கொடுக்கவில்லை.

எங்களுக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சில், எங்கள் இருதரப்பிற்கும் இடையில் இன்னமும் ஓர் இணக்கப்பாடு ஏற்படவில்லை என்பதே இதற்கான காரணம். நான் பெயர்களைக் கொடுத்தால் அவர்கள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பார்கள். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்து விட்டால் இங்கே இணக்கம் காணப்பட்டவற்றை அதன் முன் கொண்டு போவதற்கு எதுவும் இருக்காது. அவ்விதமான ஒரு நிலைமை உருவாகும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தங்களுடைய பெயர்களைத் தந்து விட்டு அதனை பகிஷ்கரிக்கிறது என்று அவர்கள் உலகத்திற்கு சொல்வார்கள். எனவேதான் நான் தெட்டத்தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இங்கே கணிசமான அளவு இணக்கம் காணப்பட்ட பிறகுதான் உங்களுக்கு நாங்கள் பெயர்களைத் தரலாம் என்று. அதற்கு முன்னர் தரமுடியாதென்று நாம் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். இதுதான் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பிலான எமது ஒரே நிலைப்பாடு.

*கே:- தீர்வுப் பேச்சுக்களுக்கு ஏதாவது ஒரு கால வரையறை விதித்திருக்கிறீர்களா? இந்த வருட இறுதிக்குள் ஒரு தீர்வை முன்வைக்க அரசு முன்வர வேண்டுமென உங்களது கட்சி உறுப்பினர்கள் சிலர் தெரிவித்திருந்தனரே?*

ப:- நாங்கள் இதுவரை காலவரையறை விதிக்கவில்லை. ஆனால், நான் உங்களுக்குக் கூறியதன் பிரகாரம் நாங்கள் சில, பல கட்டங்களில் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அது காலவரையறையை நிர்ணயிக்காவிட்டாலும்கூட மற்றப் பகுதியினருக்கு எமது நிலைமையை தெளிவாகச் சொல்லுவதற்குத் தக்க நடவடிக்கைகளாக இருந்துள்ளன. கட்சியில் பலர் பலவித கருத்துக்களை வெளியிட்டாலும் எங்களுடைய கட்சி ரீதியான இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை. இந்த விடயம் சம்பந்தமாக மிகவும் ஆழமாகவும், கவனமாகவும் சிந்தித்து எடுக்கவேண்டிய முடிவை எடுக்க வேண்டிய நேரத்தில் எமது கட்சி எடுக்கும்.

*கே:- நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமன விவகாரத்தினால் அரசுக்கும், கூட்டமைப்புக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சில் அண்மையில் விரிசல் ஏற்பட்டதாகச் செய்திகள் வந்தன. கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரத்துக்கு, இந்த நிலைமை அதிர்ச்சி*

# ..ழன்றாவது ..பாளர் பற்றி ..பு ..து

**2**

செவ்வி கண்டவர்:
ஆர்.சிவராஜா

## ஆனால் அதுநடக்குமா என்று சொல்ல சம்பந்தன் மறுப்பு

**யைக் கொடுத்ததாகவும் அறிந்தோம். அரசுடனான நீங்கள் நடத்தும் பேச்சுக்கு மேற்குலக நாடுகளின் ஆதரவு கிடைத்து வருகிறதா?**

ப:- விரிசல் என்றுபத்திரிகைகள் கூறிய விடயம் ஏற்பட்ட காரணத்தை நான் கூறுகிறேன். இலங்கை அரசு சார்பில் பேசுகின்ற குழுவானது, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான பெயர்களை நாம் தரவில்லை என்று எம்மிடம் பேச்சின் போது கூறியது. நீங்கள் பெயர்களைத் தராவிட்டால் பேச்சை எப்படி முன்னெடுப்பது என்று அவர்கள் கேட்டனர்.

ஜனாதிபதிக்கும், எனக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட தெளிவான விளக்கம் என்னவெனில், இந்த இரு தரப்புப் பேச்சில் காணப்படுகின்ற இணக்கப்பாடுதான் நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னால் வைக்கப்படும் என்பதாகும். ஆனால், இங்கோ எந்த இணக்கப்பாடும் ஏற்படவில்லை. ஆதலால் தற்போது பெயரைத் தரமுடியாது என்று மாறாத நிலைப்பாட்டைச் சொன்னோம்.

பேச்சை நாம் தொடரலாம். இணக்கப்பாட்டை காண நாம் முயற்சிக்கலாம். கணிசமான இணக்கப்பாடு கண்ட பின்னர் எங்களுடைய நிலைமையில் மாற்றம் ஏற்படலாம். அதுவரை மாற்றம் ஏற்படமுடியாது என்பதை நாம் தெளிவாகச் சொன்னோம். அதில் சர்வதேச சமூகத்தின் அழுத்தம் எமக்கு இல்லை.

நாங்கள் பல நாடுகளுடன் பேசுகிறோம். எல்லா நாடுகளுடனும்கூடப் பேசுகிறோம். ஆனால், எவரும் எங்கள் மீது அழுத்தத்தை பிரயோகித்ததில்லை. பொதுவாக அந்த நாடுகள், பேச்சு மூலமாக தீர்வு ஏற்பட வேண்டும் என்றே விரும்புகின்றன. அதை நான் ஒத்துக் கொள்கிறேன். எந்த நாடாக இருந்தாலும் இதுதான் நிலைமை. ஆனால், எடுக்கப்பட்ட முடிவுகள் அத்தனையும் நாங்கள் சுதந்திரமாக எடுத்த முடிவுகள். அழுத்தங்களின் காரணங்களால் எடுக்கப்பட்ட முடிவுகள் அல்ல. நாங்கள் எமது சிந்தனையின் அடிப்படையில் திடமான முடிவுகளையே எடுத்தோம்.

**கே:- பேச்சில் இருதரப்பும் விட்டுக்கொடுக்காத ஒரு நிலைமை தொடர்ந்தால் எதிர்காலத்தில் ஏதாவது ஒரு வெளி நாட்டை நடுநிலையாளராக ஏற்பாடு செய்யும் வாய்ப்பு இருக்கிறதா?**

ப:- அந்த விடயங்கள் சம்பந்தமாக நாங்கள் சிந்தித்திருக்கிறோம். ஆனால், அதைப்பற்றி நாங்கள் பகிரங்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

**கே:- அதற்கான வாய்ப்புகள் உண்டா?**

ப:- அதைப் பற்றி நாங்க்ள் சிந்திக்கிறோம்.

**கே:- இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அதை நாங்கள் தவறவிட்டோம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிக்கடி கூறிவருகிறார். உண்மையில் நாங்கள் தவறவிட்டோமா..? நீங்கள் கூறுங்கள்?**

ப:- அவர் சொன்ன கருத்துக்களைப் பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. அவரைப்பற்றியும் நான் அதிகம் பேச விரும்பவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் சில விசேடமான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒன்று - இலங்கையில் பல இனங்களைச் சேர்ந்த பல மதங்களை, மொழிகளைச் சேர்ந்த சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர்; சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் கலை, கலாசாரம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது அதனுடைய தெளிவான நிலைப்பாடு. அதாவது இலங்கை தனியான ஒரு இனத்திற்கு சொந்தமான ஒரு நாடல்ல என்பதே அதன் சாராம்சம்.

இரண்டாவது - வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் சரித்திர ரீதியாக தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் அந்த ஒப்பந்தம் ஏற்றுக்கொண்டிருந்தது. அந்த பிரதேசங்கள் இணைக்கப்பட்டு ஓர் அலகு உருவாகலாம்; ஆனால், இலங்கையினுடைய ஒற்றுமை, ஒருமைப்பாடு என்பவற்றை பேணிப்பாதுகாக்க வேண்டிய கடப்பாடு எல்லோருக்கும் உண்டென்ற முக்கியமான கருத்துக்கள் அதில் உள்ளன. துரதிஷ்டவசமாக, பல்வேறு காரணங்களின் நிமித்தம் அந்த ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு இலங்கை அரசுடன் பேசியவர்கள் நாங்களே. தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள். அந்த பேச்சு நீண்ட பேச்சு. 1986ஆம் ஆண்டு ஆடி, ஆவணி மாதங்களில் தொடர்ச்சியாக நடைபெற்றது. பல நாள்களாகப் பேச்சு நடந்தது. 13 ஆவது திருத்தமானது, அந்தப் பேச்சின் இறுதியில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அமையவில்லை. அப்படி அமைந்திருந்தால் நாங்களே 1988ஆம் ஆண்டு நடந்த மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றியிருப்போம். அது முடிந்த விடயம். அதைப்பற்றி இப்போது கதைப்பதில் பயன் இல்லை.

நான் சுருக்கமாகச் சொல்வது இதுதான். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதற்கு பிறகு எல்லா அரசுகளுடனும் ஒன்றாக இருந்திருக்கிறார். இருந்தும் அவர் ஒன்றையும் அடையவில்லை. இந்த விடயத்தில் அதற்கு மேலதிகமாக எதனையும் நான் பேச விரும்பவில்லை. நாம் எல்லோரும் ஒற்றுமையாக மக்களின் இந்த துன்பத்தைத் தீர்த்து, மக்களுக்கு விமோசனத்தைக் காணவேண்டும். ஒருவர் மீது மற்றவர் குறை சொல்லாமல், கூட்டு முயற்சியாக இந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்.

**கே:-நாடாளுமன்றத்தில் நீங்கள் அண்மையில் ஆற்றிய உரையில் போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தினீர்கள். உங்கள் உரையின் பின்னர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், உரையாற்றுகையில் வெளிநாட்டு தலையீடுகளை அனுமதிக்க முடியாது எனக் கூறினார். உங்களின் நிலைப்பாடு என்ன?**

ப:- எங்களுடைய கருத்தை நாங்கள் வலியுறுத்திச் சொல்லியுள்ளோம். என்னுடைய உரையை தமிழில் நீங்கள் மொழிபெயர்த்து பிரசுரித்தால் மக்களுக்கு அது தெரியும். பல சர்வதேச ஒப்பந்தங்களில் இவர்கள் கையொப்பமிட்டுள்ளனர். அந்த ஒப்பந்தங்களை தாங்கள் நிறைவேற்றுவோம் என்று ஐக்கிய நாடுகள் சபையிடமும், சர்வதேச சமூகத்திடமும் இவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். அந்த ஒப்பந்தங்களை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு இவர்களுக்கு உண்டு. அதை நாங்கள் நிறைவேற்ற மாட்டோம் என்று இவர்களால் சொல்ல முடியாது.

இறைமை என்பது ஆட்சியிலுள்ள ஓர் அரசு தனது நாட்டு எல்லைக்குள் எதையும் விதிக்கலாம், எதையும் செய்யலாம் என்ற அதிகாரத்தைக் குறிப்பதல்ல. இறைமை என்பது மக்களுக்குரியது. அது ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு மட்டும் உரியதல்ல. எல்லா இனங்களைச் சேர்ந்த மக்களுக்கும் உரித்தானது. ஆட்சியதிகாரங்கள், சட்டத்தை ஏற்படுத்தும் அதிகாரம், நிர்வாக, நீதி அதிகாரங்கள், அடிப்படை மனித உரிமைகள், ஜனநாயக வாக்கு முறைமை என்பனதான் இறைமையின் அர்த்தங்கள். நாட்டிலுள்ள எல்லா இனங்களைச் சேர்ந்த மக்களுக்கும் இதில் உரித்துண்டு.

இந்த இறைமைக் கோட்பாட்டின் அடிப்படையில் நாட்டில் ஆட்சி நடைபெறாதுவிட்டால் ஆட்சியாளர்களே நாட்டின் இறைமைக்குத் தீங்கு விளைவிப்பவர்களாகிறார்கள். அவ்விதமாக நீங்கள் (அரசு) தீங்கு விளைவிக்கின்றபோது சர்வதேச விதிகளையும், சர்வதேச ஒப்பந்தங்களையும் நீங்கள் மீறி நடக்கிறீர்கள் என்று அர்த்தம். நீங்கள் மீறி நடக்கும்போது சர்வதேச சமூகம் உங்களிடம் கேள்வி கேட்கலாம். அது விடயம் சம்பந்தமாக உங்களுடன் பேசலாம். உங்களைத் திருத்துவதற்கு முயற்சிக்கலாம்.

வெளிநாட்டுத் தலையீடுகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று நீங்கள் (அரசு) கூறினால் ஏன் ஜெனிவாவுக்குப் போகிறீர்கள்? ஏன் நீங்கள் நியூயோர்க்குக்குப் போகிறீர்கள்? ஜெனிவா மனித உரிமைகள் கூட்டம் நடைபெறும்போது ஏன் நீங்கள் அதற்கு பதில் சொல்லுகிறீர்கள். பதில் சொல்லவேண்டிய அவசியமில்லையே? நீங்கள் இங்கே இருந்துகொண்டு உங்கள் வெளிவேலைகளைச் செய்துகொண்டு இருக்கலாமே. இவ்விதமான வரட்டு நியாயங்கள் நாட்டுக்கு உதவாது.

இன்றைக்கு இந்த விதமான போக்கின் காரணமாகத் தான் இலங்கை அரசு சர்வதேச ரீதியாக குற்றவாளிக் கூண்டில் நிற்கிறது. அதனை நாங்கள் விரும்பவில்லை. நாங்களும் இந்த நாட்டு மக்களே. எமது நாட்டை போதிய கௌரவத்துடன், மதிப்புடன் சர்வதேசம் பார்ப்பதையே நாங்கள் விரும்புகிறோம். ஆனபடியால் எங்கள் மக்கள் சார்பில் மாத்திரமல்ல நாட்டின் சார்பில்கூட அரசின் இத்தகைய குற்றங் களை, குறைகளைச் சுட்டிக்காட்டக்கூடிய கடமைப்பாடு எமக்கு இருக்கிறது. அரசு தனது கடமைகளில் தொடர்ந்து தவறிழைத்தால் அதனுடைய விளைவுகள் என்னவிதமாய் இருக்குமென்பதைக் கூறவேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.

அது என்னுடைய கருத்தாக மட்டுமல்ல. சர்வதேச சமூகத்தினர் முன்வைத்த ஆவணங்களை, விடயதானங்களை மேற்கோள் காட்டியே எனது கருத்தை கூறியிருக்கிறேன். வெளிநாடுகளின் சொல்லைக் கேட்கவேண்டுமென நாங்கள் அவர்களிடம் சொல்லவில்லை. நீங்கள் (அரசு) சரியானதைச் செய்தால் வெளிநாடுகள் இதில் தலையீடுகளை செய்யவேண்டிய அவசியம் இல்லை. சரியானதைச் செய்யுங்கள். செய்ய வேண்டிய கடமைப்பாடு உங்களுக்கு இருக்கிறது. அவ்விதமாக நீங்கள் தொடர்ந்து செய்யாமல் தவறினீர்களாக இருந்தால் வேறு விடயங்கள் ஏற்படலாம் என்றுதான் நாங்கள் கூறி வருகிறோம்.

*(நாளையும் வரும்)*

## அன்பு



'அன்பாக இருக்க வேண்டும்' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அன்பில் எத்தனையோ வகைகள் உள்ளன. அவற்றைச் சரியாகப் புரிந்து கொண்டு அதன் பின் அன்பு காட்ட ஆரம்பிக்க வேண்டும். அந்த வகைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் அன்பு காட்டினால் பிரச்சினையில் மாட் டிக் கொள்ள வேண்டிய நிலைதான் ஏற்படும்.

அன்பு என்றால் சாதாரணமாக நினைத்துக் கொள்ளக் கூடாது. அதில் எவ்வளவு விதம் தெரியுமா?

இரக்கம், கருணை, காருண்யம், பந்துத்துவம், பட்சம், பாசம், நேசம், விசுவாசம், அபிமானம், காதல், பக்தி இப்படி பலவிதமாக அன்பு பற்றிப் பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இந்த வார்த்தைகள் எல்லாம் எல்லோரும் கேள்விப்பட்டது தான். இருந்தாலும் அதற்குள் என்ன வித்தியாசம் என்று கேட்டால் சரியாகச் சொல்லத் தெரியாது.

அதனால் இந்த வார்த்தைகளுக்கு எல்லாம் பெரியவர்கள் என்ன விளக்கம் கூறுகிறார்கள் என்று பார்க்கலாம்.

எளியவர்கள் மீது செலுத்துகின்ற அன்புக்கு இரக்கம் என்று பெயர். அறிவுப் பலம், சரீர பலம், இவை இரண்டும் இல்லாதவர்கள் மேல் அதாவது வலிமையற்றவர்க்ள் மேல் செலுத்தப்படுகின்ற அன்பை கருணை என்கிறார்கள்.

எறுப்புகளிலிருந்து யானை வரைக்கும் சகல ஜீவராசிகள் மீதும் காட்டப்படுகின்ற அன்புக்கு காருண்யம் என்று பெயர். ஜீவகாருண்யத்துக்கு உதாரணம் சிபி சக்கரவர்த்தி காட்டிய அன்பு.

உறவினர்கள், சொந்தக்காரர்கள் வசதியாக இருந்தாலும் வறுமையில் இருந்தாலும் அவர்கள் மீது பாரபட்சமின்றிக் காட்டப்படுகின்ற அன்புக்குப் பெயர் பந்துத்துவம்.

ஓர் எஜமான் வேலையாள்களிடம் காட்டுகின்ற அன்புக்குப் பெயர்தான் பட்சம். அவனும் தன்னை மாதிரியான ஒரு மனிதன்தான் என்று மனதில் நினைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு தாய், குழந்தை மீதும் ஒரு குழந்தை தன் தாய் மீதும் செலுத்துகின்ற அன்புக்குப் பாசம் என்று பெயர். அதாவது ஈருடல் ஓருயிர் என்று நினைப்பது. இராமரும் கோசலையும் இதற்குச் சிறந்த உதாரணம்.

தம்மை ஒத்த நண்பர்களிடம் செலுத்தப்படுகின்ற அன்புக்கு நேசம் என்று பெயர். செல்வம்- அந்தஸ்து வித்தியாசங்கள் பார்க்காமல் அவர்களின் சுகதுக்கங்களில் சமபங்கு எடுத்துக் கொள்வது இந்த வகை அன்பு. கிருஷ்ணன் குசேலரிடம் காட்டியதும் இந்த வகையான அன்பே.

வேலை செய்பவன் முதலாளியிடம் காட்டுகின்ற அன்புக்கு விசுவாசம் என்று பெயர். தேசத்தின் மேலேயும் தாய்மொழி மீது செலுத்தப்படுகின்ற அன்புக்கு அபிமானம் என்று பெயர். தேசாபிமானம் என்று கூறுகின்றோமே அது இதுதான்.

ஒரு கணவன்- மனைவி மீது காட்டும் அன்புக்கு காதல் என்று பெயர். கடவுள் மீது செலுத்தப்படுகின்ற அன்புக்கு 'பக்தி' என்று பெயர்.

இப்படி அன்பில் பல ரகம் இருக்கும்போது அதில் உள்ள வித்தியாசம் தெரியாமல் இடம்மாற்றி அன்பு காட்டினால் இடைஞ்சல் தான். ஆனால் விஞ்ஞானம் இதயத்தைப் பாதுகாப்பதற்கு முக்கியமாகத் தேவைப்படுகின்ற ஒன்று அன்பு எனச் சொல்கிறது.

நெதர்லாந்து விஞ்ஞானிகள் இதை ஆராய்ச்சி மூலம் நிரூபித்திருக்கிறார்கள்.

சில முயல்குட்டிகளை இரண்டு பிரிவாகப் பிரித்து இரண்டு பிரிவுக்கும் கொழுப்பு அதிகமாக உள்ள உணவுகளைக் கொடுத்தார்கள். ஆனால் ஒரு பிரிவுக்கு வெறுமனே ஆகாரத்தைக் கொடுத்ததோடு சரி. இன்னொரு பிரிவுக்கு ஆகாரம் மட்டுமன்றி கூண்டுகளைத் திறந்து விட்டு முயல்களைச் சிறிது நேரம் கொஞ்சி விளையாட விட்டு அதன் பின் ஆகாரம் கொடுத்தார்கள்.

இந்த வகை முயல்களுக்கு இதயம் பாதிப்பு 60 சதவீதம் குறைவாக இருந்ததாம்.

சில நோயாளிகளுக்குத் திடீர் இரத்த அழுத்தம் வந்தாலும் அதைத் தாங்கிக் கொண்டு குணமடைகின்ற சக்தி அதிகமாக இருந்ததாம். இது எப்படி என்று ஆராய்ச்சி செய்து பார்த்தார்கள். அதன் முடிவு அவர்கள் எல்லோரும் தன் மனைவி தன் மீது மிகவும் அன்பாக இருப்பதாக நினைப்பவர்களாக இருந்தார்கள் என்பது தெரிய வந்தது.

இதய நோயாளிகள் பலரைச் சந்தித்து இதய நோய் ஏற்பட என்ன காரணம் என்று ஆராய்ந்திருக்கிறார்கள். அதில் அவர்களின் நோய்க்குச் சாப்பாடு காரணமில்லை; அவர்களின் மனைவியர் அன்பாக இல்லை என்பதே பிரச்சினையாக இருந்திருக்கிறது.

அதனால் இதயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் அடுத்தவர்கள் அன்பாக இருக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

ஒருத்தர் பூனைக்குட்டியை தூக்கினார் அன்பாக அதைத் தடவுவதற்காக. ஆனால் அது முந்திக் கொண்டு அவரது முகத்தைத் தடவிக் கொண்டது. இதனால் முகம் முழுவதும் நகக் கீறல். இது அன்பிலே அறிவு சேராததனால் வந்த கோளாறு.

**கோ.சுவாமிநாதன்**



அளவெட்டி – மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளைப் பாராட்டி பரிசில் வழங்கிக் கௌரவித்துள்ளது. மாணவர்களுடன் சங்கத் தலைவர் எஸ். சிவயோக நாதன், பொதுமுகாமை யாளர் எஸ்.இராஜமோகன் ஆகியோர் நிற்கின்றனர். (எ–26)

# நாட்டுக்கூத்துக் கலையின் வீழ்ச்சிக்குக் காரணம் நவீன தொடர்பு சாதனங்களின் ஆதிக்கமே

## பேராசிரியர் ஞா.பிலேந்திரன் தெரிவிப்பு

கொழும்புத்துறை, டிசெ.22

தமிழர்களின் தனித்துவமான பாரம்பரிய கலை வடிவங்களில் நாட்டுக்கூத்தும் ஒன்றாகும். இன்று இந்தக் கலைக்கு பெரும் ஆபத்தாக நவீன தொடர்புச் சாத னங்களின் ஆதிக்கம் காணப்படு கிறது என யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவத்துறைப் பேராசிரியர் அருட் கலாநிதி ஞா.பிலேந் திரன் தெரிவித்தார்.

கலாபூசணம் அ.பாலதாஸ் எழுதிய 'மறைகாத்த மாவீரன்' நாட்டுக்கூத்து நூல் வெளி யீட்டு நிகழ்வில் நயப்புரை யாற்றும் போதே பேராசிரியர் அருட்கலாநிதி ஞா.பிலேந்தி ரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்த தாவது:-

நாட்டார் கலைகள் கத் தோலிக்க மறையை வளர்த்தன. 300 இற்கும் மேற்பட்ட நாட்டுக் கூத்துக்கள் கத்தோலிக்க மறை சார்ந்தோரால் எழுதப்பட்டுள்ளன.

இன்று பலவகையான கலை வடிவங்கள் வந்து விட்டன என் றாலும் எமது பாரம்பரிய கலை வடி வங்கள் பேணப்படவேண்டும்.

அன்று கலை மறையை வளர்த்தது. இன்று மறைகலையை வளர்க்க வேண்டிய நிலையில் உள்ளது. இவ்வாறான புதிய கூத்து நூல்கள் வெளிவருவது வரவேற்கத்தக்கது. எழுத்தாளர் கள் இத்துறையில் ஆர்வமுடன் செயற்பட்டு கலைப்படைப்புக் களை உருவாக்க வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் ஆசியுரை வழங்கிய திருமறைக் கலா மன்ற பிரதி இயக்குநர் யோன் சன் ராஜ்குமார் தமது உரையில், ''எழுத்தாளர்கள் காலத்தை மாற்றி அமைக்கும் வல்லமை கொண்ட வர்கள். எழுத்தாளன் அழிந்தா லும் படைப்புக்கள் என்றும் வாழும். இந்த நூலாசிரியர் இசை, நெறியாழ்கை, எழுத்து, நடிப்பு போன்ற பன்முகப் பணி களை ஆற்றுகின்றார். கூத்துரு வாக்கத்தை அடுத்த தலை முறைக்கு எடுத்துச் செல்வது அனைத்துக் கலைஞர்களினதும் கடமையாகும்''-என்றார். (எ-135)

# கல்வியும் ஒழுக்கமும் இணைவதன் மூலம்தான் சமூகத்தில் சிறந்த பிள்ளைகளை உருவாக்கலாம்

## கரவெட்டி கல்விக் கோட்ட அதிகாரி

வடமராட்சி டிசெ.22

மாணவர்கள் பாடசாலையை விட்டுச் செல்லும்போது கல்வி அறிவுடன், சிறந்த ஒழுக்க சீலர் களாகவும் வெளியேற வேண் டும். கல்வியும், ஒழுக்கமும் இணைவதன் மூலம்தான் சிறந்த பிள்ளைகளை உருவாக்க முடி யும் என கரவெட்டிக் கோட்டக் கல்வி அதிகாரி சி.நற்குண சிங்கம் தெரிவித்தார்.

துன்னாலை காசிநாதர் வித்தி யாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தின ராகக் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர் பி.இரத்தினராஜா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சி.நற்குணசிங் கம் உரையாற்றுகையில் தெரி வித்ததாவது:-

கல்வியில் அதி கூடிய புள்ளி களைப் பெற்று, தேர்ச்சிகளைப் பெற்ற மாணவர்களையும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் முதன்மையான மாணவர்களை யும், பரிசில்கள் வழங்கிக் கௌர விக்கும் முகமாக பரிசளிப்பு விழா கொண்டாடப்படுகின்றது.

அத்துடன் முதன்மையான மாணவர்களைப் பார்த்துப் பரிசில்கள் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் ஊக்கம் பெறுவ தன் மூலம் எதிர்வரும் காலத் தில் தாமும் பரிசில்களைப் பெற் றுக் கொள்ளவும் பரிசளிப்பு விழா உதவுகின்றது.

பரிசளிப்பு விழாவில் மாண வர்கள் மட்டுமல்லாமல் ஆசிரி யர்களும் கௌரவிக்கப்பட வேண்டும்.

அர்ப்பணிப்புடன் தமது விருப் புக்களைக் குறைத்து மேலதிக வகுப்புக்களை நடத்தி சிறந்த தேர்ச்சி மட்டங்களை அடை விக்கும் ஆசிரியர்களையும் இணைப்பாட விதான செயற் பாடுகளில் மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கும் ஆசிரியர்களையும் இந்த நாளில் ஊக்குவிப்பது மாணவர் சமுகம் வளர மேலும் உதவியாக அமையும்.

கல்வியும் ஒழுக்கமும் இணை வதன் மூலம்தான் சமூகத்தில் சிறந்த பிள்ளைகளை உரு வாக்கிக் கொள்ள முடியும். எனவே ஆசிரியர்கள் இந்த விடயத்தில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டுமென இந்தச் சந்தர்ப் பத்தில் கேட்டுக் கொள்கின் றேன். ஒரு ஆசிரியர் வகுப் பறையில் கல்வி போதிக்கும் போது எல்லா மாணவர்களை யும் கவனத்தில் எடுத்துக் கல் வியைப் போதிக்க வேண்டும். -என்றார். (எ-236)

# இடமாற்றம்

தென்மராட்சி, டிசெ.22

'கொமர்ஷல்' வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமை யாளராகக் கடமையாற்றிய எஸ்.வி.குருபாதம் இன்று வியாழக்கிழமை தொடக்கம் மானிப்பாய் கிளையின் முகாமை யாளராக இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார்.

மன்னார் கிளையில் கடமை யாற்றிய செ.விஜயகலா சாவ கச்சேரி கிளை முகாமையாள ராக இடமாற்றம் செய்யப்பட் டுள்ளார். (ங-207)

# வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்.கல்வி வலயத்தின் சுய தேடலின் ஊடாக மாணிடத்தின் மேம்பாடு, வாசிப்பு மாதப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

**எழுத்தாக்கம் தரம் 3-5**

ச.மனோஜிகா - யா/ கொக்கு வில் ஸ்தான சி.சி.ரி.எம்.எஸ், முதலாமிடம், ம.கலைநிலா - யா/ நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை - இரண் டாமிடம், சி.நவினா-யா/ இந்து தமிழ்ப் பெண்கள் பாட சாலை - மூன்றாமிடம்,

**வாசிப்பு தரம் 3-5**

ரா.ஜீவிதா, யா/ திருக் குடும்ப கன்னியர் மடம் - முத லாமிடம், அ.பானுஷா, யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை- இரண்டாமிடம், சு.துஷ்கரணி- யா/ கல்வியங் காடு இ.த.க.பாடசாலை- மூன்றா மிடம்.

**பொது அறிவுப் போட்டி தரம் 6-8**

மோ.அபிஷாந்- யா/ கோப் பாய் சரவணபவானந்த வித்தி யாலயம் - முதலாமிடம், க.அர்ச் சனா - யா/ இந்து மகளிர் கல் லூரி- இரண்டாமிடம், மு.பிருந் தாபன் - யா/இடைக்காடு மகா வித்தியாலயம்- மூன்றாமிடம்.

**சுவரொட்டி தரம் 6-8**

சி.லவண்சிகா- யா/ அச்சு வேலி மத்திய கல்லூரி - முதலா மிடம், பா.கஜானி- யா/ இந்து மகளிர் கல்லூரி- இரண்டாமி டம், கி.செபஸ்ரியன் - யா/ நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை - மூன்றாமிடம்

**சிறுகதை தரம் 9-11**

அ.வினிற்றா - யா/ நாவாந் துறை றோ.க.த.க.பாடசாலை - முதலாமிடம், சி.சுபித்ரா - யா/ இந்து மகளிர் கல்லூரி- இரண் டாமிடம், தி.அரவிந்குமார் - யா/ கலட்டி மெ.மி.த.க.பாட சாலை-மூன்றாமிடம். (தொடரும்)

# சோதிடமும் வைத்தியமும் எமது பாரம்பரியத்தில் இரட்டைப் பிறவிகள் எனக் கொள்ளப்படுகின்றன

## விரிவுரையாளர் ச.லலீசன் தெரிவிப்பு

தென்மராட்சி, டிசெ.22

சோதிடமும் வைத்தியமும் எமது பாரம்பரியத்தில் இரட் டைப் பிறவிகள் எனக் கொள்ளப் படுகின்றன எனக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரை யாளர் ச.லலீசன் தெரிவித்தார்.

கல்வயல் கலாபூசணம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் எழு திய ''திருமணப் பொருத்தம்'' நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய போது விரிவுரையாளர் ச.லலீ சன் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்த தாவது:

ஈழத்தில் ஆரம்ப காலங்க ளில் சோதிட வைத்திய நூல் களே வெளிவந்தன. வைத்தி யம் செய்பவர்கள் சோதிடம் பார்த்து வைத்தியம் செய்யும் முறைஇருந்தது. இன்று இவற்றை மூடநம்பிக்கை என ஒதுக்கும் பழக்கமும் தொற்றி வருகிறது. சோதிடம் பற்றிய அறிவு பூரண மாகாமையால் சோதிடர்கள் பொய்த்துப் போகிறார்கள். இத னால் இவர்கள் கூறுகின்ற பழைய சோதிடத்தின் மேல் மக்க ளுக்கு நம்பிக்கையற்றுப் போகி றது.

பாடசாலைப் பிள்ளைகளு டைய பாட விதானத்தில் பஞ் சாங்கம் பார்ப்பது பற்றிய அறி வுக்குப் போதிய முக்கியத்து வம் வழங்கப்படவில்லை. சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆலயக் குருமார் பஞ்சாங்கம் பற் றிய போதிய அறிவைக் கொண்டி ராத துன்பியல் நிலை எம் சமூ கத்தில் காணப்படுகிறது.

சோதிடக் கலை, பரம்பரைக் கலை என்ற நிலை மாற்றப்பட்டு அனைவரும் கற்கும் ஆர்வம் மிக்க கலையாக மலர்ச்சி பெற வேண்டும். இதற்கு வழி சொல் வதாகத் ''திருமணப் பொருத் தம்'' என்ற நூல் வெளியீடு அமைகிறது. பழைய பாரம் பரியங்களின் தளத்தில், மேலைப் புல செல்வாக்கை உள்வாங்கி திருமணப் பொருத்தம் பார்க் கும் முறையை நூலாசிரியர் இந்த நூலின் ஊடாக வெளிப் படுத்தியுள்ளார்- என்றார்.

இந்த நிகழ்வில் கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக் கள் ஆசியுரை நிகழ்த்தும் போது தெரிவித்தாவது:-

சோதிட அறிவுமிக்கவர் களே சோதிட விரத நிர்ணயம் தொடர்பான கட்டுரைகளை பத் திரிகைகளில் எழுதவேண்டும். அவ்வாறில்லாமல் பஞ்சாங்கம் கணிப்பது எப்படியென்ற அறிவு இல்லாதவர்கள் இன்று விரத நிர்ணயம் தொடர்பாகக் கட்டுரை களை எழுதி மக்களை குழப்பு கிறார்கள். இவர்கள் இவ்வாறான குழப்பங்களை விளைவிப்பதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகி றார்கள். திருக்கணித பஞ்சாங் கம் இன்று உலகளாவிய ரீதியில் வெளியிடப்படுகிறது. இலங்கை யில் திருக் கணித பஞ்சாங்க முறையைத் தொடர்ந்து மேற் கொண்டு வரும் பெருமை சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் ஐயா வையே சாரும் என்றார்.(எ-207)

# சுவாரஸ்யமான தரிசனங்களை நோக்கி...


யாழ்.பல்கலைக்கழக, நூலக கேட்போர் கூடத்தில் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தால் 'முகிழ் -2011' என்ற ஓவியக் கண்காட்சி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் அலகின் நான்காம் வருட மாணவர்கள், தமது இறுதி வருடக் கற்கை நெறியின் ஓர் அங்கமாக உருவாக்கிய படைப்புக்களை இந்தக் கண்காட்சியின் மூலம் சமூகத்தின் முன் வைக்கின்றனர். வாழ்வு மற்றும் இருப்பு மீதான தமது வேட்கையை ஓவியம் என்ற கட்புல மொழியினூடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

இந்தப் பகிர்வானது இதுவரை பல்கலைக்கழகக் கலையகத்தினுள் இருந்த அவர்களின் பயில்வை, திறந்த கருத்தாடல்களால் பின்னப்பட்ட விமர்சனங்களின் வெளிக்கு அவர்களை அழைத்துச் செல்வதோடு அவர்கள் தம் படைப்பாளுமைகளையும் தனியடையாளங்களையும் சமூகத்தில் ஸ்தாபிதம் செய்வதாகவும் உள்ளது.

தமிழர் ஓவிய மரபில், குறிப்பாக யாழ்ப்பாண ஓவியக் கலை வரலாற்றில் 'வின்சர் கலைக்கழகம்', ''விடுமுறைக்கால ஓவியக் கழகம்'' என்பவற்றுக்கு அடுத்தபடியாக ஓவியக்கலையை பட்டப் பயில்வுக்கான ஒரு பாடநெறியாகப் பயில்வதற்கான அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக, இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் சித்திரமும் வடிவமைப்பும் அலகு காணப்படுகின்றது.

முன்னையவை இரண்டும் சித்திர ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் பயிற்சி வழங்குவதைத் தமது முக்கிய குறிக்கோளாகக் கொண்ட நிறுவனங்களாகும். ஆனால் சித்திரமும் வடிவமைப்பும் அலகானது தனிமனிதப் படைப்பாளிகளை உருவாக்கும் இடமாகச் செயற்படத்தக்க தகுதி வாய்ந்த வெளியைக் கொண்டது. இந்த வெளியின் பேறுகள் எதிர்காலக் கலை வரலாற்றில் ஓவியந் தொடர்பான வரைவிலக்கணங்கள், மற்றும் ஓவியத்தின் போக்கு மாற்றங்களைக் கட்டுடைக்க வல்லன.



ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் நாடுமுழுவதும் சித்திரபாட ஆசிரியர்களை உற்பத்தி செய்துள்ள நிலையில் ஓவியர்களதும், படைப்பாளிகளதும் உருவாக்கமே இன்றைய காலத்தின் தேவையாகவுள்ளது.

இந்தத் தேவையை முன்னிட்டும் போருக்குப் பின்னான சூழலில் பல்வேறுபட்ட ஊடாட்டங்கள் நிறைந்த யாழ்ப்பாண வெளியில் அதன் காண்பியப் பண்பாடு தொடர்பான மீள்வாசிப்புச் செய்வதற்கும் ஓவியமுன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கான தேவை நிறையவே உண்டு. எமது உடன் நிகழ்கால இருப்பை இவ்வகையான பகிர்வுகள் மறுதரம் கட்டமைக்கவல்லன.

இந்தக் கண்காட்சியில் வைக்கப்படும் ஓவியங்கள் நவீனவாத அணுகுமுறைகளுடன் அதிகம் தொடர்புடையன.

ஏனெனில் கலையில், நவீனத்துவம் மற்றும் நவீனவாதம் தொடர்பான கோட்பாட்டு ரீதியானதும், செயல்முறை ரீதியானதுமான அணுகுமுறை களற்ற கட்டமைக்கப்பட்ட பயில்வுகளிடையேதான் இவை பிரசவிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு நவீனம் தொடர்பான ஆழ்ந்த ஈடுபாடும், தேடலும், வெளிப்பாட்டுப் புலமையும், மிக்க மாதிரிக் கலைஞர்களின் வருகையும், வழிகாட்டல்களும், ஆக்கபூர்வமான விமர்சனங்களும் நிறைந்த கலைச் சூழலில் புத்துயிர்க்கப்பட்டவை.

இந்த வகையான பின்னணிகளோடு, படைத்தலிலும் ரசித்தலிலும் நவீனம் சார்ந்த சுவாரஸ்யமான தரிசனங்களை நோக்கி நகர்வுகள் தொடங்கியுள்ளன.

■மனுஷ்ய புத்திரன்

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்பலம் (ஆசாரி) கனகபூரணம்



காளிகோயிலடி, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட பொன்னம்பலம் கனகபூரணம் நேற்று (21.12.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-கற்பகம் தம்பதியரின் மூத்தமகளும்,பொன்னம்பலத்தின் பாசமிகு மனைவியும்,காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரமசாமி மற்றும் கிஸ்ணாம்பாள் (வவா), கந்தசாமி (பிள்ளையார் வெல்டிங் தொழிற்சாலை), அன்னலட்சுமி (மணி), புவனேஸ்வரி (வேவி), ஆகியோரின் அன்புச் சகோதரியும்,சுசீலாதேவி, லலிதாதேவி, சறோஜினிதேவி, காலஞ்சென்ற பேரின்பநாதன் மற்றும் விஜயகுமாரன் (ஆசிரியர், யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும், திருநாவுக்கரசு (அரசு மரத்தொழிற்சாலை), சத்திவடிவேல் (அம்பாள் மரத்தொழிற்சாலை), சண்முகவடிவேல் (வெல்டிங் தொழிற்சாலை), சுபேஜினி (நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு மாமியும், கலைச்செல்வி (மஞ்சுளா, ஆசிரியர், கிளி/உமையாள்புரம் அ.த.க பாடசாலை), கலைப்பிரியா, கலைவதனா (பிரான்ஸ்- முன்னாள் AI, மன்னார்), கலைக்குமரன், கலைக்கண்ணன், மயூரன் (மயூவர்ண ஒளி), சர்மிளா (ஆசிரியர்-கிளி/புன்னைநீராவி அ.த.க. பாடசாலை), சுபிந்தன் (சேவயறிங், சப்ரகமுவ பல்கலைக்கழகம்), சோபிதா (A/L 2012, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), காலஞ்சென்ற சங்கவி மற்றும் ஜெசிந்தன் (G.A.Q), சுகந்தன், சயந்தன் (A/L 2011, யா/ மத்தியகல்லூரி), ரம்ஜா (வவுனியா), ராகவி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ராகவன் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), ராதுஜன், ராகுல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிராம் ( யா/டாக்டர் ஆ. தியாகராசா ம.ம.வி), பவிஷா, அபிராமி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2011) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

காளிகோயிலடி,களபூமி, காரைநகர்

(11898)(6-9-8)

## மரண அறிவித்தல்

### குகனேஸ்வரன் ஜெயராசன் (ராசன்)



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், இலங்கைநாயகி அம்மன் கோயிலடி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட குகனேஸ்வரன் ஜெயராசன் 18.12.2011 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் குகனேஸ்வரன்-பவளம் தம்பதியரின் அன்புமகனும், பாரராயசிங்கம் -பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சர்மிளாவின் அன்புக் கணவரும், சுபாங்கினி, சாரங்கினி, தட்சகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபாலசேகரன், ஜெயவதனா, ஜெயவதனி, ஜெயசிறி, ஜெயமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜநாதன், கௌரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2011) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இலங்கைநாயகி
அம்மன் கோயிலடி,
கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்.

(11878)(6-9-8)

## சமுர்த்திப் பொருள்கள் விநியோகம்

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் டிசெம்பர் மாதத்துக்குரிய சமுர்த்திப் பொருள்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. சமுர்த்தி முத்திரையை வைத்திருப்போர் எதிர்வரும் 27ஆம் திக திக்குமுன்னர் பொருள்களைகிளைகளில் பெற்றுக் கொள்ளுமாறும் சங்கப் பொது முகாமையாளர் கேட்டுள்ளார். (ம-288)

## தவறிவிட்டது

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் எனும் முகவரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ரஞ்சித்குமார் என்பவரது தே.அ.அ. (812892703V)மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய File கவர் கடந்த (09.12.2011) அன்று திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டடுத்தவர்கள் 0779737694 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## கட்டட வேலைகள் செய்யப்படும்

கட்டடம் கட்டுதல், பெயின்ரிங், புளொம்பிங், தச்சுவேலைகள், மாபிள் பதித்தல் அலங்காரத் தோட்டம் அமைத்தல், மின் இணைப்புப் போன்ற சகல வேலைகளும் செய்யப்படும். தொடர்பு:
தவா கொன்ஸ்ரக்சன்ஸ் 0771391623

## உளம் கனிந்த இனிய வாழ்த்துக்கள்



17.12.2011 கொழும்பு ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த கலை அரங்கில் "கலாபூஷண" விருது பெற்ற எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய நாடகக் கலைஞர் "கலாபூஷணம்"

**இரா.பீதாம்பரம் (பற்குணம்)**

அவர்கள் மேலும் பல சிறப்புக்கள் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

283,கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

K.V. இராசதுரை குடும்பத்தினர்.

## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
## கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### காசாளர்தேவை

அருச்சனை சீட்டு விற்பனை செய்பவராகவும், பற்றுச்சீட்டு எழுதுநராகக் கடமையாற்றுதோடு, கோயில் பணிகளில் தொண்டு அடிப்படையில் ஒத்துழைப்பு நல்குபவராகவும், யாழ். மாநகரசபை எல்லைக்குள் வதிபவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.


வதிவிடம், வயது, முன்னைய தொழில் அனுபவம் யாவற்றையும் குறிப்பிட்டு 31.12.2011 சனிக்கிழமைக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

இல. 100, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தேவஸ்தானம்



# உரும்பிராயின் ஒரே ஒரு முருகன் ஆலயத்தின் அருள்



கோயில்களின் அமைவிடத்திலும், அருள் வியாபகத்திலும், சிறப்புப் பெற்ற உரும்பிராயில் உள்ளது ஒரே ஒரு முருகன் ஆலயம் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி- மூன்று கோயில்களின் அமைவிடத்தில் அம்மனுக்கும் பிள்ளையாருக்கும் நடுவிடத்தில் மிக அமைதியான சூழலில் அமைந்திருந்து அருள் பாலிக்கின்றார்.

பரத்தைப் புலத்தில் அமைந்துள்ள மூன்று கோயில்கள் பற்றிய ஆரம்பம் மிகமிக அநாதியானதாகக் கொள்ளப்படுகின்றது. மூன்று கோயில்களும் சிறு முகட்டில் கோயில்களாக இருந்தன. தமக்கே உரிய அருள் வியாபகத்தால் அடியவர்களைக் கவர்ந்து காலப்போக்கில் வளர்ந்து இன்று உட்பிரகாரம் முழுவதும் மூடு மண்டபங்கள் கொண்டதாக அழகான முகப்பு மண்டபம்- சித்திரத்தேர், உற்சவச் சிறப்புக் கொண்டதாக இந்த ஆலயம். வேதாகம விதிப்படி அந்தணர்கள் மூன்று காலப் பூசை செய்யும் ஆலயங்களாக விளங்குகின்றன.

ஆலயச் சூழலில் அடியவர் நடமாட்டமும் நாளாந்தம் நடைபெறும் விசேட பூசை வழிபாடு, உற்சவங் களால் சைவ மணங்கமழும் ஆலயச் சூழலில் செல்பவர்கள் தங்களை அறியாமலேயே அம்பாளையும், முருகனையும் பிள்ளையாரையும் ஒன்றுசேரக் கண்டு உளம் மகிழ்வர்.

உரும்பிராய் மத்தி, வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என மிக விசாலமான வசதியான கிராமம், மண்வளம் கொண்டது. இந்த வகையில் விவசாயத்தாலும், கல்வி கேள்வியாலும் உயர்ந்தது. பத்துக்கு மேற்பட்ட கோயில்கள் அமைந்துள்ள போதிலும் மூன்று கோயில்கள், ஞான வைரவர் கோயில், சிவபூதநாதேஸ்வரர் கோயில், கற்பக விநாயகர் கோயில், காட்டுவைரவர் கோயில், காளி கோயில், பூதராயர் கோயில், பேச்சி அம்மன் கோயில், வைரவர் கோயில் என நாலா திசையிலும் சைவக் கோயில்கள் அமைந்து சிறப்புற விளங்குகின்றன.

கல்வி கேள்விகளில் சிறந்து கற்றறிந்த பெரியோர்கள் நிறைந்து விளங்கியது என்பதற்கு எடுத்துக் காட்டாக உரும்பிராய் கிராமத்தையும்; தமிழர் பெருமையையும் இலங்கையிலும், சர்வ தேச ரீதியிலும் துலங்கச் செய்த பெருந் தகைகள் பலர். அவர்களில் உரும்பிராயில் வாழ்ந்தவர்களான பஞ்சலிங்கர்கள் (ஐந்து சகோதரர்கள்) செல்லப்பா- மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்வர்கள், மூத்தவர் பஞ்சலிங்கம் சிறந்த வைத்தியர்- சட்டத்துறை வல்லுநர், அடுத்தவர் செ.நாகலிங்கம். நீதியர சராகவும் இலங்கையின் தேசாதிபதியாகவும் பதவி வகித்து தமிழருக்குப் பெருமை சேர்த்தவர். மூன்றாவது சகோதரர் அடங்காத் தமிழன் என்று தமிழ் அரசியல் தலைவர்களில் குறிப்பிட்டுப் பேசப்படும் செ.சுந்தரலிங்கம். அடுத் தவர் சட்ட மேதை செ.தியாகலிங்கம். கியு.ஸி. இளையவர் கலாநிதி செ.அமிர்தலிங்கம், சிறந்த கல்விமான் உயர் பதவியில் உத்தியோகத்தராக இருந்தவர்.

இவர்களின் குடும்பத்துக்கும் சிதம்பர சுப்பிரமணியர் கோயிலுக்கும் நெருக்கம் உண்டு. கோயிலை இடைக் காலத்தில் பரிபாலனம் செய்து பெருமை பெறச்செய்தது இவர்களின் குடும்பமே. குறிப்பாக செ.தியாகலிங்கம் கியு.ஸி. அவர்களே.

உரும்பிராய் பஞ்சலிங்கங்கள் பற்றி பேசப்படும் வேளையில் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த சம்பவம் ஒன்று பெருமையாகப் பேசப்படுவது உண்டு. நீதியரசராக தேசாதிபதியாக இருந்த செ.நாகலிங்கம் உயர் நீதிமன்றத்தில் நீதியரசராக இருந்தவேளையில் சட்ட மேதை தியாகலிங்கம் கியு.ஸியும் கணித மேதை சட்டத்தரணி செ.சுந்தரலிங்கமும் வாதி- பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளரக எதிர் எதிரே வாதிட்டிருக்கின்றனர்.

சட்டத்தரணி செ.தியாகலிங்கம் கியு.ஸி சிதம்பர சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தோடு நெருக்கமான தொடர்பு கொண்டவர்.

ஆலயத் திருப்பணிகளை நேரில் நின்று நடத்தியதோடு, ஜயவரு டம் ஆடி மாதம் 21 ஆம் நாள் வியாழக்கிழமை 05.08.1954 ஆம் ஆண்டு ஆலயத் திருப்பணி கட்டுமானப் பணிக்கான அடிக்கல்லை நாட்டி, திருப்பணியை ஆரம்பித்து வைத்தவர்.

ஞானஆதவன்

ஆலயத் திருப்பணிக்குத் தேவையான நிதியில் கணிசமான தொகையை வழங்கி உதவினார். ஆண்டு தோறும் உற்சவ காலங்களில் உரும்பிராயில் தங்கியிருந்து உற்சவங்களைக் கண்டு கழித்து உய்வு பெற்றார்.

(தொடரும்)

## திருப்பாவை ஓதும் நிகழ்வு ஆரம்பம்

கைதடி, டிசெ. 22

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லி புரநாதர் தேவஸ்தானத்தில் கடந்த 15ஆம் திகதி தொடக்கம் திருப்பாவை ஓதல் நிகழ்வு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

தினமும் திருப்பள்ளி யெழுச் சியுடன் அதிகாலை 4மணிக்கு திருப்பாவை ஓதல் ஆரம்பம் ஆகும்.

தொடர்ந்து திருப்பாவைப் பாடல்கள் முப்பதும் பாடப்பட்டு பக்தர்கள் புடைசூழ சுவாமி உள் வீதியில் வலம் வரும் நிகழ்வு இடம் பெறுகின்றது.

இந்த நிகழ்வு எதிர்வரும் தை மாதம் 14ஆம் திகதியுடன் நிறைவு பெறவுள்ளது.

(வ-288)

மாபெரும் மலிவு விற்பனை

நத்தார் பண்டிகையை முன்னிட்டு
20.12.2011 முதல் 31.12.2011 வரை விசேட
கழிவுடன் விற்பனை செய்யக்காத்திருக்கின்றோம்.

★ பட்டு சாறி வகைகள் 50 % கழிவு
★ ஆடவர் சேட் வகைகள் 25 % கழிவு
★ சல்வார் வகைகள் விசேட கழிவுடன்

கணேசன் சென்ரர்
கே.கே.எஸ். வீதி, இணுவில்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் முருகேசபிள்ளை நாகலிங்கம்
(செல்லத்துரை)
(ஓய்வு பெற்ற புகையிரத பரிசோதகர், பிரபல சோதிடர்)



அன்னை மடியில்
1928.06.07

ஆண்டவன் அடியில்
2011.01.02

திதி-திரயோதசி
2011.12.22

எம் வாழ்வே [illegible]தம் வாழ்வென
என்றென்றும் [illegible]ண்ணி வாழ்ந்த
எம் அப்பா [illegible]ம் உள்ளத்தில்
என்றென்றும் குடி கொள்வார்.
ஆண்டு ஒன்[illegible] ஆன போதும்
ஆறாது எ[illegible] துயரம் நின்
ஆத்மா ச[illegible]ந்தி பெற.....
ஆண்டவனை [illegible]வண்டுகின்றோம்.

மில் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(1865)(6-6-9)

குடு[illegible]பத்தினர்,
மனைவி, ம[illegible]கள், மருமக்கள்

இலங்கை வங்கி

கொள்வனவு செய்ய வெற்றுக்
காணி / கட்டிடத்துடன் காணி தேவைப்படுகின்றது

பின்வரும் நகரங்களின் முக்கிய வர்த்தக எல்லைகளுள் பாதையை முன்னோக்கியதாக 40-60 அடிகளைக் கொண்ட 40-60 பேர்ச்சுகள் விஸ்தீரணமுடைய காணி தேவைப்படுகின்றது.

- காரைநகர்
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- திருநெல்வேலி
- வத்தளை

இதற்காக முன்வைக்கப்படும் விலைமனு, காணி தொடர்பான விபரம், உரிமை உறுதியினதும் அளவை வரைபடத்தினதும் பிரதி மற்றும் எதிர்பார்க்கப்படும் ஆகக்குறைந்த விலை ஆகியவற்றை 2012.01.09 இற்கு முன்னர் உரிமையாளர்களிடமிருந்து மாத்திரம் எங்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி,
14ம் தளம், இலங்கை வங்கி தலைமை அலுவலகம்,
இல. 1, இலங்கை வங்கி சதுக்கம்,
கொழும்பு - 01
தொலைபேசி இல. 011-2544310, தொலைநகல் 011-2449629

# ஐ.தே.கவை பலவீனப்படுத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சி

## விக்கிலீக்ஸ் தகவல்

கொழும்பு, டிசெ.22

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியை பலவீனப் படுத்தும் முயற்சிகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டவர் என்று, ஐக்கிய தேசியக் கட்சியின்முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார் என்று விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்ளவும், ஐக்கிய தேசியக் கட்சியைப் பலவீனப்படுத்தவும் ஜனாதிபதி கூடுதல் முயற்சி எடுத்தார் என்று கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரி களினால் அந்தநாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக் கப்பட்ட குறிப்பில் உள்ளடக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளக் 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இந்தத் தகவல்களை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கருஜயசூரிய ஆளும்கட்சியில் இணைந்துகொள்வதற்கு பத்து தினங்களுக்கு முன்னதாகவே அமெரிக்கத் தூதுவரிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சு நடத்த ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும், இருதரப்பினருக்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஆக்கபூர்வமானதாக அமையவில்லை என்று விக்கிலீக்ஸ் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (ச)

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இரும்பு திருடிய மூன்றுபேர் கைது

கொழும்பு, டிசெ.22

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நலவன பிரதேசத்தில் பாலமொன்றை நிர்மாணிப்பதற்காக கொண்டுவரப்பட்டிருந்த பெருந்தொகையான இரும்புகளைத் திருடினர் என்ற சந்தேகத்தில் பாடசாலை மாணவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்திலிருந்து கிடைத்ததகவலொன்றையடுத்தே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் கைது செய்யப்பட்டவேளையில் 12 அடி நீளமான இரும்புகளை உழுவு இயந்திரம் ஒன்றில் ஏற்றிச்சென்று கொண்டிருந் தனர் என்று தெரிவிக்கப்படு கின்றது. இந்த இரும்புகளின் பெறுமதி சுமார் 10 லட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேநபர்கள் பின்னதுவ, கனன்கே, மாத்தறை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் ஏற்கனவே இடம்பெற்ற திருட்டுகளுடனும் தொடர்புடையவர்கள் என்று விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

# 11 ஆண்டுகளாக நீதிமன்றத்துக்கு 'டிமிக்கி' கொடுத்து வந்த நபர் கைது

கொழும்பு, டிசெ.22

ஐரோப்பிய நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி இளைஞர்கள் பலரிடமிருந்து பல லட்ச ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களை ஏமாற்றியதாகக் கூறப்படும் நபரொருவரை நுகேகொட பொலிஸார் கைது செய்துள்ளனர்.


கொட்டாவ பிரதேசத்தில் வைத்து கடந்த 17 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்த நபரை நீதிமன்றத்தின் முன் நிறுத்துமாறு பத்துக்கு மேற்பட்ட தடவைகள் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித் திருந்ததாக தெரிவிக் கப்படுகின்றது.

இவ்விதம் கடந்த 11 ஆண்டுகள் காலமாக பொலிஸாருக்கு டிமிக்கிவிட்டு அவர்களிடம் பிடிபடாமல் இந்த நபர் நாட்டுக்குள்ளேயே வாழ முடிந்தமைக்கான காரணம் முக்கிய அரசியல்வாதிகள் சிலருடன் இவர் கொண்டிருந்த தொடர்பே என்றும் தெரிய வந்துள்ளது.

பல இளைஞர்களை ஏமாற்றி இந்த நபர் 70லட்சம் வரையான பணத்தைப் பெற்றுக்கொண்ட தாகத் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ஞ)

# தனது ஆதரவாளர்களைக் கைது செய்து துன்புறுத்துவதற்கு கரு கடும் எதிர்ப்பு



கொழும்பு,டிசெ.22

''சிறிகொத்தாக் கட்சி அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் தாக்குதல் நடத்தினர் என்று கூறி எனக்கு கூறப்பட்டு தமக்கு ஆதரவு வழங்கியோரை துன்புறுத்துவதை ஏற்க முடியாது'' என்று ஐ.தே.க முன்னாள் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளவர்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மிரிஹாண பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பார்வையிட்ட பின்பே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொய்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தி கைது செய்யப்பட்டுள்ளவர்கள் ஐ.தே.கவின் மறுசீரமைப்புக்காக முன்னின்று செயற்பட்டவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச)

# கழிவு இரும்புகளை அகற்றாமல் வைத்திருந்த 10 பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.22

வீதிப்போக்குவரத்துக்கு இடையூறு செய்யும் வகையிலும் டெங்கு நோய்ப் பெருக்கத்துக்கு ஏதுவான முறையிலும் கழிவு இரும்புகளை அகற்றாமல் வைத்திருந்த 10பேர் யாழ்.நகரில் நேற்றுமுன்தினம் முற்பகல் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் யாழ்ப்பாணம் ஐந்து சந்தியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ங-14)


## 31 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு: 07★05★1968

உதிர்வு: 22★11★2011

அமரர்

தம்பிராசா திவ்வியராசா

(திவ்யன்)

அன்பு காட்டி எமை அரவணைத்து
மாண்புடன் வாழ வழி அமைத்த எங்கள்
அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்திபெற அன்னை
வேளாங்கன்னி மாதாவை மன்றாடுகின்றோம்

இன்று (22.12.2011) வியாழக்கிழமை ந.ப. 12 மணியளவில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மஞ்சுளா (மனைவி),
- கரன், மதினா, மேரி சுவாதி (பிள்ளைகள்)

காந்திஜீ வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (11919)(2-6-9)

## மரண அறிவித்தல்

### சண்முகநாதன் மனோரஞ்சன்



(ஜேர்மனி)

தாவடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் மனோரஞ்சன் நேற்று (21.12.2011) புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் இராசலக்சுமி (தாவடி) தம்பதியரின் மூத்த புதல்வரும், செல்வியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், தமிழ்ச்செல்வன் (அஞ்சல் அலுவலகம், கொக்குவில்), றஞ்சனி (தாவடி), றஜனி (ஜேர்மனி), சூரியகுமார் (கனடா), உதயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்தி ரேஸ்வரன் (லக்ஷிகா ரெக்ஸ்), சதீஸ்குமார் (ஜேர்மனி), இன்பேஸ்வரி (கோண்டாவில்), கிருபா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், லக்ஷியா (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), இந்துஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி), சுகிர்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், திஷாந் (கொக்குவில் இந்துக் கல்லூரி), றுக்ஷிகா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), கம்ஷிகா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), லெவென்கா (கனடா) ஆகியோரது பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
தாவடி.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/7116)(6-9-8)

## பார்மசிக்கு ஆள் தேவை

நெல்லியடியில் இயங்கும் பிரபல்யமான பார்மசிக்கு ஆள் தேவை. பார்மசி வேலையில் முன் அனுபவம் உள்ளவர்களும் வடமராட்சி பகுதியில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. ஆண்,பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு:

0771051516, 0777829563

## வீடு வாடகைக்கு தேவை

சுன்னாகம் தொடக்கம் கோண்டாவில் வரை K.K.S வீதியில் அல்லது கிட்டிய தூரத்தில் வீடு வாடகைக்குத் தேவை. மாதாந்தம் ரூ.10,000/= (பத்தாயிரம்) வாடகை தரப்படும். (இணுவில் விரும்பத்தக்கது.)
தொடர்பு: 0770440570,0771393670

## விற்பனைக்கு

Palm tree with pot மற்றும் கல் உரல், அம்மி, கிடாரம், காரியாலய மேசை மேலும் தளபாடங்கள் விற்பனைக் குண்டு.

தொடர்பு:0213218684

## வீட்டுடன் காணி விற்பனை

தெல்லிப்பழை கிழக்கு, காங்கேசன்துறை யாழ்ப்பாணம் வீதியில் மாடி வீடும் நிந்தக் கிணறும் உள்ளதும் நிலப்பரப்பு 08 - 11.5 குளி விஸ்திரணமுள்ளதுமான காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0718474227 அல்லது 021 7200427

## வீடு வாடகைக்கு

பாண்டியன்தாழ்வில் இல.66,
கொழும்புத்துறை வீதியில்
5 அறைகள் நவீன வசதிகள் கொண்ட
வீடு வாடகைக்கு. தொடர்பு:
0771023842

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
23 ★ 08 ★ 1934



மறைவு
24 ★ 11 ★ 2011

(புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.09, சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட)

### அமரர் நல்லதம்பி செல்லத்துரை

(முன்னாள் கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - சின்னக்கடை, யாழ்ப்பாணம்)

அன்பாய், ஆதரவாய் எமை வழிநடத்தி வாழ வைத்த எமது அன்புத் தெய்வம் இறைபதம் எய்திய செய்தி கேட்டு, எமது துயரத்தில் அனைத்து முறையிலும் பங்கேற்றும் இறுதிச் சடங்கில் கலந்து ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.12.2011) வியாழக்கிழமை காலை புங்குடுதீவு அந்தியேட்டி மண்டபத்திலும் நாளை மறுதினம் (24.12.2011)சனிக்கிழமை வீட்டுக் கிருத்தியம் அவரது இல்லத்திலும் நடைபெறும்.

இல.09, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்,
T.P.021 222 6358

தகவல்:
- குடும்பத்தினர்.

(11892(2-6-9)

முல்லைப் பெரியாறு அணை விவகாரம்

# தேசிய பேரிடர் ஆணைய உத்தரவை திரும்பப் பெறுமாறு வலியுறுத்து

## மன்மோகனுக்கு முதல்வர் கடிதம்

சென்னை, டிசெ.22

முல்லைப் பெரியாறு அணை தொடர்பான தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவைத் திரும்பப் பெறவேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார். இந்த முடிவுக்கு அவர் கடும் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்ததாவது:

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், விபத்து கால செயற்றிட்டம் ஒன்றை வகுக்க, வல்லுனர்கள் குழு ஒன்றை அமைத்து கடந்த 12ஆம் திகதி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

அணை தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. உச்ச நீதிமன்றம்



அமைத்த அதிகாரம் பெற்ற உயர்மட்ட குழு, அணையின் நிலை குறித்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில், முல்லைப் பெரியாறு மற்றும் நீர்ப் பிடிப்பு பகுதிகளுக்கான தற்காலிக செயல் திட்டம் ஒன்றைத் தயாரிக்க, வல்லுனர் குழுவை ஏற்படுத்தக் கோருவது சரியானதாகவும், நியாயமானதாகவும் இருக்க முடியாது.

எனவே அணை விவகாரத்தில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தலையிடுவதை அனுமதிக்க முடியாது. இது கேரளாவின் நெருக்குதலுக்குப் பணியும் செயலாகக் கருதப்பட முடியுமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

உச்சநீதிமன்றக் குழுவைப் புறக்கணிக்க இதைக் கேரள அரசு பயன்படுத்திக் கொள்ளும். மேலும் அணைப் பாதுகாப்பாக இல்லை என்று உச்ச நீதிமன்ற நிபுணர் குழுவுக்கே அழுத்தம் கொடுக்க கேரள அரசு நினைக்கிறது. உங்களது தலைமையில் உள்ள ஆணையம் இவ்வாறான ஓர் உத்தரவைப் பிறப்பித்திருப்பது மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது.

இந்த ஆணையத்தின் உத்தரவைத் திரும்பப் பெற உத்தரவிட வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் முதல்வர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டுள்ளார். (வ)

# போர்க் கப்பலில் சென்ற முதலாவது பெண் ஜனாதிபதியானார் பிரதிபா



மும்பை, டிசெ22

போர்க் கப்பலில் சென்ற முதலாவது பெண் ஜனாதிபதி என்ற பெருமையை இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் பெற்றுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற கடற்படையின் பிரமாண்ட அணிவகுப்பை போர் கப்பலில் சென்று அவர் பார்வையிட்டார். மும்பை கடல் பகுதியில் கடற்படையில் உள்ள கப்பல்கள் மற்றும் விமானங்களின் அணிவகுப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் 81 கப்பல்கள், 44 விமானங்கள் பங்கேற்றன. அணி வகுப்பைப் பார்வையிட வந்த ஜனாதிபதி பிரதிபாபாட்டீலுக்கு கடற்படை சார்பில் 21 குண்டுகள் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர், ஐ.என்.எஸ். சுபத்ரா என்ற போர் கப்பலில் சென்று 20 சதுர கடல் மைல் பரப்பில் வரிசையாக அணிவகுத்து நின்ற கடற்படை கப்பல்கள் அணிவகுப்பை ஜனாதிபதி பார்வையிட்டார். விமானங்கள், ஹெலிகொப்டர்களின் அணிவகுப்பையும் பார்வையிட்டார். ஜனாதிபதி பிரதிபாவுடன் ராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோணி, இணை அமைச்சர் பல்லம் ராஜூ, மகாராஷ்டிரா ஆளுநர், முப்படைத் தளபதிகள் ஆகியோரும் போர்க் கப்பலில் சென்றனர். ஐ.என்.எஸ். சுபத்ரா கப்பலில் நேற்று முன்தினம் பயணம் செய்ததன் மூலம் போர் கப்பலில் சென்ற முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையை பிரதிபா பெற்றுள்ளார். (வ)

# தேசிய நூலாகுமா பகவத் கீதை?

## சுஷ்மா ஸ்வராஜ் கோரிக்கை

டில்லி, டிசெ.22

பகவத்கீதையை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்று பா.ஜ.க. தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.


பகவத் கீதையைத் தடைசெய்யக் கோரி ரஷ்யாவின் சைபீரியப் பகுதியில் வழக்குத் தொடரப்பட்டுள்ளமைக்கு அந்த நாட்டு அதிகாரிகளிடம் இந்தியா தனது கவலையைத் தெரிவித்துள்ளது. இது குறித்து வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது:

இந்த விவகாரத்தில் இந்தியத் தூதரகம் தலையிட்டுள்ளது. மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் இந்த வழக்குத் தொடர்பாக சட்டத் தரணிகளை அவ்வப்போது அணுகி வருகின்றனர். ரஷ்யாவில் உள்ள யாரோ அறியா நபர் இந்த முறைப்பாட்டைக் கொடுத்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தியாவுக்கான ரஷ்யத் தூதர் அலெக் சாண்டர் எம். கடாகின் உள்பட பல ரஷ்ய நிபுணர்கள் பகவத் கீதையைப் படித்து புரிந்து கொண்டுள்ளனர். மேலும் அந்த நூல் பற்றி மதிப்பாக எழுதியுள்ளனர் - என்றார்.

உடனே பா.ஜ.க. தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான சுஷ்மா ஸ்வராஜ் எழுந்து, "ரஷ்யாவில் பகவத் கீதையைத் தடைசெய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும். மேலும் இந்தியாவில் கீதையைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும்" - என்றார்.

இதற்கிடையே இந்த வழக்கில், எதிர்வரும் 28 ஆம் திகதி தீர்ப்பளிப்பதாக டாம்ஸ்க் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (வ)



சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு திருநள்ளாறு ஆலயத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற விசேட பூசையில் கலந்து கொள்ள வந்த பக்தர்கள் குளத்தில் புனித நீராடுகிறனர்.

# இந்தியாவில் 50 இலட்சம் 'குழந்தை' தொழிலாளர்கள்

டில்லி, டிசெ.22

2001ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியா முழுவதும் ஒரு கோடியே 26 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் இருந்தனர். கடந்த ஆண்டு கணக்கெடுப்பின்படி 49.84 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர் என்று மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

இந்த எண்ணிக்கையைக் குறைக்கவும், அவர்களுக்கான பாடசாலைகளை நடத்தவும், தொண்டு நிறுவனங்களுக்கு அரசு நிதியுதவி செய்யவும், கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் மத்திய அரசு 40 ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதன்மூலம் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறையும் - என்றார்.(வ)

# உத்தரப் பிரதேசத்தைப் பிரிக்கும் தீர்மானத்தை திருப்பியது டில்லி

டில்லி,டிசெ.21

உத்தரப் பிரதேசத்தை நான்காகப் பிரிக்கும் தீர்மானத்தை, மத்திய அரசு சில கேள்விகளுடன் திருப்பி அனுப்பி விட்டது. உத்தரப் பிரதேசத்தை நான்காகப் பிரித்து அவாத் பிரதேஷ், பூர்வாஞ்சல், புடலக்கண்ட், பச்சிம் பிரதேஷ் ஆகிய மாநிலங்களை உருவாக்க வேண்டும் என்று, கடந்த மாதம், அந்த மாநில சட்டசபையில் முதல்வர் மாயாவதி தலைமையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு பாரதீய ஜனதா உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

அடுத்த வருடம் நடைபெற உள்ள தேர்தலை கருத்தில் கொண்டு, மாயாவதி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததாக, சமாஜ்வாடி கட்சித் தலைவர் முலாயம்சிங் முறைப்பாடு தெரிவித்திருந்தார். இந்த தீர்மானத்தை, சில கேள்விகளுடன் திருப்பி அனுப்பி விட்டதாக மத்திய உள்துறை செயலர் ஆர்.கே. சிங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

உத்தரப்பிரதேசத்தை 4 மாநிலங்களாகப் பிரிக்கத் திட்டமிட்டுள்ள முதல்வர் மாயாவதி, ஒவ்வொரு மாநிலத்துக்கும் எந்தப் பகுதியை தலைநகராக்கத் திட்டமிட்டுள்ளார்?

நான்கு மாநிலங்களின் எல்லை பகுதிகளாக எவை வரையறுக்கப்பட்டுள்ளன? தற்போது உத்தரப்பகுதியில் பணிபுரியும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எந்த விதத்தில் இந்த மாநிலங்களில் செயற்படுவார்கள்? இந்த மாநிலத்தின் சார்பில் வாங்கப்பட்டுள்ள கடன்கள் எப்படித் திருப்பிச் செலுத்தப்படும்? என்பது உள்ளிட்ட 9 கேள்விகள் எழுப்பப்பட்டு, தீர்மான நகல், உத்தரப்பிரதேச அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது - என்றார். (வ)

# புதிய லோக்பால் பிரேரணை இன்று நாடாளுமன்றில்

டில்லி, டிசெ.22

ஊழலுக்கு எதிரான புதிய லோக்பால் பிரேரணை, நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்படுகிறது. சில நிபந்தனைகளுடன் பிரதமர் பதவி சேர்க்கப்பட்டுள்ள லோக்பால் வரம்புக்குள், சி.பி.ஐ. வராது என்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் அதில் இடம் பெற்றுள்ளன.

ஊழலுக்கு எதிராக வலுவான லோக்பால் சட்ட பிரேரணை உருவாக்குவதற்கான பணியில், கடந்த சில நாள்களாக மத்திய அரசு மும்முரமாக ஈடுபட்டு வந்தது. மத்திய அரசின் லோக்பால் வரைவு பிரேரணையைப் பரிசீலித்த ப.சிதம்பரம் தலைமையிலான அமைச்சர்கள் குழுவினர், இறுதிப் பிரேரணையை நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் பிரதமர் மன்மோகன்சிங்கின் பார்வைக்கு அனுப்பி வைத்தனர். மன்மோகன்சிங் ஒப்புதல் அளித்ததும் இன்று வியாழக்கிழமை இந்த பிரேரணை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வுள்ளது. (வ)

# கேரள அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நெடுமாறன், வைகோ ஆகியோர் கைது

கேரளா, டிசெ. 22



பெரியாறு அணை தொடர்பில் கேரள அரசின் போக்கைக் கண்டித்து நேற்று கேரளாவுக்குச் செல்லும் மலைப் பாதைகளை முற்றுகையிட்டு கம்பம் அருகே மறியலில் ஈடுபட்ட ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பழ.நெடுமாறன் ஆகியோர் கைது செய்யப்பட் டனர்.

தேனி மாவட்டத்தில் குமுளி மலைச்சாலையில் லோயர் கேம்ப் பகுதியில் நேற்றுக் காலை ம.தி. மு.க. பொதுச்செயலாளர் வைகோ, உலகத்தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன், முல்லைப் பெரியாறு பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் கம்பம் கே.எம். அப்பாஸ் ஆகியோரும், கம்பம் மெட்டுவில் மல்லை சத்யா, துரை.பாலகிருஷ்ணன், பெரியார்தாசன், நாகை திருவள்ளுவன், போடி மெட்டுவில் பி.வி. கதிரவன் எம்.எல்.ஏ., முருகன்ஜி ஆகியோர் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போராட்டத்தில் ஈடுபட்ட வைகோ, பழ.நெடுமாறன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, "முல்லைப் பெரியாறு அணையை உடைக்க மாட்டோம் என்று கேரள அரசும், கேரள அரசியல் கட்சிகளும் அறிவிக்கவேண்டும். கேரளா அறிவிக்காவிட்டால் போராட்டம் மேலும் தீவிரமாகும். முல்லைப் பெரியாறு அணை வலுவாக உள்ளது. உடையும் ஆபத்து இல்லை. முல்லைப் பெரியார் தண்ணீரை நம்பி தமிழ்நாட்டில் 5 மாவட்டங்கள் உள்ளன" - என்றார்.(வ)

Holcim

## பதவி வெற்றிடம்

சிமெந்து விற்பனையாளர் பதவிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு சால்யா ரோட்டல் சொலூசன் (Shalya Total Solution (Pvt) Ltd) நிறுவனத்தினரால் வேண்டுகைகள் கோரப்பட்டுகின்றன.

SHALYA TOTAL SOLUTION

நேர்முகத்தேர்வு விவரம்:-
நாள் :- 22.12.2011 இருந்து 31.12.2011 வரை
இடம் :- இல.367, நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்:- 021 222 0733, 0773415720

(11931)(269)

# மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதம்

வலி வடக்கு, டிசெ.22

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கான மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நிர்வாகக் கிராம அலுவலர் நா.நவரத்தினராசா தலைமையில் இடம் பெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பிரதேச செயலர் கே.பிரபாகரமூர்த்தி பிரதம விருந்தினராகவும் கணக்காளர் எஸ்.லோகநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நீதி அமைச்சால் நியமனம் செய்யப்பட்ட 27 பேருக்கு மத்தியஸ்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. இதில் பத்துப் பெண்களும் பதினேழு ஆண்களும் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ்களை பிரதேச செயலாளர், கணக்காளர், சமுர்த்தி மகாசங்க முகாமையாளர், பிரதேச செயலக சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஆகியோர் வழங்கினர்.

இவர்கள் தமது கடமைகளை 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பொறுப்பேற்று செயல்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய அதிபர்
கு. திருச்செல்வத்தின் அன்புத் தந்தை
சி. குருநாதபிள்ளை
அவர்களின் மரணச்செய்தி கேட்டு துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரின் உறவுகளுடன் ஆறுதல் பகிர்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

(11932)(6,8,9)

## கலா பூஷணம்-2011



திரு.பொன்னையா இராசகுலசிங்கம்
(தேவர் ஆட்ஸ்-மீசாலை கிழக்கு)

2011 அரச விருதான கலாபூஷணம் விருது வட கிழக்கில் ஓவியத் துறையில் வழங்கப்பட்ட தனி விருதாகும்.

இவ் விருது இவருக்கு கிடைக்கபெற்றதையிட்டு மிக்க மகிழ்வடைகின்றோம். மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் சுவர் ஓவியங்கள், திரை ஓவியங்கள், திருமுறைகள் என்பவற்றை ஆக்கித் தந்தவர் என்பதுடன் வடமாகாணத்தில் பல ஆலயங்களில் பல வர்ண ஓவியங்களையும் வரைந்துள்ளதுடன் பல வர்த்தக ஸ்தாபனங்களின் பெயர்ப் பலகைகளையும் ஆக்கியுள்ளார்.

*இவரது கலை இன்னும் சிறப்படைய வாழ்த்துவோர்*
*மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார்*
*தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர்*

## நத்தார் புதுவருட பரிசில்களுக்கு......




★ சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
★ நவீன டிசைன், ரெடிமேட் ஆடைகள்
★ நவநாகரிக நங்கையர்களுக்கேற்ற சல்வார், சுடிதார், ஸ்கேட் அன் பிளவுஸ் மற்றும் ஆடைகளுக்கும்
★ ஆடவர்களுக்கான சிறுவர்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளுக்கும்

மிலேனியம் பெஷன்
& பொம்பே பஸார்
MILLENNIUM FASHION
& BOMBAY BAZAAR
No.10,11,POWER HOUSE RD.
GRAND BAZAAR, JAFFNA
T.P: 021 222 9399 (மலாயன் கபே முன்பாக)

(11948)(22,6,7)

## வாழ்த்தி வணங்குகிறோம்

முருகேசு ஐயர் - இராசம்மா
தம்பதியரின் ஏக புத்திரன்
**பிரம்மஸ்ரீ மு.தியாகராஜ ஐயர்**
*(இளைப்பாறிய தபால் அத்தியட்சகர்)*

இன்று தனது 75ஆவது அகவையைப் பூர்த்தி செய்வதையிட்டு உடல், உள, சமூக, ஆன்மிக ஆரோக்கியத்துடன் நீடூழிவாழ எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுவதோடு வையத்துள் வாழ்வாங்கு வாழும்
தியாகராஜ ஐயர் - கருணாகடாட்சி (பாப்பா)
தம்பதியரின் பாதம் பணிந்து
அவர்தம் நல்லாசிகளை
நாமும் வேண்டி நிற்கின்றோம்.

ஆசிகளை வேண்டி நிற்கும்,
சுந்தரராஜன் ஐயர் குடும்பம்,
பாலநடராஜன் ஐயர் குடும்பம்,
கமலா-குகதாஸ் சர்மா குடும்பம் (பாப்பா),
ஹேமா-கமலநாதன் குடும்பம்,
லோசனா-ஜெகதீஸ்வர ஐயர் குடும்பம்,
பிரபா-கந்தசாமி ஐயர்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(11933)(5,6,9)

## உளம் கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



17.12.2011 சனிக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விருது வழங்கும் விழாவில் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட நாடகக் கலைஞர்
**இராசையா பீதாம்பரம் (பர்குணம்)** அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் சகல சௌபாக்கியங்களையும் பெற்று நீடூழி காலம் வாழ்ந்து கலைத்துறைக்குத் தமது சேவையை ஆற்ற வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்.

ராஜா கிறீம்ஹவுஸ்,
சரஸ்வதி மண்டபம்,
இல.37,இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
ராஜா கிறீம்ஹவுஸ்
குடும்பத்தினர்.

(11930)(2,6,9)

## எங்கள் வழிகளிலிருந்து விலகி
# உங்கள் வழிகளை உருவாக்குவோம்

உங்கள் ஒவ்வொரு தேவைகளிலும் மேலதிகமாக ஒரு படி முன்னேறுவதற்கு உங்களுடன் துணை நிற்கிறது உங்களுக்கேற்ற நிலையான வைப்பு

| காலம் | மாதாந்தம் | வ.வ.வீ | காலாண்டு | வ.வ.வீ | அரையாண்டு | வ.வ.வீ | வருடாந்தம் | வ.வ.வீ | முதிர்ச்சி | வ.வ.வீ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 மாதம் | | | | | | | | | 11.00 | 11.46 |
| 6 மாதம் | | | | | | | | | 11.50 | 11.83 |
| 12 மாதம் | 11.00 | 11.57 | 11.00 | 11.46 | 11.25 | 11.57 | | | 12.00 | 12.00 |
| 24 மாதம் | 12.00 | 12.68 | 12.00 | 12.55 | 12.25 | 12.63 | 12.25 | 12.25 | 12.50 | 11.80 |
| 36 மாதம் | 12.00 | 12.68 | 12.00 | 12.55 | 12.25 | 12.63 | 12.25 | 12.25 | 12.50 | 11.20 |
| 48 மாதம் | 12.00 | 12.68 | 12.25 | 12.82 | 12.50 | 12.89 | 12.50 | 12.50 | 13.00 | 11.04 |
| 60 மாதம் | 12.00 | 12.68 | 12.25 | 12.82 | 12.50 | 12.89 | 12.75 | 12.75 | 13.00 | 10.53 |

முத்த பிரஜைகளுக்கு ஒரு வருடத்திற்கு மேலதிகமாக வருடாந்தம் 0.5%
வட்டி வீதம் அறிவிக்கப்பாமல் மாறுதலுக்குட்படலாம்.
வ.வ.வீ வருடாந்த வட்டி வீதம்

| வவுனியா | யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு | களுத்துறை | மாத்தறை | எம்பிலிப்பிட்டிய | நீர்கொழும்பு | பண்டாரவளை | பொலன்னறுவ |
|---|---|---|---|---|---|---|---|---|
| 0773 425 113 | 0773 464 399 | 0771 096 995 | 0771 080 624 | 0777 688 712 | 0773 296 195 | 0772 620 662 | 0772 612 113 | 0772 929 576 |
| அநுராதபுரம் | இரத்தினபுரி | திருகோணமலை | பலாங்கொட | ஹொரண | காலி | ஹம்பந்தோட்டை | பாணந்துறை | |
| 252 225 838 | 0777 321 208 | 077 7321 206 | 0772 013 904 | 0777 776 012 | 0777 557 044 | 0772 442 226 | 0773740 662 | |

| கொழும்பு | சஹன் - 0772 384 880 | டிரோன் - 0772 069 796 |
|---|---|---|

பாட்லீட்பினான்ஸ்
பாட்லீட்ரான்ஸ்கெபிரலின் அங்கத்துவ நிறுவனம்

2011ம் ஆண்டின் 42ம் இலக்கம் நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.
1983 நவம்பர் 30 முதல் இணைக்கப்பட்டுள்ளது.

பாட்லீட் பினான்ஸ் பிஎல்சி BBB- (RAM)*
2வது மாடி, பாட்லீட் ஹவுஸ், 65, பிறேபுறூக் பிளேஸ், கொழும்பு 2.
பக்ஸ்: 011 5333494 மின்னஞ்சல்: fd@bartleetfinance.com
இணையதளம்: www.bartleetfinance.com
*RAM - மலேசிய கணக்கீட்டு நிறுவனம்.

# பட்ஜெட் இறுதி நாளில் சபையில் சூடு பறந்தது
# கூட்டமைப்புக்கும் ஜே.வி.பிக்கும் ஜனாதிபதி நன்றி

கூட்டமைப்பு, ஐ.தே.க., ஜே.வி.பி. என்பன எதிர்த்து வாக்களித்தபோது நாடாளுமன்றத்தில் 98 மேலதிக வாக்குகளால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது வரவு செலவுத்திட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டது. பட்ஜெட்டுக்கு ஆதரவாக 158 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் கிடைத்தன.

பட்ஜெட்டை சபை முதல்வரும் நீர்ப்பாசன வடிகாலமைப்பு நீர்வழங்கல் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த மதிப்பீடுகளின்படி துண்டு விழும் தொகையை எவ்வாறு சமாளிப்பது? வழங்கப்படும் நிவாரணங்கள் என்ன என்பதை விளக்கும் வரவு செலவுத்திட்ட இரகசியங்களை நவம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதி சபையில் சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி வரவு செலவுதிட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த வேளையில் நாடாளுமன்றத்தில் எப்போதும் இல்லாத வகையில் கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றன.

ஜனாதிபதியின் உரைமீதான இரண்டாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதம் 17 நாள்களும் இடம்பெற்றன. வழமையாக எல்லா அமைச்சுக்களுக்குமான ஒதுக்கீடுகள் தொடர்பாகச் சபையிலே விவாதிக்கப்படும்.

குறிப்பிட்ட தினங்களுக்குள் எல்லா அமைச்சுகளுக்குமான ஒதுக்கீடு தொடர்பாகச் சபையில் விவாதிக்க நேரம் போதாது என்பதால் 21 அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தெரிவுக் குழுக்கள் மட்டத்தில் பரிசீலனை செய்து அங்கீகரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

நேற்று இறுதிநாளன்று நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதமும் இறுதி வாக்கெடுப்பும் நடைபெற்றது.

இறுதி நாள் விவாதம் வழமையை விடக் காரசாரமாகவே இருந்தது. எதிர்தரப்பில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களான ரவி கருணாநா்யக்க, தயாசிறி ஜயசேகர, ஹர்ஷா டிசில்வா ஆகியோரின் உரைகள் ஆளும் தரப்பினருக்குக் கடும் சூட்டைக் கிளப்பி விட்டன.

அதே போன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சேனாதிராசாவின் உரை அரசுக்கு சவால் விடுவது போல் இருந்தது. மாவை சேனாதிராசாவின் கேள்விகளுக்கு அரசு தரப்பில் இருந்து உருப்படியாகப் பதில் அளித்து எவரும் பேசவில்லை.

### ஜனாதிபதி மாளிகையின் முன் போய் சத்தியாக்கிரகம் செய்பவர்கள்

மாலை வேளையில் தயாசிறி ஜயசேகரவின் பேச்சு சற்றுக் கவனிக்கக் கூடியதாகவிருந்தது.

அதாவது ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு கருணா அம்மான் மீதும் ஈ.பி.டி.பி துணைப்படைகள் மீதும் குற்றம் சாட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தின் முன் போய் சத்தியாக்கிரகம் செய்த அமைச்சர் விமல் வீரவன்ச நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை எதிர்த்து ஜனாதிபதி அலுவலகத்தின் முன் போய் உண்ணாவிரதம் இருக்கட்டும்.இரண்டு நாள்களின் பின் நான் இரண்டு செவ்விளநீர்களை எடுத்துக் கொண்டு வருகின்றேன் என்றார். இதனால் சபையில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. இப்படியான ஒரு சூழலில் மாலை 4.18 மணிக்கு ஜனாதிபதி நாடாளுமன்றுக்கு வருகை தந்தார்.

### ஜனாதிபதியின் வருகையும் உரையும்

ஜனாதிபதியின் வரவைத் தொடர்ந்து சபையில் அமைதி ஏற்பட்டது. நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி விவாதத்துக்குப் பதில் அளித்தார்.

ஜனாதிபதி வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்த தினத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களில் வெளிநடப்புச் செய்த ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்றுச் சபையில் இருந்தனர்.

### கூட்டணி - ஜே.வி.பி உறுப்பினர்கள் பாராட்டு

ஜனாதிபதி தனது உரையை ஆரம்பித்தவுடனேயே 'நான் வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்த போது அதனை செவிமடுக்கவும் வாய்ப்பளிக்




காமல் தடுக்கும் ஒரு சூழ்ச்சி மேற்கொள்ளப்பட்டது. என்றாலும் சம்பிரதாயங்களை மதித்து கடைசிவரை இந்த சபையில் இருந்து வரவு செலவுத்திட்ட உரையை அவதானித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு,ஜே.வி.பி உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டார் ஜனாதிபதி.

### பொறுப்பை தவறிவிட்ட எதிர்க்கட்சி

ஆளும் கட்சியைப் போன்றே பிரதான எதிர்க்கட்சிக்கும் பாரிய பொறுப்புக்கள் உண்டு. சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தை விவாதிக்கவும் - ஆலோசனைகளை வழங்கவும் வேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமை. ஆனால் எதிர்க்கட்சி இந்த வாய்ப்பைத் தவறிவிட்டு விட்டது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். இன்று அவர்களுக்கு இருப்பது தலைமைத்துவப் பிரச்சினை ஒன்று தான் என்றும் சுட்டிக் காட்டினார்.

### ஊடகவியலாளர்களுக்கான வாகனக் கடன் வழங்கும் சேவைகால எல்லை குறைப்பு

ஜனாதிபதி தனது வரவு செலவுத் திட்டத்தின் போது ஊடகவியலாளர்கள் தமக்கான வளங்களைப் பொறுத்து 12 லட்சம் ரூபாவரை வட்டியில்லாக் கடன் வழங்கப்படும். ஆனால் ஊடகவியலாளர்களாக 25 வருடங்கள் சேவையாற்றி இருக்க் வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் நேற்றுப் பதில் அளிக்கும் போது 25 வருட சேவை 18 வருடங்களாக குறைக்கப்பட்டுள்ளது என்று அறிவித்து ஊடகவியலாளர்களுக்கு இனிப்பான செய்தியை விடுத்தார்.

இறுதியாக வாக்களிப்பு இடம்பெற்றது.

வாக்களிப்பு நடத்தப்பட்ட வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 13 உறுப்பினர்களும் சபையில் இருந்தனர். தேசிய ஜனநாயக முன்னணி(ஜே.வி.பி) உறுப்பினர்கள் அனைவரும் சமுகமளித்திருந்தார். ஐக்கிய தேசியக்கட்சி வரிசையில் கெ.சிறிரங்கா காணப்படவில்லை.

# புலிகள் கோரிய தனிநாட்டையா நாம் கேட்கிறோம்?
# இதுகூடப் புரியாத அரசுடன் பேச்சைத் தொடர்வதா?

## கூட்டமைப்பு விரைவில் முடிவு; ஜனாதிபதிக்கு சுரேஷ் பதிலடி


கொழும்பு, டிசெ. 22

இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக இலங்கை அரசுடன் தொடர்ந்தும் பேச்சுகளை முன்னெடுப்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் கூடி ஆராய்ந்து முக்கிய தீர்மானமொன்றை எடுக்கவுள்ளது.

மாகாண சபைகளுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவது எந்தவகையிலும் சாத்தியமில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தனி நாட்டைக் கோரினர். நாம் ஒன்றுபட்ட நாட்டுக்குள் அதிகாரப்பகிர்வுடனான சுயாட்சியைக் கோருகின்றோம். இவை இரண்டுக்கும் வித்தியாசம் உள்ளது என்பதை ஜனாதிபதி புரிந்து கொள்ளவேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிலடி கொடுத்துள்ளது.

தமிழர்களுக்கு எவ்வித அதிகாரங்களையும் வழங்கமாட்டோம் எனக் கூறி ஜனாதிபதியே இனவாதியாகச் செயறபடுகின்றார். நாம் இனவாதிகள் அல்லர்



என்றும் கூட்டமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலிகளின் பாணியிலேயே செயற்படுகின்றனர். எமது பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்குவது சாத்தியப்படாத விடயம்'' என்று பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் கூற்று தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவெனக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் வினவினோம். இதன்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி கூறிய விடயங்கள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் கூடி ஆராயும்.

பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படாது என ஜனாதிபதி கூறியுள்ளார்.

தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு அரசு தயாராக இல்லை என்பதையே ஜனாதிபதியின் கூற்று உணர்த்துகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் அரசுடன் தொடர்ந்தும் பேசுவதா அல்லது இல்லையா என்பது குறித்துப் பரிசீலித்துப் பார்க்கவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.

அரசியல் தீர்வு விவகாரத்தில் பொலிஸ், காணி அதிகாரங்கள் உள்ளடக்கப்படாவிட்டால், அவ்வாறானதொரு பேச்சில் கலந்து கொள்வது எந்தவகையிலும் பயனைத் தரப்போவதில்லை.

சுயாட்சி அலகு ஏற்றுக்கொள்ளப்படுமாகவிருந்தால் கட்டாயம் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேவை. இல்லையேல், நிர்வாகத்தை அபிவிருத்தி பாதையை நோக்கிக்கொண்டு செல்லமுடியாது போய்விடும். இந்தியா அமெரிக்கா, ஜேர்மன், கனடா போன்ற நாடுகளிலும் மாநிலங்களே சட்ட ஒழுங்குகளைப் பராமரிக்கின்றன என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

அதிகாரங்கள் வழங்கப்படாத ஓர் பேச்சு மேடைக்குச் சென்று இனியும் பேச வேண்டுமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

நாம் எமது மக்களுக்கான அதிகாரங்களையே கோருகின்றோம். சிங்களவர்களுக்கு எதிராகச் செயற்படும் இனவாதிகள் அல்லர்.

தமிழர்களுக்கு அதைத் தரமாட்டோம், இதைத் தரமாட்டோம் எனக் கூறுவதுதான் இனவாதம். ஜனாதிபதி அதனையே தற்போது செய்கின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாட்டைக் கோரினர். ஒன்றுபட்ட நாட்டுக்குள் அதிகாரப்பகிர்வையே நாம் கோருகின்றோம். இவை இரண்டுக்கும் வித்தியாசம் உள்ளது என்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ளவேண்டும். இதனை உணராதது ஜனாதிபதியின் தவறு என்றே சொல்லலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருட்டி, மிரட்டி எதையும் செய்யமுடியாது என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். முக்கியமான விடயங்களைத் தரமாட்டோம் எனத் தெளிவாகக் கூறிய பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எம்மை அழைப்பது எந்த வகையில் நியாயம்?

தமிழ் மக்கள் மீது அரசுக்கு உண்மையிலேயே அக்கறை இருந்தால், உடன் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவேண்டும். இல்லையேல், அரசின் கூற்றுகளை எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கினால்தான் சுயாட்சியை முன்னெடுக்கலாம்.இவை இல்லாததொரு தீர்வு முழுமை பெறாது.

ஜனாதிபதியின் கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளதால் அது குறித்து பரிசீலிக்கவேண்டியுள்ளது. அரசுடன் பேச்சைத் தொடர்ந்து முன்னெடுப்பதா அல்லது இல்லையா என்பதை விரைவில் கூடி ஆராய்வோம்.

அதிகாரப்பகிர்வு என்பது ஐ.நா. சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனையே நாம் கோருகின்றோம். சர்வதேச நியதியை நாம் கேட்கின்றோமே தவிர, நாம் பிச்சை கேட்கவில்லை என்பதை அரசு புரிந்து செயற்பட வேண்டும் - என்றார். (த-சி)

# ரூனியின் கிறிஸ்மஸ் பரிசு



மனைவி கூலினுடன் ரூனி

இங்கிலாந்து அணியின் முன்கள வீரரான வேயர்ன் ரூனி, பந்தயக்குதிரை ஒன்றை வாங்கி தனது மனைவி கூலினுக்கு கிறிஸ் மஸ் பாிசாக வழங்கியுள்ளார்.

வேயர்ன் ரூனி தனது மனைவி கூலின் கர்ப்பமாக இருந்த போது, விபசார பெண் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தார். இதனால், இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பின்னர் நண்பர்களின் சமரசத்தின் பெயரில் இருவரும் மீண்டும் இணைந்தனர்.

இந்நிலையில் இந்த கிறிஸ் மஸ் பண்டிகையையொட்டி கூலினுக்கு பந்தயக் குதிரை ஒன்றை வாங்கி பரிசளிக்க ரூனி முடிவு செய்துள்ளார்.

ஷெசயர் நகரில் மற்றொரு இங்கிலாந்து உதைபந்தாட்ட வீரரான மைக்கல் வோவனுக்கு சொந்தமான குதிரைப் பண்ணை உள்ளது.

இந்தக் குதிரைப் பண்ணைக்கு நேற்றுமுன்தினம் சென்ற ரூனி 2 வயது நிரம்பிய கோல்ட் என்ற பந்தயக் குதிரையை 63 ஆயிரம் பவுண்டுகளுக்கு வாங்கியுள்ளார் எனத் தெரிகிறது.

இந்தப் பண்ணையில் உள்ள குதிரைகள் இந்த ஆண்டில் மாத்திரம் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்று 5 லட்சம் யூரோவரை வருமானம் ஈட்டியுள்ளன.

2007ஆம் ஆண்டு 100 குதிரைகளுடன் இந்த பண்ணையை மைக்கல் வோவன் வாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்குத் தடை

'டாக்கா பிரீமியர் லீக்' கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தடைவிதித்துள்ளது.

பங்களாதேஷின் உள்ளூர் கழகங்களுக்கிடையில் நடைபெறவுள்ள 'டாக்கா பிரீமியர் லீக்' கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்கு பாகிஸ்தான் வீரர்கள் சிலர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், அடுத்த மாதம் ஐச்சிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டிகளுக்கு பாகிஸ்தான் வீரர்கள் தம்மைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், அவர்களை காயத்திலிருந்து காத்துக்கொள்வதற்காகவும் 'டாக்கா பிரீமியர் லீக்' போட்டிகளில் பங்கேற்க தமது வீரர்கள் சிலருக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அனுமதி வழங்கவில்லை.

பங்களாதேஷ் உள்ளூர் போட்டியில் பங்குபற்ற அனுமதி மறுக்கப்பட்ட வீரர்களின் பெயர்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிடாத போதிலும், யூனிஸ்கான், சொஹைப் மாலிக், இம்ரான் பர்ஹாத், மொஹமட் ஹபீஸ், அப்துர் ரெஹ்மான், கம்ரன் அக்மல், வஹாப் ரியாஸ், உமர் அக்மல், சொஹைல் தன்வீர் ஆகியோரே வெவ்வேறு கழகங்களில் விளையாடுவதற்கு அழைக்கப்பட்டி ருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்கு எதிராக ஆஸி. ஓட்டங்களைக் குவிக்கும்



''இந்திய அணியின் பந்து வீச்சு பலவீனமானதாக உள்ளது. இது இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின்போது ஆஸ்திரேலிய அணி ஓட்டங்களைக் குவிக்க சாதகமாக இருக்கும்'' என ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழல்பந்து ஜாம்பவானான ஷேர்ண் வோர்ன் தெரிவித்துள்ளார்

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்திய அணியின் துடுப்பாட்டம் தற்போது சிறப்பாகவே உள்ளது. ஆனால், பந்துவீச்சு இன்னும் பலவீனமாகவே காணப்படுகிறது.

சஹீர்கான் அல்லது இஷாந்த் ஷர்மா ஆகியோர் காயத்திலிருப்பது ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்களுக்கு நல்லநேரம் என்றே சொல்ல வேண்டும்.

இந்திய அணியின் பந்துவீச்சு பலவீனமாக இருப்பதால் ஆஸ்திரேலியாவுக்கு அது சாதகமாக இருக்கும். ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்கள் இதைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆஸ்திரேலிய வீரர்களின் காயத்துக்கு, அதிகமான போட்டிகளில் விளையாடுவதுதான் காரணம் -என்றார்.

# டேவிட் வில்லா தயாராகி விடுவார்!



2012ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 'யூரோ' உதைபந்தாட்டத் தொடருக்கு முன்னர் டேவிட் வில்லா தயாராகி விடுவார் என வைத்தியர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கழகங்களுக்கிடையிலான உலகக் கிண்ண அரையிறுதியாட்டத்தில், அல்சாத் அணிக்கு எதிராக விளையாடியபோது பார்சிலோனா வீரரான டேவிட் வில்லாவின் இடது காலில் முறிவு ஏற்பட்டது.


இதையடுத்து ஸ்பெயின் திரும்பிய டேவிட் வில்லாவுக்கு பார்சிலோனா வைத்தியசாலையில், நேற்று முன்தினம் மதியம் அறுவைச் சிகிச்சை நடந்தது.

அறுவைச் சிகிச்சை நல்லபடியாக நடந்து முடிந்ததாக அவருக்கு அறுவை சிகிச்சை செய்த வைத்தியரான ரேமான் கூயுகத் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

''டேவிட் வில்லாவுக்கு காலில் 'பிளேட்' பொருத்தப்பட்டடுள்ளது. இதனை அகற்ற குறைந்தது 5 வாரங்கள் ஆகலாம். அதன்பிறகுதான் அவருக்கு மாற்றம் தெரியவரும்.

''எனினும், 4 முதல் 5 மாதங்கள் வரை அவர் ஓய்வு எடுக்க வேண்டியிருக்கும். ஆனாலும், 'யூரோ-2012' உதைபந்தாட்டத் தொடருக்கு முன்னர் அவர் முழுமையாகத் தயாராகி விடுவார்'' என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# 7 வருட சிறை



ஊழல் சர்ச்சையில் சிக்கிய செவிலா அணியின் தலைவர் ஜோஸ் மரியா டெல் நிடோவுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தெற்கு ஸ்பெய்னின் மார்பெலா மாநகராட்சியில்1999 முதல் 2003ஆம் ஆண்டு வரை, தற்போது செவிலா அணியின் தலைவரான ஜோஸ் மரியா டெல் நிடோ வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

அவர் பதவி வகித்த காலத்தில் சுமார் 67 லட்சம் டொலர்கள் வரை ஊழல் செய்தார் என மரியா டெல் மீது மலாக்கா நகர நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு கடந்த ஞாயிறன்று வெளிவந்தது.

விசாரணையில் ஜோஸ் மரியா ஊழலில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டது. இதையடுத்து அவருக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஜோஸ் மரியா மாத்திரமல்லாமல் அப்போதைய மார்பெலா மேயர் ஜூலியன் முன்னோசும் 7 ஆண்டு காலம் சிறைத் தண்டனைக்குள்ளானார்.

தண்டனையை எதிர்த்து மாட்ரிட்டில் உள்ள மேன் நீதிமன்றத்தில் முறையீடு செய்ய ஜோஸ் மரியா முடிவு செய்துள்ளார்.

2002ஆம் ஆண்டு ஜோஸ் மரியா டெல் நிடோ செவிலா அணியின் தலைவராகப் பொறுப்பேற்றார். அதன்பிறகு அணி சீரான முன்னேற்றம் கண்டுவந்தது.

'யூபா', 'கோபா டெல் ரே' போன்ற உதைபந்தாட்டத் தொடர்களில் தலா இரு தடவைகளும், 'ஸ்பானீஷ் சூப்பர் கிண்ணம்', 'யூபா சூப்பர் கிண்ணம்' போன்ற போட்டிகளில் தலா ஒரு முறையும் செவிலா சம்பியன் பட்டத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

# 2013 - 14 உலகக் கிண்ணம் மொராக்கோவில்

2013-2014ஆம் ஆண்டுகளுக்கான கழகங்களுக்கிடையிலான உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரை நடத்தும் வாய்ப்பு ஆபிரிக்க நாடான மொராக்கோவுக்குக் கிடைத்துள்ளது.

இதன்மூலம் கௌரவமிக்க இந்தப் போட்டியை நடத்தும் முதல் ஆபிரிக்க நாடு என்ற பெருமையை மொராக்கோ பெறவுள்ளது.

2000ஆம் ஆண்டு முதல் கழகங்களுக்கிடையிலான உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் 'பிபா'வால் நடத்தப்பட்டு வருகிறது.

சமீபத்தில் ஜப்பானில் நடந்து முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் பார்சிலோனா அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

தொடர்ந்து 2012ஆம் ஆண்டுக்கான போட்டியும் ஜப்பானிலேயே நடைபெறவுள்ளது.

இதையடுத்து, 2013ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணத் தொடர் மொராக்கோவில் நடைபெற உள்ளது என 'பிபா' அறிவித்துள்ளது.

அதுமாத்திரமல்லாமல் 2014ஆம் ஆண்டுக்கான தொடரையும் இந்தக் குட்டி நாடே நடத்தவுள்ளது.

ஆபிரிக்க நாட்டில் இதுவரை கழகங்களுக்கிடையிலான உலகக் கிண்ணத் தொடர் நடந்ததில்லை. முதல் முறையாக இந்தப் போட்டியை நடத்தும் வாய்ப்பை மொராக்கோ பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு குடியரசு, ஈரான், தென்னாபிரிக்கா ஆகிய 3 நாடுகளும் இந்த உலகக் கிண்ணத் தொடரை நடத்த விருப்பம் தெரிவித்து களத்தில் இருந்தன. ஆனால், கடைசி நேரத்தில் இந்த 3 நாடுகளும் போட்டியிலிருந்து விலகிவிட்டன.

## மான்செஸ்டர் சிட்டி, யுனைடெட் அணிகள் வெற்றி

இங்கிலாந்து 'பிரீமியர் லீக்' உதைபந்தாட்டத் தொடரின் லீக் போட்டி ஒன்றில், மான்செஸ்டர் சிட்டி அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் அணியை வீழ்த்தியது

இதுவரை விளையாடிய 16 'லீக்' போட்டிகளில் 13 வெற்றிகள், 2 சமநிலை,ஒரு தோல்வி உட்பட 41 புள்ளிகளைப் பெற்ற மான்செஸ்டர் சிட்டி முதலிடத்தில் நீடிக்கிறது. இரண்டாவது இடத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணி (12 வெற்றிகள், 3 சமநிலை, ஒரு தோல்வி) 39 புள்ளிகளுடன் உள்ளது.

# பணிந்தது பங்களாதேஷ்




பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி பங்களாதேஷ் அணியை 7 இலக்குகளால் வீழ்த்தி தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணி இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடியது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று தொடரில் முன்னிலை பெற்றிருந்தது. இந்த நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் மிர்பூரில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கமைய துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல இலக்குகளையும் இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சகிப் அல் ஹசன் 144, நபீஸ் 97, முஷ்பிகுர் றஹீம் 40 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்து வீச்சில் உமர் குல், ஷீமா தலா 3 இலக்குகளையும், அஜ்மல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 470 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் தௌபீக் உமர் 130, மிஸ்பா உல் ஹக் 70, அஷார் அலி 57, டானே அக்மல் 53 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்து வீச்சில் பங்களாதேஷ் சார்பில் சகிப் அல் ஹசன் 6 இலக்குகளை கைப்பற்றினர்.

132 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவில் 5 இலக்குகளை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் நாஸார் ஹுஸைன் 30, ரகிம் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர். நேற்றைய இறுதி நாளில் தோல்வியைத் தவிர்க்க பங்களாதேஷ் அணி கடுமையாகப் போராட வேண்டிய நிலையில் களம் புகுந்தது.

இந்த ஜோடி நேற்றைய நாள் ஆரம்பத்திலிருந்தே மிகச் சிறப்பாக இணைப்பாட்டத்தை முன்னெடுத்தது. இவர்களின் இணைப்பாட்டத்தின் மூலம் பங்களாதேஷ் அணி தோல்வியைத் தவிர்க்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஹுஸைன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி தனது முதலாவது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இவருடன் இணைந்து மறுமுனையில் துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் ரகிமும் தனது ஒன்பதாவது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.



ஆறாவது இலக்குக்காக 117 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஹுஸைன் 79 ஓட்டங்களுடன் அப்துல் ரஹிமானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து அணி 221 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ரகிம் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்வரிசையில் எவரும் இரட்டை இலக்கத்தை எட்டாத நிலையில் பங்களாதேஷ் அணி 234 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் அப்துர் ரஹ்மான் 4 இலக்குகளை வீழ்த்தினர்.

103 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. இருப்பினும் அணி 7 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதல் இன்னிங்ஸில் சதமடித்து அசத்திய தௌபீக் உமர் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் இணைந்த அஷார் அலி, மொஹமட் ஹபீஸ் ஜோடி அணியின் ஓட்ட வேகத்தை அதிகரித்தது. வேகமாக ஓட்டங்களைக் குவித்த இந்த ஜோடி இரண்டாவது இலக்குக்காக 63 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஹபீஸ் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அஷார் அலி 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 101 ஓட்டங்களுக்கு மூன்றாவது இலக்கை இழந்தது.

இறுதியில் இணைந்த யுனிஸ்கான், மிஸ்பா மேலதிக இலக்கு இழப்பின்றி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர். பாகிஸ்தான் அணி 20.5 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. யுனிஸ் 16, மிஸ்பா 6 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். ஆட்ட நாயகனாக பங்களாதேஷின் சகிப் அல் ஹசனும், தொடர் ஆட்ட நாயகனாக பாகிஸ்தானின் யுனிஸ் கானும் தெரிவானார்கள். (ந-15)




# பாதி சம்பளம்

உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றியமைக்காக இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளத்தில் 46 சதவீதத்தை சர்வதேச கிரிக்கெட் சபை(ஐ.சி.சி.) கடந்த 16 ஆம் திகதி வழங்கியுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

20 லட்சம் டொலர் பணத்தை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கு வழங்காமல் வீரர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வைப்பிலிட்டுள்ளதாக தெரிய வருவதாகவும் மேற்படி இணையத்தளம் தெரிவித்துள்ளது.

உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றியமைக்காக நாடொன்றுக்கு வழங்கப்பட வேண்டிய பணத்தில் 25 சதவீதம் வீரர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதன்படி இலங்கை வீரர்களுக்கு 43 லட்சம் டொலர் வழங்கப்பட வேண்டியிருந்தது.

இந்த நிலையில் ஒவ்வொரு வீரருக்கும் வழங்கப்பட வேண்டிய தொகை மற்றும் வங்கிக் கணக்கு இலக்கங்களை ஐ.சி.சிக்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்திருந்ததாகவும் இந்தக் கொடுப்பனவு குறித்து அறிந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொடுப்பனவு தொடர்பான ஏற்பாடுகள் குறித்து சர்வதேச கிரிக்கெட் வீரர்களின் சங்கங்களின் சம்மேளனத்திற்கும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டொனி ஐரிஸ் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் நிதி நெருக்கடி காரணமாக இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கு கடந்த 8 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்துக்கு ஐ.சி.சி. 20 லட்சம் டொலர் வழங்க இணங்கியுள்ளதாகவும் அதன்மூலம் பயிற்றுநருக்கும் வீரர்களுக்கும் சம்பளம் வழங்கப்பட முடியும் எனவும் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறியிருந்தார்.

உலகக் கிண்ணப் போட்டிக்காக அம்பாந்தோட்டை, பள்ளேகலவில் இரு புதிய அரங்குகளை நிர்மாணிப்பதற்கும் ஆர்.பிரேமதாஸ அரங்கை புனரமைப்பதற்கும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் பணம் செலவிட்டதையடுத்து அந்த நிறுவனம் 32.5 மில்லியன் டொலர் கடனில் சிக்கியுள்ளதால் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. (ந-15)



## அமைச்சுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றத் தெரிவுக்குழு தொடர்பிலான எமது நிலைப்பாட்டை எடுத்துச்சொல்லிவிட்டோம். பேச்சுகளின்போது பொறுமையாக இருந்து அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைத்துத் தானே வருகிறோம். அவர்கள் கூறும் ஒத்துழைப்பு எந்த அடிப்படையிலானது என்பதைக் கேட்க விரும்புகிறேன். பைல்களைத் தூக்கிக்கொண்டு அமைச்சுகளைப் பெற்று அவர்களின் பின்னால் நிற்பதையா இவர்கள் எதிர்பார்க்கின்றனர்? - என்று கேட்டார் சம்பந்தன் எம்.பி.

(ங-சி)

### தவறிவிட்டது

வடலியடைப்பைச் சேர்ந்த சற்குணசிங்கம் சஜீவ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை [932752050V], மோட்டார் வாகண அனுமதிப்பத்திரம் இல.[96-××××] என்பன பண்டத்தரிப்புக்கும் சித்தன்கேணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு- 0773690938

# தமிழக மீனவர்கள் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம், டிசெ.22

ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவுக் கடற் பகுதிகளில் கடற்படையினரிடம் அகப்பட்டுக் கொண்ட 16 இந்திய மீனவர்கள் நேற்றுபொலிஸாரால் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கடல்கொந்தளிப்புக் காரணமாக படகுகளில் நீர் புகுந்த காரணத்தாலேயே இலங்கைப் பகுதிக்கு படகுகளுடன் ஒதுங்கியதாக இதன்போது இந்திய மீனவர்கள் குறிப்பிட்டனர்.

இனிமேல் இலங்கைக் கடல் பகுதிக்கு அனுமதியின்றி எந்தக் காரணமும் கூறிக்கொண்டு வரக்கூடாது என மிகக் கடுமையாக மீனவர்கள் பதில் நீதவானால் எச்சரிக்கப்பட்டனர். அத்துடன் நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு முன்னராக மீனவர்களை இந்தியாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யும்படி பதில் நீதவானால் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கும் நோக்கத்துடனேயே இலங்கைக் கடல் பகுதிக்குள் நுழைந்ததாகவும் எனினும் அவர்களை விடுக்கும்படி நீதிமன்றில் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் பதில் கடமையிலிருந்த நீதவான், மீனவர்களது படகுகளை பார்வையிட்டு உண்மை நிலைவரத்தை அறிந்து கொண்ட பின்னர் இந்திய மீனவர்களை அவர்களது நாட்டுக்கு அனுப்பும்படி கூறியுள்ளார்.

இந்திய மீனவர்கள் தற்போது கந்தர் மடம் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த மீனவர்கள் அனைவரும் கச்சதீவுப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போதே இலங்கைக் கடற்படையால் பிடித்துச் செல்லப்பட்டதாகவும் இது குறித்து தனக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் தமிழக மீன்பிடித்துறை இன்ஸ்பெக்டர் இராமமூர்த்தி தெரிவித்துள்ளதாக இந்திய செய்தி நிறுவனமான பி.ரி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது. (ங-14)

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்லறி குண்டுகள், கிளைமோர் குண்டுகள், 10 கிலோ எடையுள்ள புலிகளின் தயாரிக்கப்பட்ட வெடிகுண்டுகள், ரீ 81 ரக மோட்டார் பியூஸ்கள் 116, கைக் குண்டுகள் 47, புலிகளால் தயாரிக்கப்பட்ட புதியரக வெடிகுண்டுகள் 09, ஆர். பீ.ஜீ. ரக குண்டுகள், 20 கிலோகிராம் நிறை யுடைய ரீ.என்.ரீ ரக வெடி பொருள்கள். (ங-சி)

## மின் தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர்,.ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களிலும்,

24ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற் பண்ணைப் பகுதி திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங் களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது. (ங)

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை
### சுன்னாகம்
## கூறுவிலைகோரல்

எமது சுன்னாகம் மத்திய சந்தையில் தகரக் கொட்டகை அமைப்பதற்கான கூறுவிலை தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றது. அலுவலகத்திற்கு சமுகமளித்து இடத்தைப் பார்வையிட்டு தவிசாளரின் அல்லது செயலாளரின் ஆலோ சனைப்படி படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி 26.12.2011 ந.ப. 12 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கிடைக்கக் கூடியதாக எமது அலுவலக முகவரிக்கு சமர்ப்பிக் கவும். 27.12.2011 பி.ப. 2 மணிக்கு கூறுவிலை திறந்து பார்வையிடப்படும்.

வலி.தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

தி. பிரகாஷ்
தவிசாளர்,

(C/7123)(6,8,9)

## மண்டைதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் அங்கு சென்ற பொலிஸார் அதனுள் ஆபத்தான வெடிபொருள் இருக்கலாம் எனவும், அந்தக் குழி அருகே செல்ல வேண்டாம் எனவும், காலை அதை வந்து மீட்பதாகவும் கூறி சென்றனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை குறித்த வீட்டுக்கு இராணுவத்தினரும், கடற்படையினரும் சென்றனர். அதன் போது மண்டைத்தீவுக் கடற்படைத் தளத்தில் இருந்து பயிற்சியின் போது ஏவப்பட்ட பிளாஸ்ரிக் எறிகணையே தவறுதலாக வந்து வீழ்ந்ததாக கடற்படையினர் தெரிவித்தனர்.

அத்துடன், குழியினுள் நீர் நிறைந்திருந்ததால், நீர் வற்றிய பின்னரே குழியினுள் இருக்கும் எறிகணையை மீட்க முடியும் என்றும், இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்தால் 'உதயனு'க்கு தெரிவிக்காமல் தங்களுக்கே தெரிவிக்க வேண்டும் எனவும் அவர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, குறித்த எறிகணை வீட்டின் மீது வீழ்ந்திருந்தால் பெரும் அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கும் எனவும், பயிற்சியின் போது இவ்வாறு எறிகணைகளை குடியிருப்புப் பகுதிகள் மீது ஏவிவிடுவது தமிழ் மக்களின் உயிர்களோடு விளையாடும் மனோபாவத்தில் இருந்து இன்னமும் படைத்தரப்பு விடுபடவில்லை என்பதையே காட்டுகிறது என்று அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(ங)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 17.12.2011 அன்று நடைபெற்ற அரச விருது வழங்கும் விழாவில் 'கலாபூசனம்' விருது பெற்ற நாதஸ்வர வித்துவான்

**N. நாராயணசாமி**

அவர்களை எமது மனம் நிறைய வாழ்த்துகின்றோம்.

தாவடி பிள்ளையார் கோயிலடி.

தகவல்:
K.குமாரதாஸ்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் சிவக்கொழுந்து



தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், குரும்பசிட்டியை வசிப்பிடமாகவும் இருபாலையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சிவக்கொழுந்து நேற்று (21.12.2011) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (ஆசிரியர்) அவர்களின் மனைவியும், திருகோணமலை ஆலடிப் பிள்ளையார் கோயில் முன்னாள் பிரதம குரு சுப்பையாக்குருக்கள் -மாணிக்கம்மா தம்பதியரின் மகளும், அகிலாண்டேஸ்வரி (இருபாலை), இராஜேஸ்வரன்(சுவிஸ்), காலஞ்சென்ற பரமேஸ்வரன் (இருபாலை) மற்றும் விக்னேஸ்வரி(சுவிஸ்),பிரபாகரன் (சுவிஸ்), கிருபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சோமசுந்தரக்குருக்கள் (ஓய்வு பெற்ற அதிபர், இருபாலை), கிருஸ்ணகுமாரி (சுவிஸ்), கமலநாயகி (நாரந்தனை), சிவராசா ஐயர் (சுவிஸ்), சுதாஜினி (சுவிஸ்), நாகேஸ்வரி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இருபாலை டச்சு வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மாயனத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சுவீதி,
இருபாலை சந்தி.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

### ஆறுமுகம் மகேஸ்வரன்

(உரிமையாளர், அரிசி ஆலை, புதுறோட், காரைநகர்)



காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், சத்திரந்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் - மகேஸ்வரன் நேற்று (21.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் அருளாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரமதியின் அன்புக் கணவரும், கீதாஞ்சலி, கஜேந்திரன், காலஞ்சென்ற நிறோஜன் மற்றும் வினோஜினி, கஜானி ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன், கனகாம்பிகை, கமலாம்பிகை, விக்னேஸ்வரன், வேதாம்பிகை, குகேஸ்வரன், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நடராசா, பத்மநாதன், ஆறுமுகம் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்), சுந்த ரலிங்கம், மனோன்மணி, சிவகௌரி, சத்தியராணி, பவானி (மருந்துக் கலவையாளர், காரைநகர் பிரதேச வைத்தியசாலை), இராகினி, இராசபூபதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2011) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சத்திரந்தை,
காரைநகர்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.




யாழ். நகருக்கு நாளை
(23.12.2011) வெள்ளிக்கிழமை
வாருங்கள்!
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணத்தில்
The Lovers/
Teen Girls Showroom ஐ...
வந்து பாருங்கள்.

## அச்சுறுத்தி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர். எமது மக்களின் நம்பிக்கையும்- எதிர்பார்ப்புகளும் வீண் போகக் கூடாது என்பதற்காகவே நாங்கள் அரசுடன் பேச்சுகளில் ஈடுபட்டோம்.

ஆனால் ஜனாதிபதி எங்களை அச்சுறுத்தி தான் விரும்பிய தீர்வுத் திட்டம் ஒன்றைத் திணிக்க முயல்கின்றார்.

தன்னிச்சையாக, பலவந்தமாக எம் மீது திணிக்கப்படும் எந்த ஒரு தீர்வுத்திட்டத்தையும் நாங்கள் ஏற்க மாட்டோம். ஜனாதிபதியின் அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியமாட்டோம். எங்கள் பிரதேசத்தில் எங்களை நாங்களே ஆளும் அதிகாரம் எமக்கு வேண்டும். இதனைப் பெறுவதற்கு ஜனநாயக ரீதியாக மக்களைத்

## 7 வயதுச்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாத நபர் ஒருவரால் தூக்கிச் செல்லப்பட்டு அருகில் உள்ள பற்றைக்குள் வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இதனால் கடுமையான இரத்தப் போக்கு ஏற்பட்டு குறித்த சிறுமி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி தெரிவித்த அடையாளங்களை அடிப்படையாகக் கொண்டு கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அதேயிடத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ங-15)

## நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனவரி மாதம் பதில் வழங்குமாறு நான் நிதி அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

எமது வரவு - செலவுத் திட்டத்தை 64 வீதமானவர்கள் ஆதரித்துள்ளனர். இதற்கு இருக்கின்ற எதிர்ப்பையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த வரவு - செலவுத்திட்டத்தை சரியான முறையில் விவாதிக்க, அதில் உள்ள குறை நிறைகளை சரியான முறையில் எடுத்துவைக்க எதிர்க்கட்சியால்முடியாமல் போயுள்ளது.

நாடாளுமன்றத்திற்குப் பதில் கூறும் அரசை வழிநடத்தும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டுள்ளேன். ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைமைத்துவத்தை இனியாவது ஏற்று செயற்பட எதிர்க்கட்சி முன்வரவேண்டும்.

முன்னாள் புலிகளுக்கு புனர்வாழ்வு கொடுப்பதும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதும் நாம் பிரசாரங்களை மேற்கொள்வதற்காக அல்ல. எமது எதிர்காலச் சந்ததியினருக்கு நன்மை கிடைக்கவேண்டும் என்பதற்கே இப்படிச் செய்கிறோம்.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் வாகனங்களை வாங்க விரும்பும் ஊடகவியலாளர்கள் கடன்களைப் பெறுவதற்கு 25 வருட தொழில் அனுபவம் கொண்டிருக்க வேண்டும் என்று நாம் கூறியிருந்தோம். இப்போது 18 வருடங்களாக அந்தக் கால எல்லையைக் குறைத்துள்ளோம்.

நியோ லிபரல்வாதம் என்று எதிர்க்கட்சி இந்த வரவு - செலவுத்திட்டத்தைச் சுட்டிக்காட்டியது. அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக்காக நாம் அரச செலவில் நான்கில் ஒரு பகுதியை ஒதுக்கியுள்ளோம். இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்வைத்துள்ளோம். நியோ லிபரல்வாத பொருளாதாரக் கொள்கை இப்படிப்பட்டதல்ல.

தனியார் முதலீடு 23.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. வறுமை 9 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இப்போது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையையும், அரசியல் தீர்வைக் காண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவையும் அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், நாட்டை வளமானதாக மாற்றுவதற்கும் நாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளின் மனநிலையில் இருந்து விடுபட்டு தேசிய அரசியலில் ஈடுபட முன்வரவேண்டும். அதற்காக எம்முடன் கைகோத்து செயற்பட நாம் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

தேசிய பாதுகாப்புக்காக மாவட்டங்கள் தோறும் இராணுவ முகாம்கள் இருக்கவேண்டும். அவை தேசிய பாதுகாப்புக்காகவே உள்ளன. அந்த முகாம்களை ஒருபோதும் நீக்கமுடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரையும் ஒன்றிணைத்து பலமான எதிர்க்கட்சியை உருவாக்கி அரசை அமைக்க புதிய எதிர்க்கட்சித் தலைவருக்கு சக்தி கிடைக்கவேண்டும் என நான் பிரார்த்தனை செய்கின்றேன் - என்றார். (ங-சி)




திரட்டி போராட்டம் நடத்துவோம். எங்களுடைய கோரிக்கை நிறைவேறும் வரை எங்கள் போராட்டம் தொடரும்.

இந்த அரசு போரால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்தி விட்டோம் -புனர்வாழ்வு அளித்துள்ளோம் என்றெல்லாம் பரப்புரை செய்கின்றது. வெறுமனே அதிகாரிகள் கூறும் விவரங்களை வைத்துக் கொண்டு பெருமை பேச வேண்டாம்.

வடக்கு மாகாணத்தில் இப்பொழுது பெரும் மழையும், வெள்ளமும் ஏற்பட்டுள்ளது. மீள்குடியேற்றம் என்ற பெயரில் குடிசைகளிலும், மர நிழல்களிலும் இருக்கும் மக்கள் பெரும் துன்பங்களுக்கு தள்ளப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மடு ஆகிய பிரதேசங்களில் மக்கள் நிற்கக்கூட இடமில்லாமல் பரிதவிக்கின்றனர். இவர்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தி அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வழங்க வேண்டும்.

சென்ற வருடம் இப்படி மழை ஏற்பட்ட போது எங்களுடைய கோரிக்கையை ஏற்று அமைச்சர் குணரட்ண வீரக்கோன் உடனடியாக ஜனாதிபதியிடம் பேசி 45 மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களையும் உணவு வகைகளையும் வழங்கினார். இப் பணியில் நாங்களும் அமைச்சருடன் இணைந்து செயற்பட்டோம். மீளக் குடியேற்றம் என்பது பேச்சளவில் மட்டுமே. போர் முடிந்து 30 மாதங்களுக்கு மேலாகி விட்டன. உயர் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பைக் கூட இராணுவம் ஏற்பதாக இல்லை. சம்பூரில் இன்னும் ஐயாயிரம் குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டு வசிப்பிடம் இல்லாமல் வீதியில் விடப்பட்டுள்ளன.

வலி வடக்கு வசாவிளான், மாதகல் போன்ற பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இராணுவம் மக்களை அங்கு செல்ல விடாமல் தடுக்கிறது. 34 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள், பாடசாலைகள், கோயில்கள், அரச கட்டடங்கள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

அங்கு பரம்பரையாக வாழ்ந்த தமிழ் மக்களை செல்ல விடாமல் தடுக்கும் இராணுவம் தென் பகுதியில் இருந்து வரும் உல்லாசப் பயணிகள் தங்கும் மடங்களையும், விடுதிகளையும் எழுப்புகின்றது. நாம் உண்மை நிலைமைகளைக் கூறினால் நாம் இராணுவத்துக்கு எதிராகப் பேசுகின்றோம் என நேற்று அமைச்சர் இந்த சபையில் கூறி உள்ளார். அவருக்கு நான் சவால் விடுகிறேன். எங்களுடன் வாருங்கள், உண்மை நிலையை நேரில் பார்த்து விட்டு பேசுங்கள், தனிப்பட இராணுவமும் உங்கள் அதிகாரிகளும் தரும் தரவுகளை வைத்துக்கொண்டு சபையை தவறான வழியில் இட்டுச் செல்லாதீர்கள். வரவு - செலவுத் திட்டத்தில் எந்த விதமான அபிவிருத்திகான திட்டமும் இல்லை.

வடக்கில் ஐயாயிரம் பட்டதாரிகளும் கிழக்கில் மூவாயிரம் பட்டதாரிகளும் மலையகத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகளும் வேலை வாய்ப்பின்றி இருக்கின்றனர். அவர்கள் பெற்ற பட்டங்களுக்கு அமைவான தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்த வேண்டும். கிழக்கு மாகாணத்தில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி விட்டோம் என்று அடிக்கடி இந்த சபையில் கூறுகின்றீர்கள். அப்படியானால் 2012 ஜனவரியில் கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படவிருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் பிற்போட்டமை ஏன்? இதுதான் உங்களுடைய ஜனநாயகமா?- என்றும் மாவை சேனாதிராசா தெரிவித்தார். (உ-02)

**சுகவாழ்வுக்கான பயணம்**

**வேலைவாய்ப்பு**

எமது நிறுவனத்தின் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்ட உத்தியோகத்தர்கள் தேவை.

தகைமை: G.C.E A/L சித்தி, .computer அறிவு

அலுவலக வேலை, கள வேலை இரண்டும் ஆற்றுதல் வேண்டும்.

உரிய ஆவணங்களுடன் 26.12.2011 திங்கள் மு.ப. 10.30 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

அன்னசத்திர லேன், பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தொ.பே.இல: 0213216436

## 2, 3 வருடங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் நடத்தப்பட்ட பேச்சை விட வித்தியாசமாக இருக்கிறது. புலிகளை விட இவர்கள் கடும்போக்குக் கொள்கையுடன் இருக்கின்றனர். திம்பு பேச்சிலிருந்து போர்நிறுத்த ஒப்பந்தம்வரை புலிகள் நாடகமாடினர். குண்டுவெடித்த போதும், சண்டைகள் நடந்தபோதும் திரைமறைவிலிருந்து புலிகள் செயற்பட்டாலும் ஆட்சியாளர்களுடன் அடிக்கடி பேச்சுகளில் ஈடுபட்டு வந்தனர். ஆனால், கூட்டமைப்பினர் அப்படியல்ல. புலிகளிலும் பார்க்க மோசமாக இருக்கின்றனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பது அவர்களுக்கு சரியான களம். இது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், கூட்டமைப்பிற்குமான பிரச்சினை அல்ல. இது தேசிய பிரச்சினை. இதனைப் பகிரங்கமாகப் பேசவேண்டும். தெரிவுக்குழுவிற்கு சென்று இருதரப்பும் பேசவேண்டும். இந்த நிலைமை தொடர்ந்தால் மக்கள் கூட்டமைப்பை ஒரு காலத்தில் வெறுப்பார்கள்.

நிபந்தனைகளை .எவரும் முன்வைத்தால் தீர்வுப்பேச்சு வெறும் பேச்சாக மாறிவிடும். கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்க தமிழ் ஊடகங்கள் வலியுறுத்தவேண்டும். பேச்சில் முறையாக ஈடுபடாவிட்டால் கூட்டமைப்பு தமிழருக்குத் தீர்வு தேவையில்லையெனக் கருதுகிறதா? தீர்வு கிடைத்துவிட்டால் தங்களால் அரசியல் நடத்தமுடியாதெனக் கருதுகிறதா? அல்லது தங்களால்தான் தீர்வு கிடைத்தது, தீர்வு கிடைப்பதற்குத் தாமே ஒத்துழைத்தார்களென கூறிக்கொள்வதற்கா இப்படிக் கூட்டமைப்பு இழுத்தடிப்பு செய்கிறது? தமிழரின் ஏக பிரதிநிதிகள் தாமே என்று புலிகள் கூறினர். ஆனால், தாமே ஏக பிரதிநிதிகள் போல் கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர். கடந்த தேர்தல்களைப் பாருங்கள். வடக்கில் கூட்டமைப்பினரைவிட அதிகமான வாக்குவீதம் தேசியக் கட்சிகளுக்கே கிடைத்தன.

குறைந்தபட்சம் அபிவிருத்தித் திட்டங்களில் கூட எம்முடன் ஒத்துழைக்க கூட்டமைப்பினர் மறுக்கின்றனர். எமது அபிவிருத்திக் கூட்டங்களில் கலந்துகொள்ள கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்குக்கூட அனுமதி இல்லை. அப்படி அவர்கள் வந்தால் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள். ஹக்கீம், தொண்டமானை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள் தமது மக்களுக்கு சேவையாற்ற அரசுடன் இணைந்து செயற்படவில்லையா? தேர்தல் காலங்களில் அவர்கள் தமது கொள்கைகளை முன்வைத்து மக்களிடம் செல்கின்றனர்.

கூட்டமைப்பு அரசுடன் இணையமுடியாவிட்டாலும் மக்களுக்கு சேவையாற்ற இணக்கமாக செயற்படலாமல்லவா? குறைந்தபட்சம் 2,3 வருடங்களுக்காவது அரசுடன் ஒத்துழைத்துச் செயற்பட்டு மக்களின் வாழ்வில் விமோசனத்தை ஏற்படுத்த முன்வாருங்கள்.

கடந்த காலங்களில் தமிழ் அரசியல் தலைவர்மார் நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதங்களில் ஆற்றிய உரைகளை நான் பார்த்தேன். அந்தந்த அமைச்சுகள் பற்றி சரியான விமர்சனங்களை முன்வைத்தனர். ஆனால், இன்றைய கூட்மைப்பு எம்.பிக்களைப் பாருங்கள். விளையாட்டுத்துறை அமைச்சு விவாதத்தில் குற்றவிசாரணை பற்றியும், விவசாய அமைச்சு விவாதத்தில் கொள்கைகள் பற்றியும், பொருளாதார அமைச்சு விவாதத்தில் வேறு விடயங்கள் பற்றியும் பேசுகின்றனர். இது கவலைக்குரியது.

- என்றார் பஸில் ராஜபக்ஷ (ங-சி)

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



அமரர்

**வைரமுத்து துரைராசா**

(யோகம் அரைக்கும் ஆலை,
மலர் அலைக்கும் ஆலை
T.Y. வெல்டிங் சென்ரர்-உரிமையாளர்)

மண்ணில் 02 - 11 -1940
விண்ணில் 22 -11- 2011

*எமது அன்புத் தெய்வம்*
*மறைந்து நாள்கள் 31 ஆனாலும்*
*எம் மனத்தில் நினைவுகள்*
*மாறாதையா.*

*என்றும் உம் நினைவில்*

யோகமகால், நெல்லியடி வடக்கு,
கரவெட்டி.

**குடும்பத்தினர்.**

**மரண அறிவித்தல்**



*தனபாலசிங்கம் மாலா*

நயினாதீவு 05ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புகையிரதவீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் மாலா நேற்று (21.12.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வகுமார் மற்றும் வசந்தகுமார், பிறேமா, சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.22, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகாமை)

தகவல்:
திருமதி தனபாலசிங்கம் யோகாம்பிகை (தாய்).



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலைப்பீடம்.

## ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
## Media Resource Training Center (MRTC)

# இதழியல் டிப்ளோமா

(முழுநேரம் - இரண்டு ஆண்டுகள்)

**கல்வியாண்டு - 2012/2014**

Diploma in Journalism-2012/2014

**பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்கான, 2012/2014 ஆண்டுக்கான, புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியானவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.
விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் க.பொ.த. உயர்தர பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**

- அச்சு ஊடகம்
- இலத்திரனியல் ஊடகம்
- இணைய ஊடகம்



**பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்**

- செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
- றோடியோ மற்றும் ரி.வி. நிகழ்ச்சித் தயாரிப்பு
- ஊடக நிறுவனங்களில் செயல்முறைப் பயிற்சி
- சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
- ஆவணப் படத் தயாரிப்பு

**அனுமதிக்கான தெரிவு முறை**

எழுத்துத் தேர்வும்
[எழுத்து ஆற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு]
நேர்முகத் தேர்வும்

**கற்கைக் காலம்** 2 ஆண்டுகள் [முழுநேரம்]

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 31.12.2011**

**கட்டணங்கள்**

| | |
|---|---|
| கற்கைநெறிக்கட்டணம் | ரூபா 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா 750.00 |
| நூலக வைப்புப்பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூபா 750.00 |
| நூலக பயன்பாடு | ரூபா 1,000.00 |
| மொத்தம் | ரூபா 22,500.00 |

விண்ணப்பப் படிவங்களை இல.84, ஜும்மா பள்ளி வாசல் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ரூ. 100/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.பூரணப் படுத்தப்பட்ட விண் ணப்பப் படிவங்களை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத் துக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபா லிலோ அனுப்பி வைக்க வேண்டும்



மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:
021 222 9873

பதிவாளர்.
14.12.2011

## 'பேஸ்புக்' கட்டுப்பாட்டு சட்டம் வெகுவிரைவில்

'பேஸ்புக்' உட்பட சமூக வலையமைப்பு இணையத்தளங்களில் தொடர்பில் இலங்கையில் கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையில் சட்டங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

சமூக வலையமைப்பு இணையத் தளங்களில் இடம் பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர்களுக்குப் பொருத்தமற்ற விடயங்களை இலங்கையில் பார்வையிட முடியாதபடி சில கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையில் சட்டங்களைக் கொண்டு வரவுள்ளதாகச் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்ட செயற்பாட்டுக்கு என அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

## உடனடி வேலைவாய்ப்பு

பொறியியல் சேவைகளை வழங்கும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பணிகளுக்கு பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்

1. களஞ்சியக் காப்பாளர் : கல்வித்தகைமைகள் க.பொ.த (உ.த)
   - கட்டடப்பொருட்கள், மின்சாரப் பொருட்கள், ஊர்தி உதிரிப்பாகங்கள் தொடர்பான களஞ்சியத்தில் 2 வருடங்கள் பணியாற்றிய அனுபவம் வேண்டும். கணனியில் வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
   - வயது: 25-35
   - சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
2. காசாளர்
   - : கல்வித்தகைமைகள் க.பொ.த (உ.த)
   - காசாளராக கடமையாற்றிய அனுபம் வேண்டும்.
   - கணினியில் வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
   - வயது: 25-35
   - சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
3. முகாமையாளர் : கல்வித்தகைமை
   - க.பொ.த(உ.த) வர்த்தகம்
   - உ.தே.க.டிப்லோமா (HNDA)
   - குறைந்தது 3 வருடங்களுக்கு வேறு நிறுவனங்களில் முகாமையாளராக கடமையாற்றிய அனுபம்.
   - வயது: 30-40
   - கணினியில் வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
   - சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

நேர்முகப்பரீட்சை கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் 22,23-12-2011 ஆகிய நாட்களில் காலை 9.00-12.00 மணிவரையும் நடைபெறும். சுயவிபரம், சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**லக்ஷ்மி என்ஜினியரிங்,**
105, ராசபாதை, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

முகாமையாளர்.

## SAAMSON ENGLISH 3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி

நேரடியாக மாணவர்களை உரையாடல் பயிற்சியில் (Work Shop) ஈடுபடுத்துவதன் மூலம் 3 மாதத்துக்குள் எந்த வயதினரையும் சரளமாக ஆங்கிலத்தில் பேசப் பயிற்சியளிக்கும் Saamson English நிறுவனத்தின்.....

**புதிய பயிற்சிப்பட்டறைகள் ஆரம்பம்.**

சனி, ஞாயிறு பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பிரிவு I | 8 - 10 | பிரிவு III | 01 - 03 |
| பிரிவு II | 10 - 12 | பிரிவு IV | 03 - 05 |

25.12.2011 இற்கு முன் பதிவு செய்வோருக்கு கட்டணம் ரூபா 3,000.00 பின்னர் 6,500.00

ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

(11938)(5.6)

**SAAMSON ENGLISH**
279, மணிக்கூட்டு வீதி, யாழ்.
(ஆஸ்பத்திரி பின்புறம்)
TEL: 0776214567

# NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.

2014 A/L

CHEMISTRY

By
S. DIAS

ஆரம்பம்: 28.12.2011
Tuesday 3.00 p.m.

(C/7120)(5.6)

வன்னிப் பகுதியில் 'உதயன்' வாசகர்களுக்காகச் சேவையாற்றி வருகிறது வன்னிப்பணிமனை.
உங்கள் விளம்பரங்கள், செய்திகள் என்பவற்றைப் பிரசுரிக்க நாடுங்கள்...

'உதயன்' வன்னிப் பணிமனை
(புனித தெரேசா பாடசாலை முன்பாக)
கரடிப்போக்கு சந்தி,
கிளிநொச்சி.

**விசேட கருத்தரங்கு**

இலங்கை திறந்த பல்கலைக்கழக
சட்டமாணி கற்கை
தெரிவு பரீட்சைக்கான புதிய பிரிவு

வெள்ளி (23.12), திங்கள் (26.12), செவ்வாய் (27.12) தினங்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை.
விரிவுரையாளர்கள் த.தவசேகர், செந்தில்குமரன்.
கட்டணம்: 1000/=

D.M.I ஆரியகுளம் சந்தி.

# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.

2014 A/L

❖ கணித, உயிரியல் பிரிவு ❖
❖ எமது வழமையான ஆசிரியர் குழு ❖

ஆரம்பம்:
28.12.2011
புதன் காலை 8.30 மணி.

(C/7119)(5.6)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.